GOKULAM செப்டெம்பர் '96 ரூ. 5.00

கோகுலம்





NEW AMAR CHITRA KATHA

The Gita Shiv Parvati Bhagat Singh Ravan Humbled	Nala Damyanti Friends & Foes (Animal Tales From the Mahabharata)

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these. I promise to accept the V.P. every month.

NAME ______________________

ADDRESS ______________________

____

POST OFFICE ____________ PIN CODE ____________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

Diamond Horoscope 1997 (Forcast & Weekly Predictions for each Rashi Datewise for you) Price Per Rashi Rs. 15/-

DIAMOND COMICS Welcome you at 'Delhi Book Fair' Pragati Maidan from 10th Aug. to 18 Aug. 1996

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

STRIBUTORS : **Madras** : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd (Branches Madurai & Coimbatore yderabad : • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore** : Sapna Book Stall, Gandhi Nagar, A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut** : Remami Agencies P.O. Arakinar Calicut Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut

கோகுலம்

1996
செப்டெம்பர்
மலர் : 14
இதழ் : 7





உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,


அனைவருக்கும் அன்பு வணக்கம். புவனா தேடிய புதையலைப் பாராட்டி எத்தனை கடிதங்கள்! திருச்சியில் இருந்து மொத்தமாகக் கையெழுத்திட்டு பாராட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள்! பாளையங்கோட்டையிலிருந்து, தமிழ் தெரியாத குடும்பத்துக் குழந்தைகள், தொடர்கதைக்கு வெளியான மணியம் செல்வனின் ஓவியங்களுக்காக கோகுலத்தை வாங்கி, அக்கம் பக்கத்தாரிடம் படிக்கச் சொல்லிக் கேட்டேன் என்று எழுதியிருக்கிறார்கள். கோகுலம் படைத்துள்ள மறக்க முடியாத கதை மாந்தர் பட்டியலில் புவனாவும் சேர்ந்து நம்மிடம் பிரியாவிடைபெற்று விட்டாள்! ஏற்கெனவே உங்களுக்காக 'மலைக்கோட்டை மர்மம்' தொடர்கதையைத் தந்து பாராட்டுப் பெற்றுள்ள வி. ர. வசந்தன்தான் இந்த இதழில் ஆரம்பமாகியுள்ள "உதயன் எங்கே?"வைப் படைத்திருக்கிறார். முதல் அத்தியாயத்திலேயே கதை சூடுபிடித்து விட்டது!

"நான் பிளஸ்டூ பாஸ் பண்ணி விட்டேன். மேற்கொண்டு என்ன படிப்பது? எனக்கு சினிமாவில் நடிக்க ஆசை! என்ன செய்ய வேண்டும்?" என்றெல்லாம் சேரநம்பிக்குக் கேள்விகள் அனுப்பப் படுகின்றன. "கேளுங்கள் சொல்லப்படும்" பகுதியில் இந்த மாதிரிக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல இயலாது. உங்கள் அறிவு வளர்ச்சிக்கு உதவும் வினாக்களுக்கு மட்டுமே சேரநம்பியால் பதிலளிக்க இயலுமே தவிர, இம்மாதிரி உயர்க் கல்வி படிப்பு, தொழில்முறைப் படிப்புக்கு எல்லாம் உதவக்கூடிய தகவல்களைக் கோகுலத்தில் தர இயலாது. இதற்கு என எத்தனையோ பத்திரிகைகள் இருக்கின்றன. அவைகளுக்கு எழுதிக் கேட்கலாம்.

அதிக அளவுக்குக் கேள்விகள், பாடல்கள் கோகுலத்திற்கு வருகின்றன. நல்லவைகளுக்கு கோகுலத்தில் கண்டிப்பாக இடம் உண்டு.

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு வந்த சிறுகதைகள் பரிசிலனையில் உள்ளன. ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் கோகுலத்தின் அன்பான ஆசிரியர் திருநாள் வாழ்த்துகள்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



அன்புடன்
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்
1996 செப்டெம்பர்

இந்த இதழில்.....

அறிவியல்

* நீர் நாய் குரைக்குமா? 69
* கேளுங்கள் சொல்லப்படும் 74
* கேட்கட்டுமா டாக்டர்? 62

தொடர்கதை

* உதயன் எங்கே? 50

மூளைக்கு வேலை

* நிலவு முகப் பொம்மை 47
* பாரதியார் போட்டி 73
* எத்தனை பொருள்கள்? – போட்டி முடிவு 95

வண்ணப்படக்கதை


* மழைக்கு வரி போட்ட மன்னன்! 33

நாடகம்

* கொழுக்கட்டை வாழ்க! 23

கதைகள்

* பீர்பால் என்றால் பீர்பால்தான்! 4
* அன்புள்ள அக்கா! 7
* மேசை தடையா? 11
* உ.மு.ஜா.சே! 17
* ஆட வந்த பேய்! 65
* நிறைய உடையவர்கள்! 81



* நிலவு முகப் பொம்மை பக்கம் 47

* மழைக்கு வரி போட்ட மன்னன்! - பக்கம் 33



* நீர் நாய் குரைக்குமா? பக்கம் 69



* என்ன காரணம்? 85
* உன்கிட்டே இருக்கா? 88
* உங்க சொத்தா? 92

பாடல்கள்

* நெல்லிக்காய் 54
* எய்துவோம் மாட்சி! 57




• கொழுக்கட்டை வாழ்க! பக்கம் 23

வாசகர் பக்கம்

* பிருந்தாவனக் கவியரங்கம் 15
* எங்கள் ஊரில் நடந்தவை 28
* கோடை விடுமுறையைக் கழித்தேன் 78
* சார் தபால் 96

பேட்டி

* சித்திரங்களை சீசாக்குள் சிறைவைக்கும் சிறுவன்! 59



ஆட வந்த பேய்! - பக்கம் 65

பெரியோர் வாழ்க்கை

* வண்டி இழுத்த மாணவர்கள்! 32

மற்றவை

* அருமைச் சிறுவர் சிறுமியரே
* இந்த இதழில் 1
* சிரிப் 56
* பட்டுப் பட்டுப் பூக்கள், பார்க்கப் பார்க்க அழகு! – 58

காஞ்சி தந்த தலைவர்!

தமிழ்மொழி ஆங்கிலம் இரண்டிலுமே
தனித்திறம் கண்ட தலைவர் அவர்
அமிழ்தெனச் சொல்மழை பொழிந்திடவே
ஆற்றலைக் கொண்ட அறிஞர் அவர்

எதுகை மோனை அழகுடனே
இனிதாய்க் கட்டுரை எழுதியவர்
புதுமை கமழும் கதை பலவும்
போற்றிடும் வண்ணம் இயற்றியவர்


வந்தனை கூறும் வகையினிலே
மனம்கவர் நாடகம் ஆக்கியவர்
சிந்தனை தூண்டும் சிறப்புடனே
திரைக்கதை வசனம் தீட்டியவர்

தந்தை பெரியார் வழிநடந்த
தன்னிக ரில்லா மாமனிதர்
முந்தையர் வாழ்வில் வேர்பிடித்த
மூடக் கொள்கையைச் சாடியவர்


தமதரும் வாழ்வைப் பொதுப்பணிக்கே
தந்து மகிழ்ந்த தீரர் அவர்
சமூகம் தன்னைச் சீர்திருத்த
சங்கென முழங்கிய சிங்கம் அவர்

பாயிரப் பெருமை பெற்றிலங்கும்
பழம்பெரும் காஞ்சியின் புதல்வர் அவர்
ஆயிரம் ஆயிரம் தம்பிகளின்
அன்பினுக் குரிய அண்ணன் அவர்

– 'புவனை கலைச்செழியன்'



பீர்பால் என்றால் பீர்பால்தான்!



பேரரசர் அக்பருடைய அவை கூடியிருந்தது. அவை மண்டபத்தில் அமைச்சர், அதிகாரிகள், அவைப்புலவர் அனைவரும் விற்றிருந்தனர். பேரரசர் அக்பர் பேச ஆரம்பித்தார்.

"அறிவுசால் அறிஞர் பெருமக்களே! நேற்று மாலை அரண்மனைத் தோட்டத்தில் தனிமையில் உலாவும் போது என் மனத்தில் ஓர் ஐயம் தோன்றியது. பூக்களில் சிறந்த பூ எது? உலகில் ஆயிரக்கணக்கான மலர்கள் இருக்கின்றன. சில வண்ணத்தால் சிறந்தவை. சில மென்மையால் சிறந்தவை. சில வடிவத்தினால் சிறந்தவை. இத்தனை ஆயிரம் மலர்களில் தலைசிறந்த; உயர்ந்த மலர் எதுவாக இருக்கக்கூடும் என்பதே அந்த ஐயம். இதற்கு உரிய பதிலை உங்களில் யாரேனும் கூற முடியுமா?" என்று கேட்டார் அக்பர்.

சிறிது கூடத் தயக்கம் இல்லாமல் உடனே எழுந்தார் அவையின் பெரும் புலவர் ஒருவர். "அரசே! பூக்களில் சிறந்தது தாமரைப் பூ. அருணோதய வேளையில் மலரும் மலர் இது. அறிவுக் கடாட்சம் தரும் இலக்குமியின் இருப்பிடம்




தாமரை. ஆதலால் மலர்களில் தலைசிறந்தது தாமரையே!" என்றார் புலவர்.

அடுத்ததாக, மன்னர் படையின் தளபதி எழுந்தார். "மன்னர் பெருமானே! பூக்களில் சிறந்தது ரோஜா.

எஸ். குழந்தைசாமி

வண்ணம். மென்மை, மணம் என்று எந்தவிதத்தில் பார்த்தாலும் அதன் தனிச் சிறப்பு புலப்படும். ரோஜா மலரே, பூக்களின் ராஜா. இதில் என்ன சந்தேகம்?" என்று ஒரு கேள்விக்குறியுடன் அமர்ந்தார் தளபதி.

இப்போது அமைச்சர் பேசத் தொடங்கினார். "மகாராஜா, நிலவின்



''எங்கப்பாகூட மந்திரி''யார் தாண்டா.

''மந்திரியாரா? என்ன மந்திரியார்!''

''பேய் பிடிச்ச ஆளுகளுக்கு கோவில்ல மந்திரிக்கிற மந்திரியார்தான்!''

– நெற்குப்பை கி. மனோகரன்

குளிர்ச்சியில் கண்விழிக்கும் மலர் அல்லி. நிலவொளியில் அல்லித் தடாகம் அற்புதக் காட்சி. அர்ச்சனைக்குரிய மலர்களில் இதுவும் ஒன்று. எனவே, அல்லியே தலைசிறந்த மலர்.''

எல்லோருடைய கருத்துகளையும் பொறுமையுடன் கேட்டார் அக்பர். அவர் பீர்பாலை நோக்கினார். எல்லோரும் தங்கள் கருத்துக்களைத் தாங்களே கூற முன்வந்த போது அவர் மட்டும் பேசாமல் இருந்தது அக்பரின் மனதில் திகைப்பை ஏற்படுத்தியது. நிறைகுடம் அல்லவா அவர்?

''பீர்பால்! நீங்கள் உங்கள் கருத்தைக் கூறவில்லையே! மலர்களில் தலைசிறந்த மலர் எது? உங்கள் முடிவு என்ன?'' என்று கேட்டார் மன்னர்.

''அரசே! என்னை மன்னிக்க வேண்டும். பாதுஷா அவர்களும் இவர்களெல்லோரும் கூறிய கருத்தில் இருந்து நான் மாறுபடுகிறேன். பூக்களில் தலைசிறந்தது பருத்திப் பூவே. இதுதான் என் கருத்து.''

இப்படி பீர்பால் சொல்லி முடித்த உடனேயே சபையில் இருந்த அனைவரும் பரிகாசச் சிரிப்பைச் சிதற விட்டனர்.

சபையே நகைக்கும்படி பீர்பாலின் பதில் அமைந்து விட்டதே என்று மன்னருக்கும் உள்ளூர வருத்தம்தான். இருந்தாலும் பீர்பாலின் அணுகுமுறை எப்பொழுதுமே மாறுபட்டது என்பதை உணர்ந்திருந்தார் மன்னர்.

''பீர்பால்! உங்கள் முடிவை நான் குறைகூறவில்லை. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இருக்கும். அதை அறியத்தானே நான் எல்லோர் கருத்தையும் கேட்டேன்? மலர்களில் தலைசிறந்தது பருத்திப் பூவே என்ற உங்கள் முடிவுக்கு என்ன காரணம்? அதைக் கூறுங்கள்?''

மன்னரின் குரலில் கட்டளையை விட ஆவலே அதிகம் இருந்தது.

''மன்னா, தாமரை அறிவுக் கடாட்சத்தைத் தருகிறது. ரோஜா, மென்மை, மணம், வண்ணம் எல்லாம் நிறைந்தது. சந்தேகமே இல்லை. அல்லி குளுமையானதுதான். யாராலும் மறுக்க முடியாது. ஆனால் இத்தனை சிறப்புக்களையும் உடைய இவை மனிதனின் இன்றியமையாத தேவை எதையுமே பூர்த்தி செய்யக்கூடியவை அல்ல.''

எல்லோரும் பீர்பாலை வியப்புடன் நோக்கினர்.

''மனிதனின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகள் மூன்று. உணவு, உடை, உறைவிடம் ஆகியவையே அந்த மூன்று. தாமரை, ரோஜா, அல்லி ஆகிய இந்த மூன்றும் இவைகளுள் ஒன்றைக் கூடத் தர இயலாதவை. ஆனால் பருத்திப் பூ, மனிதனுக்குத் தேவைப்படும் மூன்று அடிப்படைகளில் ஒன்றான உடையைத் தயாரிக்க உதவுகிறது. தாமரை இல்லையேல் வாழலாம்; ரோஜா இல்லை என்றாலும் வாழலாம்; அல்லி இல்லையேல் என்றாலும் கூட உயிர் வாழலாம். ஆனால், மனிதனின் மானங்காக்கும் உடையைத் தந்து உதவும் பருத்திப் பூ இல்லையேல், மனிதகுலம் என்னவாகும் என்பதை எண்ணிப் பாருங்கள்?''

பேரரசர் அக்பர் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் பீர்பாலை நோக்கினார். பீர்பால் என்றால் பீர்பால்தான்!

அன்புள்ள அக்கா!

நாகூர் ஆர். லோகநாதன்



மாலினி பிளஸ் டூ படிக்கும் மாணவி.

நேற்றுத்தான் தன் இறுதித் தேர்வுகளை முடித்திருந்தாள். இஞ்சினியரிங் படிப்பில் சேர விருப்பம். அதற்கான நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பித்திருந்தாள். அடுத்த மாதம் நுழைவுத் தேர்வு. அதற்கு "கோச்சிங்" பெற வேண்டும்.

"கோச்சிங் சென்டர்" நாகூரில் இல்லை. பக்கத்து ஊர்களில் உள்ள கோச்சிங் சென்டர்களும் அவ்வளவு சிறப்பானதாக இல்லை. தஞ்சைக்குத்தான் செல்ல வேண்டும். அங்குதான் நல்ல கோச்சிங் சென்டர்கள் உள்ளன.

ஒரு மாதம் ஹாஸ்டலில் தங்கிப் படிக்க வேண்டும். அதற்கு வேண்டிய துணி மணிகளைப் பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

"சீக்கிரம் கிளம்பு" என்று அவசரப்படுத்தினார் அப்பா. மாலினி பெட்டியை மூடினாள். அம்மாவிடம் வந்தாள்.

"அம்மா... நான் போயிட்டு வர்ரேம்மா!"

"நல்லபடி பத்திரமா இருடி!"

தம்பியிடம் சென்றாள் மாலினி. அவன் படித்துக் கொண்டிருந்தான்.

"தியாகு!"

"என்ன?" - அலட்சியமாய் நிமிர்ந்தான் தம்பி.

"நான் போயிட்டு வர்ரேன்டா!"

"சரி... போய் ஒழி! ஒரு மாசம் நிம்மதியா இருப்பேன்."

அப்பாவுடன் மாலினி புறப்பட்டு விட்டாள்.

மறுநாள் காலை. தியாகு பள்ளிக்குத் தயாராகிக் கொண்டிருந்தான்.

பென்சில் சீவினான். உடைந்து உடைந்து போனது. வெறுத்துப் போனான்.

"அம்மா!"

"என்னடா?"

"இந்தப் பென்சிலை சீவிக் குடேன்!"

"வயசுதான் ஆகிக்கிட்டே போகுது... பென்சில சீவக் கூடத் தெரியல! ஒம்பதாவது படிக்கிறானாம்!"

திட்டிக் கொண்டே அம்மா பென் சிலை வாங்கினாள். சீவினாள். உடைந்து போனது.

"ஐயோ அம்மா! எனக்கு பள்ளிக்கு நேரமாகுது!"

"இருடா." - மீண்டும் அம்மா சீவினாள். மீண்டும் உடைந்து உடைந்து போனது. தியாகு தவித்தான்.

"சரி.. சரி இரு."

அம்மா உள்ளே சென்றாள். ஒரு பிளாஸ்டிக் பெட்டியை எடுத்து வந்து திறந்தாள்.

பென்சில், பேனா, ரப்பர் எல்லாம் இருந்தன.

"மாலினியோடதுதான்... உனக்குத் தேவைப்படுமேன்னு குடுத்துட்டுப் போனா..."

மனைக்குள் அக்கா மாலினி வந்தாள்.

அன்று மாலினி அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

"அக்கா!" - தியாகுதான் கூப்பிட்டான்.

"என்ன?" - திரும்பினாள் மாலினி.

"இந்தப் பென்சில்களை சீவித்தா." தியாகு மாலினிக்கு முன்னால் பென்சில் களைத் தூக்கிப் போட்டான்.

"எனக்கு நேரமாச்சு... நீயே சீவிக்க...." முதலில் மறுத்தாலும், இருந்து சீவித் தந்து விட்டே நகர்ந்தாள் மாலினி. இரண்டு பென்சில்கள்.

"தியாகு! என்னோட பென்சிலைக் காணோம்! இன்னிக்கு மட்டும் உன்னோட பென்சிலில் ஒண்ணு தாடா!"

"முடியாது! ரெண்டு பென்சிலும் எனக்கு இன்னிக்கு வேணும்!" - அக்கா விடமிருந்து பிடுங்கிக் கொண்டான்.

"டேய்... டேய்... ரெண்டு பென்சில் வச்சிருக்கியே! ஒண்ணு மட்டும், இன்னிக்கு மட்டும் தாடா... நாளைக்கு புதுசு வாங்கினதும் திருப்பித் தந்திடறேன்."

"அதெல்லாம் முடியாது! நீ வேணா புதுசு

வாங்கிக்க! தர முடியாதுன்னா முடியாது தான்."

அம்மா தியாகுவுக்கு சப்போர்ட்டுக்கு வந்தாள்.

"அவன்தான் தர முடியாதுன்னு சொல்றானில்லை? நீ உன் தோழிங்க யார்கிட்டேயாவது வாங்கிக்கயேன்?"

"ஆமா, கூடப் பிறந்த தம்பி. இரண்டு பென்சில்ல ஒண்ணு தர மாட்டான். கூட இருக்கும் சிநேகிதி மட்டும் தரணும்? தூக்கி வச்சி கொண்டாடரதாலதான் இப்படி இருக்கான்."

பழிப்புக் காட்டிவிட்டுப் போய் விட்டாள் மாலினி.

'டேய் தியாகு... ஸ்கூலுக்கு லேட்டாச் சுன்னு சொன்னே...! இன்னும் ஏன் இங்கேயே மலைச்சுப் போய் நின்னுகிட் டிருக்கே?" - அம்மாதான் பின்னால் இருந்து சத்தம் போட்டாள். நினைவுகளில் இருந்து மீண்டான் தியாகு.

"நான் போயிட்டு வர்ரேம்மா!" - போய் விட்டான்.

அக்கா ஊருக்குப் போய் பத்து நாட்களாகி விட்டன, இன்னொருநாள்.

தியாகு ஸ்கூலுக்குக் கிளம்பினான். சைக்கிளைப் பார்த்தவன் அதிர்ந்தான்.

காற்று சுத்தமாக இல்லை. 'என்ன



செய்வது?' தள்ளிக் கொண்டு போகலாம். சைக்கிள் கடையில் போய்க் காற்றடித்துக் கொள்ளலாம். ஆனால், சைக்கிள் கடை பக்கத்தில் இல்லை. வேறு வழியே இல்லை. நடந்தேதான் போயாகணும். நண்பர்கள் யாராவது சைக்கிளில் வருவார்கள். ஏறிக் கொள்ளலாம்.

நடந்து போகத் தியாகு தயாரானான்.

அம்மா கூப்பிட்டாள். "தியாகு!"

"என்னம்மா?"

"ஏண்டா நடந்து போற?"

''சைக்கிள்ல காத்து இல்லம்மா!''

''ஏன், மாலினியோட சைக்கிளை எடுத்திட்டுப் போறது தானே?''



"அக்காதான் அவ சைக்கிளைத் தொடக் கூடக் கூடாதுன்னு சொல்லி இருக்காளே? அதுமட்டுமில்லாம சைக்கிள் சாவியையும் எடுத்திட்டுப் போயிருப்பாளே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. என் கிட்ட சாவியைத் தந்திட்டுதான் போனா... தம்பிக்குத் தேவைப்பட்டா 'கொடு'ன்னு சொன்னா."

அம்மா சாவியைத் தந்தாள்.

அக்காவின் சைக்கிளை வைத்துக் கொண்டு தியாகு புறப்பட்டான். மனசுக்குள் பழைய சம்பவம் நிழலாடியது. தியாகு ஸ்கூலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். அக்கா வந்தாள்.

'தியாகு! என்னோட சைக்கிள் பஞ்சர் ஆகிக் கடையில இருக்குடா... இன்னிக்கு மட்டும் உன்னோட சைக்கிள்ல ஏத்திட்டு போடா!"

"ம்ஹூம்... முடியாது!"

சைக்கிளில் ஏறி அமர்ந்தான்.

"டேய்! ப்ளீஸ்டா... ஸ்கூலுக்கு நேரமாச்சு இன்னிக்கு மட்டும்டா?"

"அதெல்லாம் முடியாது.. நீ உன் சிநேகிதியார் கூடயாவது வா."

"எல்லாரும் இந்நேரம் போயிருப்பாங்கடா!"

"அப்ப நடந்தே வா!"

அவன் புறப்படத் தயாரானான்.

"அம்மா! அம்மா!" - அக்காதான் கூப்பிட்டாள்.

"ஏண்டி! ஏன் இப்படிக் கூப்பாடு போடற?"

அம்மா வெளியே வந்தாள்.

"அம்மா! என்னை இவன் சைக்கிள்ல அழைச்சிட்டுப் போகச் சொல்லும்மா!"

"டேய்! இவளையும்தான் ஏத்திகிட்டு போயேன்?"

"போம்மா... என்னால டபுள்ஸ் மிதிக்க முடியாது."

"தியாகு! நீ டபுள்ஸ் மிதிக்க வேணாண்டா... நீ பின்னால உக்காந்துக்க... நான் மிதிக்கறேன்."

- கெஞ்சினாள் மாலினி.

"எனக்கு நேரமாச்சு... நான் போறேன்!"

இரக்கமின்றிப் போயே போய்விட்டான் தியாகு.

பாவம் மாலினி! அன்று நடந்தே ஸ்கூலுக்குப் போனாள்.

நினைவுகளில் இருந்து மீண்டான் தியாகு.

எப்படிப்பட்ட பாசம் பொழியும் அக்காவா இருந்தா! அவளுக்கு ஏற்ற தம்பியாகவா நாம் இருந்தோம்? அவள் அருமையை இப்பொழுது அவன் உணர ஆரம்பித்தவுடன் அவளைக் காண வேண்டும் என்ற தவிப்பு எழுந்தது.

தியாகுவுக்குத் தேர்வுகள் முடிந்தன. நுழைவுத் தேர்வுக்கு இன்னும் ஒரு வாரம் இருந்தது. தியாகு அப்பாவிடம் சென்றான்.

"அப்பா! நான் தஞ்சாவூர் போய் அக்காவைப் பாத்துட்டு வறேன்."

அப்பா திகைப்போடு அவனைப் பார்த்தார். "ஒழிந்து போ!" என்று மாலினிக்கு அவன் விடை கொடுத்தது அவருக்குத் தெரியும்.

தியாகு பணம் வாங்கிக் கொண்டான். புறப்பட்டான். அவனைப் பார்த்ததும் மாலினி ஆச்சர்யப்பட்டாள்.

"தியாகு! எங்கே வந்தே?"


"அக்கா, உன்னைப் பார்ப்பதற்காகத்தான் வந்தேன். இங்கே எனக்கு வேறு வேலை என்ன இருக்கு? யாரைத் தெரியும்?"

தியாகுவின் கண்களில் பெருகி நின்ற கண்ணீர் அவன் கனிவதை உணர்த்தியது. தம்பியின் கண்ணீரைத் துடைத்தாள் மாலினி.

இரண்டு மல்யுத்த வீரர்கள் கடிதம் மூலம் நலம் விசாரித்துக் கொண்டது :

"பலம். பலமறிய அவா!"

— தேனி முருகேசன்



மேசை தேவையா?

பரிதி இரா. வேங்கடேசன்

ஆண்டுத் தேர்வை எழுதி முடித்து விட்டுச் சோர்வுடன் வீட்டுக்குள் நுழைந்தாள் அஸ்வினி. அவளுடைய சோர்வெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் மாயமாய் மறைந்தது! காரணம்? சமையல் அறையில் காணப்பட்ட புத்தம் புதிய சாப்பாட்டு மேசை. மற்றும் அதோடு இணைந்த ஆறு அழகிய 'கடைசல்' வேலை- அழகு நிறைந்த நாற்காலிகள்! அவைகளின் வரவால், வீட்டின் மதிப்பே திடீரென்று உயர்ந்து விட்டது போல் இருந்தது!

அவசரம் அவசரமாகக் காலணியைக் கழற்றி விட்டு உள்ளே வந்த அஸ்வினி அந்தப் புதிய அழகிய, சாப்பாட்டு மேசையை அகல விரிந்த கண்களோடு பார்த்தாள்; தடவி மகிழ்ந்தாள்; இப்படியும், அப்படியுமாகச் சுற்றி வந்தாள்; பளபளப்பான அதன் மேற்பரப்பில் தன் முகம் தெரிவதைக் கண்டு பேரின்பம் கொண்டாள்.

அந்த மாதிரியான ஓர் அழகான சாப்பாட்டு மேசை தங்கள் வீட்டுக்கும் வேண்டும் என்பது அஸ்வினியின் நீண்ட கால ஏக்கம். அதை வாங்க அப்பாவின் பொருளாதாரம் இடம் தராது என்பது அவள் அறிந்ததே; அதனால் அடிக்கடி கேட்டு வற்புறுத்த வில்லை. ஆனால், அவளுக்கு அந்த ஏக்கம் இருந்ததை அப்பா எப்படியோ அறிந்து கொண்டு வாங்கி வந்தும் விட்டார்! பாவம் பணத்துக்கு என்ன செய்தாரோ என்று அஸ்வினிக்கு ஒரு உறுத்தல் இருந்தது.

அப்பா வந்ததும், "அஸ்வினிக் கண்ணு, சாப்பாட்டு மேசை எப்படி இருக்கும்மா? உனக்கு மகிழ்ச்சிதானே?" என்று கேட்டார்.

"ரொம்ப நல்லா இருக்குப்பா. எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இது வந்தப்புறம் வீட்டுக்கே புதுப் பொலிவு ஏற்பட்டு விட்ட மாதிரி இருக்கு!" என்று தன் உண்மையான மகிழ்ச்சியை வெளியிட்ட அஸ்வினி, "ஏம்பா, ரொம்ப விலையாருக்குமே! பணத்துக்கு என்ன பண்ணினீங்கப்பா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"ஒரு ஆபீசருக்கு வெளிநாட்டுக்கு மாற்றலாகி விட்டது. அவர் தன்னுடைய, பீரோ, கட்டில், சாப்பாட்டு மேசை போன்றவைகளையெல்லாம் ஏதோ ஏலக் கம்பெனியில கொடுத்து ஏலம் போட ஏற்பாடு செய்கிறார்னு தெரிந்தது. என்னைப் போன்றவர்களெல்லாம் அவரிடம் போய், நாங்களே வாங்கிக்கறோம்னு கேட்டோம். சரின்னு சொல்லிட்டார். அதோட, ஒரு வருஷம் கழிச்சு அவர் விடுமுறையில் வரும்போது மொத்தமாப் பணத்தைத் தந்தால் போதும்னு சொல்லிட்டார்" என்றார் அப்பா.

அஸ்வினிக்குக் கவலையெல்லாம் பறந்தது.

சாப்பாட்டு மேசை வந்த பிறகு, வீட்டில், சாப்பிடும் முறைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

அம்மா குனிந்து நிமிர்ந்து சிரமப் படுவது போயே போய்விட்டது.



மேசைமேல் அந்தந்த வேளையில் உணவு அயிட்டங்களும் பருகும் பானங்களும் தயாராக வந்து விடும். அவரவர் வந்து வேண்டியதை எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட்டுச் செல் வார்கள்.

விடுமுறை நாட்களில் அம்மா, அப்பா, அஸ்வினி மூவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவார்கள். அவரவர்களே பரிமாறிக் கொள்வார்கள்.


ஒரு வாரம் ஓடிவிட்டது.

'அஸ்வினி, கோடை விடுமுறை விட்ட பிறகும், உனக்கு எங்கும் போகாமல் போர் அடிக்கலே?''- அப்பா திடீரென்று கேட்டதும் அஸ்வினி நிமிர்ந்து நோக்கினாள்.

"அம்மாவையும் கூட்டிக்கிட்டு கிராமத்துக்கு அத்தை வீட்டுக்குப் போய் வாயேன்?''

"நீங்க?"

''நான் எப்படிம்மா? எனக்கேது விடு முறை? நீயும் அம்மாவும் போயிட்டு ஒரு வாரம் இருந்துட்டு வாங்க."



"சரிப்பா."


"அஸ்வினி, மெய்யாலும் நீயா இப்படி உடனே சம்மதிச்சே!"

"ஏம்ப்பா எங்க தமிழ் ஆசிரியரும், அறிவியல் ஆசிரியரும் படிச்சிப் படிச்சிச் சொன்னதைக் கேட்டிருந்தா நீங்க கூட 'லீவு' போட்டுட்டு அத்தை கிராமத்துக்குப் புறப்பட்டு விடுவீங்க. நல்ல காற்று; தூய சுற்றுப்புறம்; சுவையான தண்ணீர். அதை விட இரைச்சல் இல்லாத அமைதியான சூழ்நிலை, இதெல்லாம் நகரத்தில் இல்லையாம். கிராமத்திலதான் கிடைக்கும்னு சொன்னார். இதற்காக வாவது ஒருமுறை போய்ப் பார்த்துட்டு வரலாம்னு முடிவு செய்திட்டேன்."– அஸ்வினி முடித்தாள்.

"சரி, ரெண்டு பேரும் நாளைக்கே புறப்படத் தயாராகுங்க."

பன்னிரண்டு வயது வரை கிராமம் எப்படி இருக்கும் என்பதையே எண்ணிப் பார்க்காத அஸ்வினி, இப்போது, கண்ணில் கண்ட காட்சிகளை எல்லாம் ஆவலோடு நோக்கி மன நிறைவு பெற்றாள். அத்தை வீடு எளிமையானதுதான். அங்கே உணவு, உடை போன்றவை சாதாரணமானது தான். ஆனால்,





தம்பி, காலை மாலை டிரஸ் பண்ணிக்க இங்கே வரணும்.

நான் டிரஸ் பண்ணிக்காம வெளியவே வரமாட்டேன் டாக்டர்.

- சிவபெருமாள்.

உபசரிப்பு உள்ளன்போடு இருந்தது.

அஸ்வினிக்கு மிகவும் பிடித்தது. அத்தையின் பரிவும், பாசமும், அன்பும், அனுசரணையும்தான். குடிக்கத் தண்ணீர் கொடுக்கும் போது கூட அத்தையும் மற்றவரும் வெளிப்படுத்திய பண்பு அவளை மிகவும் கவர்ந்தது.

பலகாரமோ, சாப்பாடோ அஸ்வினி விரும்புவதைவிட அதிகமாகவே சாப்பிட வைத்து விடுவார் அத்தை! ஒரு வாரம் தங்கலாம் என்று வந்தவர்கள், பத்து நாட்கள் பறந்து விட்டதை அறியவில்லை!

அழைத்துப் போக அப்பா வந்தபோதுதான் ஊர் நினைப்பே வந்தது. புறப்படும் முன், அங்கே பழகிய நண்பர் மட்டுமன்றி, தோப்பு, குளம், ஐயனார்கோவில், பிள்ளையார் கோவில் அரச மரத்தடி எல்லாவற்றிற்கும் ஒருமுறை விடை கூறுவது போலக் கண்டு விட்டே புறப்பட்டாள் அஸ்வினி.

வீட்டுக்கு வந்து, சாப்பாடு நேரம் ஆனதும் அஸ்வினி அப்பாவிடம் தயங்கியபடி வந்தாள்.

"அப்பா, இந்த சாப்பாட்டு மேசையைத் திரும்பக் கொடுத்துவிடுங்கள்" என்று அஸ்வினி கூறியதும் அப்பா திடுக்கிட்டார்!

'அஸ்வினி ஏன் இப்படிக் கூறுகிறாள்!' அப்பாவுக்குப் புரியவில்லை. அதை விசாரிக்க நேரமும் இல்லை

அப்பா, அம்மா இருவரும் சாப்பிடத் தயாராக ஒவ்வொரு அயிட்டமாகக் கொண்டு வந்து வைத்தனர். அஸ்வினி மட்டும் ஏதோ படித்துக் கொண்டிருந்தாள்.

அம்மா வழக்கப்படி சமைத்த உணவு வகைகளை, சாப்பாட்டு மேசை மேல் கொண்டு வந்து வைத்தாள். அப்பா, மூன்று பேருக்கும் தட்டைக் கொண்டு வந்து வைத்தார்.

"அஸ்வினி! வாம்மா சாப்பிட?"- அப்பாதான் அழைத்தார்.

"நான் வரல்லே"- தரையில் மல்லாந்து படுத்தபடி அஸ்வினியின் பதில் வந்தது.

"ஏண்டி, இன்னிக்கு என்ன வந்தது உனக்கு? காலையிலேயும் டிபன் வேணாம்னு சொல்லிட்டே! காபியும் பிடிக்கலேன்னுட்டே?"- அம்மா பொருமினாள்.

"காலையிலே கூட எதுவும் சாப்பிடலையா! ஏம்மா! நீ பசி தாங்கவே மாட்டாயே! என்ன ஆச்சு!?" என்றபடி அஸ்வினியிடம் வந்தார் அப்பா.

"அப்பா, நான் சாப்பிடணும்னா ஒரு நிபந்தனை. சரின்னு சொன்னா சாப்பிட வரேன்" -அமைதியாக, ஆனால் உறுதியாகச் சொன்னாள் அஸ்வினி.

"சரி. என்ன நிபந்தனை! உனக்கு என்ன வேணும்?"- அப்பா கேட்டார்.

"எனக்கு அன்பு வேணும். அதுவும் அம்மாவே சாப்பாட்டை அன்பா பரிமாறணும். நான் ஆசையோட சாப்பிடணும். ஊரிலே அத்தை ஓடி, ஓடி உபசரிச்சாங்களே.... அதைப் போல அம்மாவும் பரிமாறணும். அப்பத்தான் சாப்பிடுவேன்."

அம்மாவும் அப்பாவும் திகைத்தனர்.

"இதுக்குக்காகத்தான், சாப்பாட்டு மேசையைத் திருப்பித் தந்திடச் சொன்னியா? மேசை இருக்கட்டும்மா. அம்மாவின் அன்பான கவனிப்பைப் பெற சாப்பாட்டு மேசை கண்டிப்பா தடையா இருக்காது. நீ மேசையிலேயே உட்கார்ந்து சாப்பிடு. நான் கேட்டுக் கேட்டுச் சாதம் போடறேன். சரிதானேம்மா? சாப்பிடவா" என்றாள் அம்மா.

அஸ்வினி மகிழ்ச்சியுடன் சாப்பிட எழுந்தாள்!

அழகுப் பிள்ளையார்

அரச மரத் தடியிலே
அமர்ந் திருக்கும் பிள்ளையார்
கரத்தைக் காட்டி வாழ்த்தியே
காட்சி தரும் பிள்ளையார்

ஆனை முகம் காட்டியே
அல்லல் தனைத் தீர்ப்பவர்
பானை வயிறு தாங்கியே
பக்கம் வந்து நிற்பவர்

அருகம் புல்லு மாலையும்,
அரிசிக் கொழுக் கட்டையும்
பருகும் பாலில் கொஞ்சமும்
படைத்தால் மகிழும்
பிள்ளையார்

பள்ளி செல்லும் சிறுவர்கள்
பாடம் நன்கு கற்றிட
அள்ளித் தருவார் அறிவினை
அவரைத் தொழுது நின்றிட

நல மனைத்தும் நல்கிட
நாமும் வருவோம் சுற்றியே
குல மனைத்தும் காப்பவர்
கொடுப்பா ரென்றும் வெற்றியே

-பாளை. பி.ஏ.ஜவஹர்லால்



பலூன்கள்

பள பளக்கும் பலூன் பார்!
பல வண்ண பலூன் பார்!


குழந்தை வாயில் உமிழ்ந்திடும்
குண்டு வடிவ பலூன் பார்!

நுரையில் எழும் குமிழ் என
நன்கு ஜொலிக்கும் பலூன் பார்!

அளவு மீறி ஊதிட்டால்
அட்டா வெடிக்கும் பலூன் பார்!

அளவு மீறின் எதற்குமே
இந்த முடிவு உணருவாய்!

-காரைக்கால் கணேசன்



சுதந்திரமே செல்வம்!


சிட்டு போல கிளம்பிச் செல்லும்
சின்னக் குருவி பாரு - அது
பட்டுப் போல பறந்து வானில்
பாடும் பாட்டைக் கேளு!

பச்சை ஆடை கட்டிப் பறக்கும்
பாசக் கிளியின் பாட்டு - அதை
இச்சை மொழி கிளியோடு நீயும்
இணைந்து பாடி காட்டு!

வானத் திலே வளைய வரும்
வண்ண வண்ண பூச்சி - நம்மை
கானத் திலே ஆழ்த்தும் அது
காற்றில் பேசும் பேச்சி!

சுற்றத் தோடு சுற்றித் திரியும்
சுதந்திரம் அவர் செல்வம் - அதை
முற்றத் தோடு பூட்டி வைக்கும்
மூடரை நாம் வெல்வோம்!

-உவரி ஈ.ஜெயகர்





சித்தெறும்பு

சித்தெறும்பு கூட்டம் ஒன்று
சுறுசுறுப்பாய்ப் போகுது!
சிதறிக் கிடக்கும் தானியத்தைச்
சேர்ந்திழுத்தே போகுது!
சேமிப்பை சொல்லிக் காட்டி
சத்தமின்றிப் போகுது!
ஒற்றுமையை நமக்குச் சொல்லி
ஓரமாகப் போகுது!

- நெய்வேலி குறிஞ்சி

பாரதியார்

எட்டையபுரத்தில் பிறந்த வராம்,
எழுச்சிக் கவிதை புனைந்தவராம்

புரட்சிக் கருத்தை விதைத்தவராம்
புதுமை காண விழைந்தவராம்

பெண்ணின் விடுதலை கேட்டவராம்
புதுவையில்கூட வாழ்ந்தவராம்

மண்ணின் விடுதலைக் குழைத்தவாரம்
மங்கா வேகம் தந்தவராம்

பாவேந்தர் குருவாய் இருந்தவராம்
பாரத விடுதலைக் குழைத்தவராம்

சாதியே இல்லை என்றவராம்
சான்றோனாக வாழ்ந்தவராம்

-ஆலங்குப்பம் கே.பார்த்தசாரதி



உழுஜாலே!

காட்டுக் குடிமக்களின் நலனையே கருத்தில் கொண்டு, நீதிநெறி வழுவாமல் ஆட்சி புரிந்த சிங்கராஜாவுக்கு நீண்ட காலமாக ஓர் ஆசை. மனிதர்களைப் போலவே காசிக்குச் சென்று கங்கையில் குளிக்க வேண்டும் என்பதுதான் அந்தத் தணியாத ஆசை.

வாரணாசிக் காட்டின் சிங்கராஜாவிட மிருந்து கூட, காசிக்கு வந்து புனித கங்கை யில் குளித்து சில நாட்கள் விருந்தினராகத் தங்கியிருக்கும்படி எத்தனையோ முறை அழைப்பு வந்து விட்டது. பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு போகவும், தங்க வைத்து விருந்தளித்து, கங்கையில் குளிக்க வைத்து, திரும்பக் கொண்டு வந்து சேர்க்கவும் எல்லா ஏற் பாடுகளையும் வாரணா சிக் காட்டு சிங்கராஜாவே செய்து தருவதாக உறுதி யளித்திருந்தார். பத்திர மாகச் சென்று சுகமாகத் திரும்பி வரலாம். எப் பொழுது வேண்டுமா னாலும் கிளம்பலாம். ஆனாலும் சிங்கராஜா தயங்கினார். அதற்குக் காரணம் இருந்தது.

காசிக்குக் கிளம்பி னால் திரும்பி வர ஆறு மாதங்களாவது ஆகும். அதுவரை அர சாங்க நிர்வாகத்தை அவரைப் போலவே குடிமக்களின் நலம் கருதி நீதிநெறி தவறாமல் ஆட்சி புரிய யார் இருக்கிறார் கள்? அவரது ஒரே வாரிசான இளவர சனுக்கு, குடிமக்களின் நலத்தில் நாட்ட மில்லை. காட்டு விலங்குகளுக்கு ஓர் ஆபத்து என்றால், அவரைப் போல் ஓடிச் சென்று உதவும் துடிப்பு அவரிடம் இல்லை. தன்வரை, வசதி எதுவும் குறை வின்றி இருக்கிறதா என்று கவனிப் பாரே தவிர, ஓடோடி உதவ மாட்டார்.

அமைச்சர் புலியார் பழுத்த அனு பவசாலி. தன்னுடைய அனுபவமும், கருத்





தும் நல்லாட்சிக்குப் பயன்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக அந்தத் தள்ளாத வயதிலும் தலைமை அமைச்சராக இருக்கிறார். அவர் கிழித்த கோட்டை சிங்கராஜா தாண்ட மாட்டார். சிங்கராஜாவின் கட்டாயத்திற்காகவே புலியார் இந்தப் பொறுப்பைத் தொடர்ந்து வகித்து வருகிறார்.


இளவரசருக்கு, புலியாரிடம் அத்தனை ஈடுபாடு இல்லை. "கற்காலத்துப் பத்தாம் பசலி", "கிழட்டுப் புலி" என்றெல்லாம் மறைமுகமாகவே கேலி பண்ணுவார். சிங்கராஜாவுக்காக புலியார் இதையெல்லாம் பொறுத்துக் கொண்டார்.

சிங்கராஜா காசிக்குப் போவதானால், இளவரசரிடம்தான் அரசைக் கொடுத்து விட்டுப் போக வேண்டும். அவர் தலை மறைந்ததும், இளவரசர், புலியாரை மரியாதைக்குறைவாக நடத்தி, தானாகவே அவரை விலகும்படி பண்ணி விடுவார்! அரச நிர்வாகம் கெட்டுக் குட்டிச்சுவராகி விடும். காட்டுக் குடிமக்கள் தவிப்பார்கள். இதுதான் சிங்கராஜாவின் தயக்கத்திற்குக் காரணம்.

சிங்கராஜா ஏன் காசிக்குப் போகத் தயங்குகிறார் என்பதை புத்திசாலியான தலைமை அமைச்சர் புலியாரால் ஊகிக்க முடியாதா என்ன? சிங்கராஜாவின் நிலை

யைப் பார்த்து அவர் மனமிரங்கினார். சிங்கராஜாவுக்குத்தான் எத்தனை நல்லமனம் என்று வியந்தார். அவருக்கு உதவுவது தன் கடமை என் பதை உணர்ந்தார்! சிங்கராஜாவைத் தனிமையில் சந்தித்தார்.

"சிங்கராஜா, நீங்கள் தயங்குவதன் காரணம் புரிகிறது. பொறுப்பை




இளவரசரிடம் ஒப்படைத்து விட்டு, காசி யாத்திரை சென்று வாருங்கள். நீங்கள் திரும்பி வரும் வரை ஆட்சியை கவனமாகப் பாதுகாப்பேன். இளவரசருக்கும் எனக்கும் இடையே எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல் பார்த்துக் கொள்வேன்" என்று உறுதியளித்தார் அமைச்சர் புலியார்.

இந்த உறுதி கிடைத்த பிறகு சிங்கராஜா தயங்கவில்லை. 'கிடுகிடு'வென்று காசியாத் திரைக்கான ஏற்பாடுகள் நடந்தன.

"எந்த ஒரு பிரச்னை எழுந்தாலும் புலியாரைக் கலக்காமல், அவரது ஆலோசனையைப் பெறாமல் தானாக முடிவெடுக்காதே. அமைச்சராக இருப்பதால் அவருக்குப் பெருமை அல்ல. அவர் அமைச்சராக இருப்பதால் நமக்குத்தான் பெருமை. அக்கம் பக்கத்துக் காட்டு சிங்கராஜாக்கள் எல்லாம், அவரிடம் வந்து ஆலோசனை பெறுகிறார்கள். அதனால், அவருடைய அறிவுக்கும் அனுபவத்திற்கும் மதிப்புக் கொடுத்து நான் திரும்பி வரும் வரை ஆட்சியை நடத்து" என்று திரும்பத் திரும்ப இளவரசருக்குப் புத்திமதி கூறிவிட்டு, ஒரு நல்ல நாளில் காசியாத்திரை கிளம்பினார் சிங்கராஜா.

ராஜா பொறுப்பை இளவரசர் ஏற்றுக் கொண்டு கவனித்தார். சிங்க



"அந்த டாக்டர் ஒரு கிரிக்கெட் பைத்தியம்னு எதைவெச்சு சொல்ற?"

"ஊசிபோடும்போது... பேண்டில் ஒரு முறை தேச்சுட்டுத்தானே போடறார்.."

— இரா. அ. தென்றல் நிலவன்

ராஜாவின் அறிவுரைகளை அவர் மறக்கவில்லை. எந்த ஒரு முடிவையும் புலியாரைக் கலந்து கொண்டே எடுத்தார். பிரச்னை இன்றி நாட்கள் நகர்ந்தன.

இளவரசருக்கு, இசை என்றால் கட்டோடு பிடிக்காது. "நீட்டி நீட்டி பாடகர்கள் பாடுவதை மணிக்கணக்கில் உட்கார்ந்து தலையை ஆட்டி ஆட்டி ரசிப்பது வீண் வேலை. கால விரயம். இந்த நேரத்தில் உழைத்து உருப்படியாக ஏதாவது பண்ணலாம்" என்று அடிக்கடி தன் நண்பர்களிடம் கூறுவார்.

சிங்கராஜாவும் புலியாரும் சிறந்த இசைப் பிரியர்கள். அரச சபையிலேயே அடிக்கடி சிறந்த இசைக் கலைஞர்களை வரவழைத்துக் கச்சேரி பண்ணி வைத்துப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுவார்கள். புலியாரின் ஆதரவில் காட்டிலேயே ஓர் இசைப் பள்ளி நடந்து வந்தது. இசை ஆர்வத்தைக் காட்டு விலங்குகளிடையே வளர்க்க அது பெரிதும் தொண்டாற்றி வந்தது. திறமையான கலைஞர்களுக்கு சிங்கராஜா உதவித் தொகையும் அளித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் சீசனில், பத்து நாட்கள் இசைவிழா நடக்கும். சிங்கராஜா குடும்பத்துடன் வந்து கேட்டு ரசித்து, திறமையான கலைஞர்களுக்கு சால்வை அணிவித்து, பொன்முடிப்பும் வழங்குவார்.

இளவரசர் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட மூன்றாவது மாதம் கிறிஸ்துமஸ். இசைவிழா ஏற்பாடுகளை ஆரம்பிக்கவும், விழாவை இளவரசரே துவக்கி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ள இசைப் பள்ளியின் முதல்வர் கரடியார், தானே வந்தார்.

இளவரசருக்குத்தான் இசையில் ஈடுபாடே இல்லையே? அவர் எப்படி இந்த வேண்டுகோளை ஏற்பார்?

"இது கம்ப்யூட்டர் யுகம். இந்தக் காலத்தில் ஆராய்ச்சியில் ஈடுபடாமல், மணிக்கணக்கில் பாடுவதும், எல்லா வேலைகளையும் மூட்டைகட்டி வைத்து விட்டுத் தலையை ஆட்டிக் கொண்டு கேட்பதும் வேலையத்தவர்கள் பண்ணும் வேலை. எனக்கு இதில் ஈடுபாடு இல்லை. இத்தனை இராகங்கள், இத்தனை தாளங்கள், இவைகளுக்கேற்ற பாடல்கள் எல்லாம் அவசியம்தானா?" என்று கேட்டார் இளவரசர் கடுகடுப்புடன்.

கரடியார் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவே இல்லை. அதனால் அவர் பெரிதும் அதிர்ச்சியடைந்தார். என்ன பதில் கூறுவது என்று அவருக்குத் தோன்றவில்லை.

"ஆட்சி அதிகாரம் நிரந்தரமாக என் கைக்கு வந்தால், முதலில் இந்த இசைப் பள்ளியை இழுத்து மூடி விடுவேன்," என்று உறுமிய இளவரசர், "போனால் போகிறது. நாம் கம்ப்யூட்டர் உலகத்தில் இருக்கிறோம். நம்முடைய விலைமதிப்பில்லா நேரத்தை இப்படி விதம்விதமான ராகங்களை ரசிப்பதில் செலவிட்டு வீணாக்க வேண்டாம்" என்றார்.

கரடியார் திகைப்பு நீங்காமல், பேச நா எழாமல் நின்று கொண்டிருந்தார்.

"காலையில் முதலில் என்ன ராகத்துடன் பொழுது விடிகிறது?" – இளவரசர் தான் கேட்டார்.

"பூபாளம்."

"சரி. இந்த பூபாள இராகம் ஒன்றே இனி நமக்குப் போதும். இந்த ஒரு ராகத்திலேயே எல்லோரும் பாடுங்கள். யாரும், வேறு எந்த ராகத்திலும் இனி பாடக் கூடாது. மீறினால் கடுமையான தண்டனை. இது என் உத்தரவு."

இசை வித்தகரான கரடியார் மயக்

கம் போட்டு விழாத நிலை! இசைப் பிரியர்கள் எல்லாம் அழாதகுறையாக புலியாரிடம் வந்து முறையிட்டார்கள். புலியார் இளவரசரைக் காண வந்தார்.

''பாடுவது பற்றி நான் போட்ட உத்தரவை எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது. எனக்கு இருக்கும் ஆத்திரத்தில் இசைப் பள்ளியையே இழுத்து மூடி விடவும், பாடுபவர்களையும் கேட்பவர்களையும் சிறையில் தள்ளவும் உத்தர விட்டு இருப்பேன். இசைப் பிரியர்களான அப்பாவையும் உங்களையும் கருதித்தான் அதைச் செய்யாது விட்டேன். பாடுவர்கள் பூபாளத்திலேயே பாடட்டுமே? நான் பாடக் கூடாது என்று தடைபோடவில்லையே?'' என்று விவாதித்தார் இளவரசர்.

''பல்வேறு இராகங்களில் பாடினால் தான் இசைக் கலைஞர்களால் தங்கள் முழுத் திறமையையும் காட்ட முடியும். கேட்பவர்களுக்கும் சலிப்பு இருக்காது'' என்று கூறிப் பார்த்தார் புலியார். இளவரசர் கேட்கவில்லை. பிடிவாதமாக இருந்தார்.

புலியாரின் தன்மானம் கொதித்து எழுந்தது. ''பதவியை விட்டு விலகிக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டுப் போய் விடலாமா என்று துடித்தார். சிங்கராஜாவுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. மனதை மாற்றிக் கொண்டு திரும்பி விட்டார்.

''கிழப் புலியாரைப் பணியவைத்து விட்டேன்'' என்று மனமகிழ்ந்தார் இளவரசர்.

கரடியார் புலியாரைக் காண வந்தார்.

''இது பைத்தியக்கார இராஜ்யமாகி விட்டது! இனி என்போன்ற இசைக் கலைஞர்களுக்கு இந்தக் காட்டில் வேலை இல்லை. பூபாளத்தையே பாடிப் பாடி பாடுபவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் பைத்தியம் பிடித்து விடப் போகிறது! நாங்கள் இந்தக் காட்டை விட்டுக் கிளம்புகிறோம்'' என்றார் இசைப் பள்ளித் தலைவர் கரடியார்.

''இசைவிழாவுக்கு இன்னும் மூன்று மாதங்கள் இருக்கிறதே? கொஞ்சம் எனக்காகப் பொறுத்துக் கொள்ளுங்கள். இசைப் பிரியரான சிங்கராஜாவே அதற்குள் காசி யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பலாம். இல்லை, நான் செய்யும் முயற்சிகளால் இளவரசர் மனமே கூட மாறலாம். கொஞ்சம் பொறுமை யுடன் இருங்கள்'' என்று அவரை அனுப்பி வைத்தார் புலியார்.

பக்கத்து தென்மலைக் காட்டு சிங்கராஜாவின் பேத்திக்கு ஆண்டு நிறைவு என்று அழைப்பு வந்தது. ''பயணம் எனக்கு சரிப்பட்டு வராது. நீங்கள் மட்டும் சென்று வாருங்கள்'' என்று இளவரசரை அனுப்பி வைத்தார் புலியார்.

தென்மலைக் காட்டு எல்லையில், தானே நேரில் வந்து இளவரசரை வரவேற்று அழைத்துக் கொண்டு போனார் சிங்கராஜா.

விருந்து நேரம். ''ஜாங்கிரி! உருளைக் கிழங்கு பொரியல்! முருங்கைக்காய் சாம்பார்! சேமியா பாயசம்! எல்லாம் எனக்கு மிகவும் பிடித்ததாக இருக்கே!'' என்று அகமகிழ்ந்து விருந்தைச் சுவைத்தார் இளவரசர். இரவில் கூட விருந்தில் அதே அயிட்டங்கள்தான்! இளவரசர் சக்கையாக ஒரு பிடிபிடித்தார்!

''இளவரசே, அடுத்த வாரம் என் இரண்டாவது பையனுக்கு திருமண நிச்சயதார்த்தம். வராதவர் வந்திருக்கிறீர்கள்! நிச்சயதார்த்தத்துக்கும் தாங்கள் இருந்து என்னைப் பெருமைப்படுத்த வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டார் தென்மலைக் காட்டு சிங்கராஜா.


இளவரசர் மகிழ்ச்சியுடன் இசைந்தார்.

இரண்டாவது நாள் காலை விருந்து.

''நாய்க்கும் ஒநாய்க்கும் என்ன வித்தியாசம்?''

நாய்க்கு இன்ஷியல் இல்லே; ஒநாய்க்கு 'ஒ'ங்கிற இன்ஷியல் இருக்கு சார்!''

-கள்ளிக்குடி குரு ஸ்ரீ





"அண்ணா, 'மேப்'ல இங்கிலாந்த சுற்றி ஏன் நீலமா இருக்கு."

இது தெரியாதா, அது தான் "இங்க் லாந்தாச்சே.

-பத்மினி

உருளைக் கிழங்கு பொரியல், முருங்கைக் காய் சாம்பார், ஜாங்கிரி, சேமியா பாயசம்! அலுத்துப் போயிருந்த இளவரசர், வெளியே சொல்ல முடியாமல் சாப்பிட்டார். இரவு வந்தது. அதே சாப்பாடு வகை! உமுஜாசே! ஏதோ சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணி விட்டு எழுந்தார் இளவரசர்.

காலையில் எழுந்து சமையற்கட்டுப் பக்கம் வந்தார். விருந்து தயாராகிக் கொண்டிருந்தது. அதே உமுஜாசேதான்! இளவரசருக்குப் பகீரென்றது!

சமையற்காரரைத் தனியே அழைத்தார்.

'ஏம்பா, உங்க காட்டுல, இந்த உமுஜாசே தவிர வேற விருந்து வகையே உங்க யாருக்கும் பண்ணத் தெரியாதா?" என்று கேட்டார்.

"தெரியும் இளவரசே. ஆனால், இந்தக் காட்டில் எங்க ராஜா ஒரு சட்டம் போட்டிருக்கார். சாம்பார்னா முருங்கைக்காய் தான்! பொரியல்னா உருளைக்கிழங்கு தான்! இனிப்புன்னா ஜாங்கிரிதான்! அதே மாதிரி, பாயசம்னால் சேமியாதான்! இதை மீறி, யாராவது வேறு ஏதாவது பண்ணினாங்கன்னா கடுமையான தண்டனை தான்!" என்றார் சமையற்காரர்.

"என்னய்யா இது பைத்தியக்காரத் தனமான சட்டம்!" என்று வாய்விட்டு வியந்து கொண்டார் இளவரசர்.

"என்ன இளவரசே! இப்படிச் சொல்லி விட்டீர்கள்! இது கம்ப்யூட்டர் யுகம். விதம்விதமாகச் சமைப்பதில் பொன்னான நேரத்தைச் செலவிடுவதும் அவைகளைச் சாப்பிட மணிக்கணக்கில் வீணாக நேரத்தை செலவிடுவதும் எத்தனை பைத்தியக்காரத்தனம்? விதம்விதமாகப் பண்ணிச் சாப்பிட்டால்தான் விருந்தா? ஒரு கறி, ஒரு பொரியல், ஒரு இனிப்பு, ஒரு பாயசம் ஒரே மாதிரி இருந்தால் எத்தனை எளிது? அதுதான் சட்டமே போட்டு விட்டேன்! அப்படி வகைவகையாச் சாப்பிடணும்னு ஆசைப்படறவங்க இந்த இராஜ்யத்தை விட்டு வெளியே போய்க்கலாமே?" என்று பதில் கூறிக் கொண்டே வந்தார் தென்மலை சிங்கராஜா.


இளவரசர் பதில் கூற முடியாது எச்சிலைக் கூட்டி விழுங்கிக் கொண்டார்.

திடீரென்று ஏதோ எண்ணிக் கொண்ட தென்மலை சிங்கராஜா, "ஆமாம், நீங்கள் கூட, பூபாள இராகத்தை மட்டும்தான் பாடலாம்னு உத்தரவு போட்டிருக்கிறீர்களாமே! நல்ல உத்தரவு! அதைக் கேள்விப் பட்டுத்தான் நானும் இந்த மாதிரி உ.மு. ஜா.சே.வுக்கு உத்தரவு போட்டேன். உத் தரவு போட்டதும், ஒரே எதிர்ப்பு. மாறு தலே இல்லாமல், இப்படி உமுஜாவையே சாப்பிட்டால் பைத்தியம் பிடித்து விடும். ஒரு மாறுதலுக்காகவாவது வேறு சாப்பாட்டு வகைகளைச் செய்து கொள்ள அனுமதிக்க வேண்டும்னு முறையிட்டாங்க. உடனே நான் உங்க உத்தரவைத்தான் உதாரணம் காட்டினேன். காலையில் பூபாளம், மாலையில் வசந்தா, உறங்கப் போகும் போது நீலாம்பரின்னு அப்பப்போ பாட எத்தனையோ இராகங்கள் இருக்கும்போது, பூபாளம் ஒன்று மட்டும் போதும்னு நீங்கள் உத்தரவிடலே? அந்த மாதிரித்தான் இதுவும்னு அடிச்சுச் சொல்லிட்டேன்" என்றார்.

அன்று இரவு தென்மலை சிங்கராஜாவைச் சந்திக்க இளவரசர் வந்தார். "அவசர வேலை இருக்கிறது. நான் போய் விட்டு நிச்சயதார்த்தத்திற்கு மறுபடி வருகிறேன்" என்று உத்தரவு பெற்றுக் கொண்டு கிளம்பினார்.

தன் இராஜ்ஜியத்திற்கு வந்ததும் இளவரசர் போட்ட முதல் உத்தரவு பூபாளம் மட்டுமே பாடவேண்டும் என்ற ஆணையை நீக்கியதுதான்!

தான் போட்ட திட்டத்திற்கு ஒத்துழைத்த தென்மலைசிங்கராஜாவுக்கு அமைச்சர் புலியார் நன்றிக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்!



ஓரங்க நாடகம்

கொழுக்கட்டை வாழ்க!

எஸ். ஆர். ஜி. சுந்தரம்

(கணேஷ் விநாயகருக்குப் பூஜை செய்வதில் ஈடுபட்டிருக்கிறான். தம்பி ஜகதீஷ் அருகில் நிற்கிறான். அக்கா லதா சமையலறையில் வேலை செய்து கொண்டிருக்கிறாள்.)

கணேஷ் *(கண்களை மூடியபடி)* : சிந்திப்பவர்க்கருள் கணபதி ஜெய ஜெய... ஈசன் மகனே ஜெய.... ஜெய....

ஜகதீஷ் : ஆகா! என்ன பக்தி! என்ன பக்தி! லதாக்கா!

லதா : என்ன ஜகதீஷ்?

ஜகதீஷ் : இந்த கணேஷைப் பாரேன்...! பிள்ளையார் சதுர்த்தி எப்போடா வரப் போறதுன்னு காத்திருந்த மாதிரி பெரிசா பூஜை பண்ண ஆரம்பிச்சுட்டான்....! அதோ பாரேன்... அவன் தூபம் போடறதும், தீபம் காண்பிக்கறதும், மணியடிக்கிறதும்... அடாடா என்ன பக்தி! என்ன சிரத்தை!... கணேஷ்.. போதும் பூஜை!

லதா : ஜகதீஷ், நம்ம கணேஷோட பிள்ளையார் பக்தியைப் பத்தி நீ என்ன நினைச்சுக்கிட்டிருக்கே?... ஒருவேளை அவன் பக்தியை மெச்சி பிள்ளையாரே அவன் கண்முன்னால வந்து, "பிள்ளாய்! கணேஷ்! உன் பக்திக்கு மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். தருகிறேன்!" என்று சொன்னாலும் சொல்வார்!

ஜகதீஷ் : அப்போ இவன் என்ன கேட்பான்? ஒருவேளை காளிதாசனைப் போல தானும் பெரிய கவியாயிடணும்னு கேட்பானா?

லதா : சேச்சே... நம்ம கணேஷுக்கு அப்படியெல்லாம் கேட்கவே தோணாது... பிள்ளையாரே! பிள்ளையாரே! இன்றைக்குப் பிள்ளையார் சதுர்த்தியாக இருந்தும்

என் அக்கா பிடிவாதமா கொழுக்கட்டை செய்ய மாட்டேங்கிறா... வீட்லே கொழுக் கட்டை கிடைக்காட்டாலும், நண்பர்கள் வீட்லேயாவது எனக்கு நிறையக் கொழுக் கட்டை கிடைக்கச் செய்யணும் பிள்ளை யாரேன்னுதான் நம்ம கணேஷ் அந்த கணேசைப் பாத்து வரம் கேட்பான்...

கணேஷ் *(தியானத்திலிருந்து கண்விழித்து)* : லதா, ஜகதீஷ்... பூஜை சமயத்துலே முகமுகன்னு என்ன பேசிக் கிட்டிருக்கீங்க? இப்படி வாங்க, பிள்ளை யாருக்கு ரெண்டு பூ போட்டுட்டுப் போங்க! கடைசியிலே அம்மா சொன்ன படி கொழுக்கட்டை செய்தியா இல்லையா?

லதா : கொழுக்கட்டையும் செய் யல்லே... ஒண்ணும் செய்யல்லே! நான் தான் அப்பவே கொழுக்கட்டை செய்யப் போறதில்லைன்னு முடிவா சொல்லிட் டேனே....?

கணேஷ் : இதோ பார்! அவசரமா தந்தி வந்ததாலதானே அம்மா ஊருக்குப் போயிருக்காங்க? மாவெல்லாம் பிசைஞ்சு ரெடி பண்ணி வச்சுட் டுத்தானே ஊருக்குப் போயிருக்காங்க....? அதை வைச்சு கொழுக் கட்டை பண்ண வேண்டி யதுதானே? பிள்ளை யாருக்கு கொழுக் கட்டைதானே முக் கியம்?

லதா : பிள்ளை யாருக்கா... உனக்கா?

கணேஷ் : லதா, வீணா கிண்டல் பண் ணாதே... யாருக்கு எது பிடிக்குமோ அதைத் தான் கொடுக்கணும்! அம்மா ஊருக்குக் கிளம் பறப்போ கொழுக்கட்டை எப்படி செய்யணும்னு சொல்லிக் கொடுத்துட் டுத்தானே போனாங்க!

லதா : ஆமாம். செய்யச் சொன்னாங்க. எப்படிச் செய்யறதுன் னும் எனக்குத் தெரியும்! ஆனால் நான் செய்ய மாட்டேனே!

கணேஷ் : ஏன்?

லதா : கொழுக்கட்டை எனக்குப் பிடிக்காது. தம்பி ஜகதீஷுக்கும் பிடிக்காது. அம்மா நாளைக்கே திரும்பி வந்ததும், செய்து கொடுப்பாங்க... அதுக்கப்புறம் நீ சாப்பிடலாம்!

கணேஷ் : சரி, பிள்ளையாருக்கு நமஸ் காரமாவது பண்ணுங்கோ....

லதா, ஜகதீஷ் : மாட்டோம்!

கணேஷ் : ஏன்?

ஜகதீஷ் : நாங்க அப்பா அம்மா சொல்றபடிதான் கேட்போம்! நீ சொல்லி எதுவும் செய்ய மாட்டோம்!

கணேஷ் : ஓஹோ! அப்படியா? உங்க ளுக்கு விநாயகரோட அவதார மகிமை தெரிஞ்சிருந்தா, இப்படியெல்லாம் அலட் சியமா நடந்துக்க மாட்டீங்க. குறும்புத் தனமா பேச மாட்டீங்க! சரி, எனக்கு வெளியிலே அவசரமான வேலை இருக்கு...



போயிட்டு வரேன்.... நீங்க வீட்டைப் பாத்துக்குங்க!

லதா : ம்! கணேஷுக்கு இன்னிக்கு எங்கே கொழுக்கட்டை கிடைக்கப் போறதோ?

ஜகதீஷ் : பாவம் கணேஷ்! லதா! நீ ஏன் இப்படி நடந்துக்கிட்டே?

லதா : ம்! எல்லாம் சோம்பேறித்தனம் தான்.. யார் பொறுமையா இதையெல்லாம் செய்யறது? சரிவா, நாம கண்ணாமூச்சி விளையாடலாம்!

ஜகதீஷ் : நீதான் மொதல்லே கண்ணைக் கட்டிக்கணும்!

லதா : ஓ.கே! (லதா கண்ணைக் கட்டிக் கொள்ள ஜகதீஷ் ஆட்டம் காண்பிக்கிறான். ஜகதீஷ், ஓரிடத்தில் பதுங்கியிருக்க அங்கே விநாயகரே வருகிறார்! லதா விநாயகரைத் தொட....) ஆ! மாட்டிக்கிட்டியா? பிடிச்சுட்டேன். ஐயையோ என்ன இது யானைத் தும்பிக்கை மாதிரி இருக்கிறது! தலையிலே கிரீடம்...., வாயிலே தந்தம்...! (பயந்து கண்கட்டை அவிழ்க்க) ஆ! பிள்ளையார்... நிஜம் பிள்ளையாரே வந்திருக்கிறார்! ஜகதீஷ் ஓடிவா சிக்கிரம்!

ஜகதீஷ் : ஆமாம்! பிள்ளையாரே தான்!... தும்பிக்கை கூட எவ்வளவு அழகா ஆடறது?

பிள்ளையார் : ஆமாம்! பிள்ளையாரே தான் வந்திருக்கிறேன்! இதுதானே என் பக்தன் கணேஷின் வீடு!

லதா : ஆமாம்! ஆமாம்! உள்ளே வாருங்கள்! உட்காருங்கள்!



பிள்ளையார் : என்னைப் பூஜை செய்ய மறுத்தது நீங்கள்தானே!

ஜகதீஷ் : ஆமாம். இல்லை... வந்து... அது னால என்ன? இப்பவே பூஜை செய்துடறோம். (தட்டில் பூ கொண்டு வந்து அர்ச்சிக்கிறான்... பயத்தால் தட்டு நடுங்குகிறது.)

பிள்ளையார் : ம்! எங்கே கொழுக்கட்டை? உடனே கொண்டுவா! தட்டு நிறையக் கொண்டு வா!.... ம்! போ!

லதா : இதோ. இதோ போறேன் பிள்ளையாரே! கொழுக்கட்டையை வேக வைத்து சூடாகக் கொண்டு வருகிறேன்... அதுவரை ஜகதீஷ் நீ பிள்ளையாரோட பேசிக் கொண்டிரு! (போகிறாள்).

ஜகதீஷ் : பிள்ளையாரே! உங்களுக்கு நான்கு கைகளாயிற்றே! இரண்டு கைகள்தானே இருக்கின்றன? மீதி இரண்டு கை என்னாச்சு?



"உனக்குப் பிடித்தது கோடை காலமா குளிர் காலமா?"

"கோடை காலம்தான்!"

"என்ன காரணம்?"

"கோடை விடுமுறை கிடைக்கிறதால்தான்!"

– பொறையாறு கணேசன்

பிள்ளையார் : அது வந்து (இழுத்து விட்டு) ஆமாம்! என்னை நான்கு கைகளுடன் திடீர்னு பார்த்தால் குழந்தைகளாகிய நீங்கள் பயந்து விடுவீர்களேன்னுதான் இப்படி ரெண்டு கையோட வந்தேன்.

ஜகதீஷ் : அது சரி பிள்ளையாரே, உங்கள் தந்தத்தில் ஒன்று உடைந்திருக்கிறதே, அது ஏன்?

பிள்ளையார் : அதுவா?... ஒருமுறை பாரதக் கதையை வியாச முனிவர் சொல்லிக் கொண்டே வர நான் எழுதிக் கொண்டே வந்தேன். அப்போது எழுதுகோல் உடைந்துட்டது. உடனே என் தந்தத்தை ஒடித்து, அதையே எழுதுகோலாக்கிக் கொண்டேன்.

ஜகதீஷ் : விநாயகரே! நீங்கள் ஏன் போயும் போயும் மூஞ்சூறைப் போய் உங்கள் வாகனமாக வைத்திருக்கிறீர்கள்?

பிள்ளையார் : அது ஒரு பெரிய கதை தம்பி!

ஜகதீஷ் : கதையா? எனக்கு ரொம்பப் பிடிக்கும் சொல்லுங்கள்?

லதா *(வந்து கொண்டே)* : இருங்கள் பிள்ளையாரே. நானும் வந்து விட்டேன்! கொழுக்கட்டை இன்னும் ஐந்து நிமிடத்தில் வெந்து விடும்! ம் சொல்லுங்கள்.

பிள்ளையார் : எனக்கு ஏன் மூஞ்சூறு வாகனமாச்சுன்னு சொல்றேன். ரொம்ப நாளைக்கு முன்னால சபரின்னு ஒரு முனிவர் இருந்தார். அவர் மனைவி பேர் மனோமாயை! ஒருநாள் சிரவுஞ்சன்'கிற கந்தர்வன் மனோமாயைக்கு அனாவசியமா தொந்திரவு கொடுத்தான். அதே சமயத்திலே அங்கே வந்த சபரி முனிவர் சிரவுஞ்சனைப் பார்த்து, "டேய்! நீ மூஷிகமாகப் போ!" அப்படீன்னு சபிச்சுட்டார். சிரவுஞ்சன் சபரி முனிவர் கால்லே விழுந்து மன்னிப்புக் கேட்டான். சாப விமோசனம் கேட்டுக் கதறினான். இந்த சிரவுஞ்சன் வினாயகர் பக்தன். உடனே சபரி முனிவர் அவன் மேலே இரக்கப்பட்டு "சிரவுஞ்சா! இனிமேலாவது இப்படித் தவறுகளைச் செய்யாதே! பூலோகத்துலே அவதரிக்கப் போற பிள்ளையாருக்கு, நீ வாகனமாகிப் பெருமையடைவாய்!" அப்படீன்னு சொன்னார்.

லதா : அப்புறம் என்ன ஆச்சு?

பிள்ளையார் : அப்படியே சிரவுஞ்சனும் மூஷிக உருவத்தோடு பூலோகத்திற்கு வந்தான். ஒருநாள் பராசர முனிவருடைய ஆசிரமத்துலே நுழைஞ்சு, அங்கே இருந்த மரங்களையும், செடிகளையும் வேரோடு அறுத்து நாசம் செய்தான். துணிமணிகளைக் கடிச்சு அட்டகாசம் செய்தான். உடனே நான் அந்த மூஷிகத்தை அடக்க 'பரசு'ங்கிற ஆயுதத்தை ஏவி விட்டேன். அந்த ஆயுதம் மூஷிகனைத் துரத்தி துரத்தி எனக்கு முன்னால கொண்டு வந்து நிறுத்தியது.

ஜகதீஷ் : அந்த மூஷிகன்தான் உங்க பக்தனாச்சே! பக்தனை தண்டிக்கலாமா?

பிள்ளையார் : தப்பு செய்தவன் யாராயிருந்தாலும் கண்டித்துத் தண்டிக்கத்தான் வேணும்!

லதா : பிள்ளையாரே, அப்படீன்னா, கணேஷ் தப்பு செய்தாலும் தண்டிப்பீங்களா?

பிள்ளையார் : நிச்சயமா! நீங்க தப்பு செய்தாலும் தண்டிப்பேன்....

ஜகதீஷ் : ம்ம்... சரி... அப்புறம் என்ன ஆச்சு பிள்ளையாரே? அதைச் சொல்லுங்க?

பிள்ளையார் : மூஷிகன் தனக்கு நேர்ந்த சாபத்தைச் சொல்லி என்னை வாகனமா ஏத்துக்க வேண்டினான். நானும் அன்று முதல் அவனை என் வாகனமாக்கிக் கொண்டு விட்டேன்.

லதா : வினையாகரே! இவ்வளவு நாளா உங்கள் மகிமை தெரியாமல் இருந்துட்டோம்! இனி உங்களை பூஜிக்காமல் விடமாட்டோம்! இருங்க கொழுக்கட்டையைக் கொண்டு வருகிறேன். (போய்த் திரும்புகிறாள்.) இந்தாருங்கள். இந்தத் தட்டில் வெல்லக் கொழுக்கட்டை, எள்ளுக் கொழுக்கட்டை, தேங்காய் கொழுக்கட்டை எல்லாம் இருக்கு!

ஜகதீஷ் : பிள்ளையாரே, ஒரு வேண்டுகோள்... எங்கள் அண்ணன் கணேஷுக்காக நாலைந்து கொழுக்கட்டைகளை மீதம் வையுங்கள்.

பிள்ளையார் : நிச்சயமாக வைக்கிறேன். அவன் கேட்டவுடன் கொழுக்கட்டை செய்து தராமல் அவன் மனதைப் புண் படுத்திவிட்டீர்கள்... அவன் வந்ததும் அவன் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேளுங்கள!

லதா : நாங்க போய் கணேஷ் காலிலே விழணுமா! அதெல்லாம் முடியாது! அதுக்குப் பதிலா....

ஜகதீஷ் : உங்கள் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறோம்.... மன்னியுங்கள்!

பிள்ளையார் : ம்!... மன்னித்தோம்! மன்னித்தோம்! கொழுக்கட்டை பலே ஜோர்! எழுந்திருங்கள்! நமஸ்கரித்தது போதும்! (பிள்ளையார் தன் பிளாஸ்டிக் முகமூடியை அகற்றிக் கொள்ள....)

லதா *(திகைத்து)* : ஹா... கணேஷ் நீயா இப்படி!

ஜகதீஷ் : இதை முகமூடின்னு நினைச்சுக்கூடப் பார்க்க முடியல்லையே...! உண்மையான பிள்ளையார் முகம் போடவே இருந்துதே!

கணேஷ் : ஆமாம்! இது விலையுயர்ந்த வெளிநாட்டு முகமூடி. தோலோடு தோல் ஒட்டிக்கிட்ட மாதிரி இருக்கும்! முகமூடின்னு சந்தேகமே வராது!

லதா : எப்படி இந்த வேஷம் போட்டுக்கிட்டு இங்கே வந்தே!

கணேஷ் : பக்கத்து வீட்லே என் நணபர்கள் குழு ஒரு நாடக ஒத்திகை நடத்திக்கிட்டிருக்காங்க. ''விநாயகர் விஜயம்''னு நாடகம். நாடகத்துலே நான்தான் விநாயகர்....! நடுவிலே கொஞ்ச நேரம் அவகாசம் கிடைச்சுது... உன்னோட சோம்பேறித்தனத்தை விரட்டியடிச்சு, எப்படியாவது கொழுக்கட்டை செய்யச் சொல்லி சாப்பிடணும்னு நினைச்சுத்தான் இந்த வேஷத்தோடயே இங்கே வந்தேன். குரலை மாத்திப் பேசினேன். கொழுக்கட்டையும் கிடைச்சது... நீங்களும் விநாயகர் கால்லே விழுந்து மன்னிப்புக் கேட்டுட்டீங்க! எனக்கும் நல்லா நடிக்க வரும்கிற தன்னம்பிக்கையும் வந்திருக்கு!

ஜகதீஷ் : எங்களுக்கும் விநாயகரைப் பத்தின விவரங்கள் தெரிஞ்சுது!

கணேஷ் : ஆமாம்! விநாயகர் இப்படி நேரிலே வந்து தரிசனம் கொடுப்பாராங்கற சந்தேகம் உங்களுக்குக் கொஞ்சம் கூட வரவேயில்லையா?


லதா : இல்லவே இல்லை....! உன் மேக்கப்பும், நடிப்பும் அவ்வளவு பிரமாதம்!

கணேஷ் : பிள்ளையார் வாழ்க! கொழுக்கட்டை வாழ்க!

''யானை அண்ணே, ஏன் சோகமா இருக்கீங்க?''

''என்னோட எடை என்னன்னு பார்க்குறதுக்கு ஏத்த மிஷின் எதுவும் இல்லையாம்!''

— பா. ஜெயக்குமார்





எங்கள் ஊரில் நடந்தது!

பிரம்பிலும்...

அன்று எங்களுக்குத் தமிழ்ப் பாடப் பகுதி. தமிழாசிரியர் அவர்கள் வகுப்புக்கு வந்து இராமலிங்க அடிகளின் 'இறை வாழ்த்து' பாடலை நடத்தினார். இறை




வனின் பெருமைகளையெல்லாம் விரிவாகக் கூறினார். மேலும் அவர் இறைவன் வான், வளி, காற்று, தூண், துரும்பு போன்ற எல்லாவற்றிலும் எந்தப் பொருளிலும் இருப்பான் என்று கூறினார். அப்பொழுது பாடத்தைக் கவனிக்காமல் பராக்குப் பார்த்த ஒருவனை அடிக்க எண்ணி பிரம்பை எடுத்து ஓங்கினார். உடனே அந்தக் குறும்புக்கார மாணவன் அவரைத் தடுத்துக் கொண்டே, "சார், இப்பத்தானே துரும்பிலும் இறைவன் இருப்பான் என்றீர்கள்? இந்தப் பிரம்பிலும் இறைவன் இருப்பாரே? அவரையே வைத்து அடிக்கலாமா சார்?" என்றானே பார்க்கலாம். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

விழுப்புரம், ந. துரை.

பெரிய தானம்!

எங்கள் தமிழ்ப் பாட ஆசிரியர், தமிழ்ப் பாடம் மட்டுமல்லாமல் பொது அறிவையும் நடத்துவார். ஒருநாள் கண்தானம், நிதானம், அன்னதானம் இவற்றைப் பற்றி விளக்கமாக வகுப்பில் கூறினார். பிறகு, "தானத்தில் சிறந்த; பெரிய




தானம் எது?" என்று மாணவர்களிடம் கேட்டார். அதற்கு சோமு என்ற தூங்கு

மூஞ்சி மாணவன் எழுந்து "தானத்தில் சிறந்த; பெரிய தானம் நம்ம பள்ளிக் கூடத்து மைதானம்" என்றான். வகுப்பே சிரிப்பொலியில் மூழ்கியது.

விழுப்புரம், லோகேஸ்வரி.

கடிக்கல

நாங்கள் டியூஷன் படித்துக் கொண்டிருந்த நேரம். கொசுத் தொல்லை அதிகமாக இருந்தது. வெளியூர் மாணவர்கள் நிறையப் பேர் படித்தமையால் ஆசிரியர்



சாதாரணமாக இருட்டி விடுவதற்குள் எல்லோரையும் அனுப்பி விடுவார். ஆசிரியரைக் கொசு கடிப்பதாகவும், அதன் தொல்லை தாங்காமல்தான் எல்லோரையும் சீக்கிரமே அனுப்பி விடுகிறார் என்றும் எல்லோரும் தவறாக எண்ணிக் கொண்டனர். மறுநாள் ஆசிரியர் அவசர வேலையாக வெளியில் சென்று விட்டதால் டீச்சர்தான் எங்களுக்கு டியூஷன் நடத்தினார். அவர் அன்று என்னவோ தெரியவில்லை. ரொம்ப நேரம் வகுப்பை நடத்தினார். எங்களுள் ஒரு மாணவன் "டீச்சரை கொசு கடிக்கலே போலிருக்கிறது. அதான் இன்னமும் பாடம் நடத்திக் கொண்டு இருக்கிறார்" என்று மெதுவான குரலில் சொன்னான். டீச்சருக்கு இது கேட்டு விட்டது! டீச்சர் உட்பட அனைவரும் குபீரெனச் சிரித்தோம்.

துத்திப்பட்டு, இராம. ஜெயகாந்தன்,

உருள...

என் நண்பன் ரொம்பக் கிறுக்குப் பிடித்தவன். அவங்கம்மா அவனைக் கடைக்குப் போய் உருளைக் கிழங்கு வாங்கி வரச் சொன்னாள். அவன் கடைக்



காரரிடம் "எப்படிங்க உருள?" என்று கேட்டான். குறும்புக்காரரான அவர், "நீ எப்படி வேண்டுமானாலும் உருளலாம் தம்பி. அது உன் விருப்பம்" என்று பதில் சொன்னார். எல்லோரும் சிரித்தனர், நண்பன் உட்பட!

செஞ்சி, தா. ரோஜர்.

பிடிவாதம்

தமிழாசிரியர், மாணவர்களிடம் முயலுக்கு மூணு கால் என்ற பழமொழியை எதற்காகச் சொல்வார்கள் என்று கேட்டார். "பிடிவாதம்" என்பதற்கு உதாரணமாகச் சொல்வார்கள் என்பதுதானே இதற்கு உரிய பதில்? ஆனால் ஒரு குறும்பு




மாணவன் எழுந்து, "சார் முயலுக்கு ஒரு கால் நொண்டியா இருந்தாலும் சொல் வாங்க சார்" என்றான். மாணவர்களின் சிரிப்பில் வகுப்பே அதிர்ந்தது.

வந்தவாசி, பா. ஜெயக்குமார்.

யாருய்யா?

ஒரு சமயம் நாங்கள் திருப்பத்தூரி லிருந்து வேலூர் சென்றோம். கண்டக்டர், பஸ்ஸின் கடைசிப் பகுதியில், டிக்கெட்



போட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று பஸ்ஸுக்குள் சிகரெட் புகையின் நெடி வீசியது. கண்டக்டர் கோபமாக, "யாரையா பஸ்சுக்குள்ள புகை பிடிக்கறது? எழுந்திரிச்சு கீழே போங்கய்யா. எத்தினி நாள் சொன்னாலும் தெரியறதில்லை?" என்று கத்தினார். ஆனால் அவர் கத்தலுக் குப் பலனில்லை. மீண்டும் சிகரெட் நாற் றம்! அவர் மீண்டும் கடுப்பாக, "ஏய்யா, நா, இங்க கழுதையா கத்தறேன்; காதில விழலே?" என்று சொல்லிக் கொண்டே, உட் பக்கம் திரும்பினார். சிகரெட் பிடித்தது வேறு யாருமில்லை; பஸ் டிரைவரேதான்! சீட்டில் அமர்ந்தபடி, வெளியே பார்த்த படி ஊதித் தள்ளிக் கொண்டிருந்தார். கண்டக்டர் பாவம், பிறகு வாயையே திறக்கவில்லை! பயணிகள் அனைவரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்!

திருப்பத்தூர், தேவந்தி துரைராஜ்.

காரணம்

நாங்கள் நண்பர்களுடன் குளிப்பதற் காகக் கிணற்றுக்குச் சென்று கொண்டிருந்



தோம். அப்பொழுது ஒரு நண்பன், "நான் கேட்கும் வினாவுக்கு விடை கூறுவீர் களா?" என்றான். நாங்களும் சரி என்று ஒப்புக் கொண்டோம். அவன், ஒரு கல் லைக் கிணற்றில் தூக்கி எறிந்தான் கல் மூழ் கியது. "டேய், கல் மூழ்கும் காரணம் என்ன?" என்றான். நாங்கள், "அது எடை அதிகமாக உள்ளதால் நீரில் மூழ்குகிறது" என்றோம். அதற்கு அவன் "இல்லை. கல் லிற்கு நீச்சல் தெரியாது. அதுதான் அது மூழ்குகிறது" என்றான். இந்த மடக்கு பதி லைக் கேட்டு நாங்கள் சிரித்தோம்.

அனந்தபுரம், டி. கணேஷ்.

அதே ஜாங்கிரி

மாமா ஊரில் இருந்து வந்திருந்தார். 'அப்பா ஹோட்டலுக்குச் சென்று ஜாங் கிரி வாங்கி வரச் சொன்னார். ஓட்டலுக் குப் போனேன். முதலாளியிடம் "தீபா வளிக்கு ஜாங்கிரி போட்டீர்களே. எத் தனை நன்றாக இருந்தது? அதே மாதிரி



ஜாங்கிரி கிடைச்சா எங்க அப்பா வாங்கி வரச் சொன்னாங்க" என்றேன். ஹோட்டல் முதலாளி, "ஏன் கிடைக்காமல்? அதுவே இன்னும் நிறைய மிச்சம் இருக்கிறதே!" என்றார். இதை வீட்டில் சொல்லிச் சொல்லி எல்லோரும் சிரித்தோம்.

தஞ்சை, ஏ. ஹாஜா நஜ்முதீன்.

நெக்லஸ்

கடந்த வருடம் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதியுள்ளேன். ஒருமுறை எங்களுக்குப் படிக்க விடுமுறை விட்டிருந்ததால் எங்கள் வீட்டு மாடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தேன். என் தங்கை விளையாடிக் கொண்டிருந்தாள். அவளிடம், (சயின்ஸ்) புத்தகத்தைக் கொடுத்து ஒப்பித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று அவள்



என்னிடம் "நெக்லஸிற்கு ஸ்பெல்லிங் சொல்" என்று கேட்டாள். என்னடா இது! சைன்ஸில் எங்க நெக்லஸ் வந்தது என்று ஆச்சர்யப்பட்டேன். புத்தகத்தை வாங்கிப் பார்த்த பொழுதுதான் தெரிந்தது. அவள் nucleus என்பதை நெக்லஸ் என்று புரிந்து கொண்டு கேட்டிருக்கிறாள் என்று. சிரிப்பிற்குக் கேட்கவா வேண்டும்?

காரைக்குடி, இரா. அன்னலெட்சுமி.

குடை பிடிக்கலாம்

என் தங்கை பையன் ஹரி சுறுசுறுப்பானவன். எதைச் சொன்னாலும் அதற்கு ஏதாவது பதில் சொல்லி விடுவான். சிறு வயதில் அவன் பதில் நகைச்சுவையாகவே இருக்கும். மாங்காய் மாம்பழம் ஆகியவைகளை விரும்பிச் சாப்பிடுவான். ஒருநாள்



ஒரு துண்டு மாம்பழத்தைச் சாப்பிட்டு விட்டு, இன்னொன்று கேட்டான். அவனை அதட்டிவிட்டு, "மாம்பழம் நிறையத் தின்றால் உடம்புக்குச் சூடு" என்றேன். உடனே அவன், "சூடாக இருந்தால் குடை பிடித்துக் கொள்ளலாமே?" என்றான். பதிலைக் கேட்டுச் சிரிக்காமல் இருக்க முடியுமா?

தரங்கம்பாடி, என். ராஜலெட்சுமி.

மண்டேயில் இருந்து

தமிழுடன் ஆங்கிலத்தையும் கலந்து பேசுவதால் சில சமயம் சிரிக்கத் தோன்றுகிறது. பள்ளி ஆரம்பித்த புதிது. எல்லா ஆசிரியர்களும் வந்து பாடம் நடத்தினர்.

Zoology பாடத்திற்கு ஒரு ஆசிரியர் வந்தார். அவர் டைம் டேபிள் மாற்றம் காரணமாக எங்களிடம், "உங்களுக்கு இந்த "Mon-day" யில இருந்து வேற Zoology Sir



வருவார்," என்று கூறினார். அதுவும் தன் மண்டை அருகே கையை வைத்துக் கொண்டு கூறியதால் எங்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. சிரித்த எங்களை ஆசிரியர் ஆச்சரியமாகப் பார்த்தார். பிறகு, தான் கூறியதை கவனமாக அவரே நினைத்துப் பார்த்துச் சிரித்தார்.

அருப்புக்கோட்டை, ஆர். ஜெயகந்தர்.

வண்டி இழுத்த மாணவர்கள்!


• ராதா கிருஷ்ணன், ராஜாஜி

கல்லூரியில் எல்லா மாணவர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தில் முக்கிய அறிவிப்பு ஒன்றைச் செய்ய நிர்வாகம் விரும்பியது.

கல்லூரியில் தத்துவ வகுப்பை எடுத்து வந்த பேராசிரியர் மாணவர்களின் அன்பைக் கவர்ந்தவர். ஆழமான கவனத்துடன் படிக்க வேண்டுமே என்று தத்துவ வகுப்பை, விளக்கெண்ணெயாக எண்ணி மாணவர்கள் வெறுப்பதுண்டு. ஆனால், அந்தப் பேராசிரிர் பாடமெடுக்கத் தொடங்கியதும், மாணவர்களுக்கு 'தத்துவ' வகுப்பு இனிக்க ஆரம்பித்து விட்டது! அந்த அளவுக்கு மாணவர்களை சலிப்படைய வைக்காது. அதே சமயம் கடினமான உயர்ந்த தத்துவங்களையும் புரியும்படி அவர், வகுப்பை எடுத்தவிதம் மாணவர்களை ஈர்த்தது. தத்துவ வகுப்பு என்றாலே ஓட்டம் பிடிக்கக் காத்திருந்த மாணவர் வட்டம், விரும்பி அவர் வகுப்புக்கு வர ஆரம்பித்தது.

அது மட்டுமா? இந்தியத் தத்துவங்கள் இத்தனை மேன்மையானவையா என்ற திகைப்பும் அவர்களுக்கு எழுந்து. அதிக ஈடுபாட்டுடன் பாடத்தைக் கவனிக்கத் தூண்டியது. இவர் தத்துவ வகுப்பை எடுக்கும்விதம், மற்ற வகுப்புகளுக்கும் பரவ, வேறு பாடம் எடுத்த மாணவர்கள் கூட இவரது வகுப்புகளுக்கு வந்து கேட்கத் தொடங்கினர். அதனால் தத்துவ வகுப்பில், அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு கூடுதல் எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பார்கள். இடமின்றி வெளியே நின்று கேட்பவர் கூட்டமும் உண்டு!

கல்லூரி நிர்வாகம் அந்த முக்கிய அறிவிப்பை அந்தத் தத்துவப் பேராசிரியரின் வகுப்பில் வெளியிட புத்திசாலித்தனமாக முடிவு செய்து அறிவித்தது!

அந்தப் பெருமைமிக்க பேராசிரியர், தன்னை எல்லாம் அறிந்த மேதையாக எண்ணிக் கொள்ளவில்லை. மாணவர்களுக்குச் சந்தேகம் எழக்கூடிய இடங்களைக் கவனித்து கவனித்து விளங்க வைப்பார். அவரது இல்லத்தின் படிப்பறை அவர் உறங்கிய நேரம் போக மற்ற நேரங்களில் சந்தேகம் கேட்க வரும் மாணவர்களால் நிறைந்து காணப்படும். தன் வகுப்பில் படித்த நூற்றுக்கணக்கான மாணவர்களைத் தவிர, ஆர்வம் காரணமாகத் தன் வகுப்புக்கு வரும் பல மாணவர்களின் பெயர், அவர்களுடைய ஊர், அந்த ஊரின் சிறப்பு ஆகியவற்றையெல்லாம் அவர் தனது கம்ப்யூட்டர் மூளையில் பதிவு செய்து வைத்திருந்தார். யாராவது ஒரு மாணவனை வெளியே சந்திக்க நேர்ந்தால், பெயரிட்டு அழைத்து விசாரிப்பார்.

இந்த அளவுக்கு மாணவர்களின் அன்பைக் கவர்ந்திருந்த அந்தப் பேராசிரியர், பதவி உயர்வு பெற்று புகழ்பெற்ற கல்கத்தா பல்கலைக் கழகத்திற்குப் போகப் போகிறார் என்றதும் மாணவர்கள் கண்கலங்கினார்கள். அவர் வகிக்கப் போகும் பதவி, சாதாரணமானது அல்ல. பெருமைக்கு உரியது என்பதால் அவர்களால் தடுக்க முடியவில்லை.

மாணவர்கள் தங்கள் பேராசிரியரைப் பிரியும் நாள் வந்தது. விடைதரும் விருந்து முடிந்த பிறகும் மாணவர்கள் அவரை விடவில்லை. அவரை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல இரட்டைக் குதிரை போட்ட கோச் வண்டி தயாராகக் காத்திருந்தது. ரயிலுக்கு நேரமாகி விட்டது. மாணவர்கள், தங்கள் பேராசிரியரை அலக்காகத் தூக்கி வந்து உட்கார வைத்தனர். கோச் வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளை அவிழ்த்து விரட்டி விட்டுத், தாங்களே குதிரைகளாகி வண்டியை ரயில் நிலையத்திற்கு இழுத்து வந்தனர்! ஆமாம், சாமி வைத்துத் தேரிழுப்பது போலத் தான் செய்தார்கள்!

இந்த அளவுக்கு மாணவர்களின் அன்பைப் பெற்றிருந்த அந்தப் பேராசிரியர் வேறு யாரும் அல்ல. உலகப் புகழ்பெற்ற தத்துவ ஞானி என்று இன்றும் மதிக்கப்படும் அமரர் டாக்டர். எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களே! மைசூர் மகாராஜா கல்லூரியில் தத்துவப் பேராசிரியராக அவர் இருந்தபோதுதான் இது நடந்தது!


மழைக்கு வரி போட்ட மன்னன்!


அமைப்பு: ரே. ஓவியம்: கரோ





அரசர் பயணம் செய்த போது -
ஆற்றங் கரையில் —
நதிக் கரையில் இத்தனை மக்களா?
கிணறு - களுக்கு வரி போட்டதால் பலரும் கிணறை மூடி விட்டார்கள்... நதியைப் பயன் படுத்துகி - றார்கள்...
அப்படியானால் நதியைப் பயன் படுத்தவும் வரி போடுங்கள்! ...
இது அநியாயம் அரசே! ...
... இப்படி வரி போடும் முதல் மன்னர் தாங்களாகத்தான் இருப்பீர்கள்... வேண்டாம் அரசே!
நான் ராஜா! முடிவு என்னு - டையது! செயல் படுத்த வேண்டியது நீங்கள்! ...


மன்னர் தவறைத் திருத்த வேண்டியது அமைச்சர் கடமை...
அரசர் கட்டளையை நிறைவேற்று-வதும் அமைச்-சர் கடமையே!...
மன்னியுங்கள் மன்னா. அமைச்சர் பதவியில் இருந்து விலகிக் கொள்-கிறேன்...
மகிழ்ச்சி! உங்கள் சம்பளம் மிச்சம். நானே ராஜா, நானே மந்திரி!...
மக்கள்-
நதியைப் பயன்படுத்த வரியா?
பைத்தியக்கார ராஜ்யமாகி விட்டதே!...
வேறு இராஜ்ஜியம் போய் விடலாம்!
ஆமாம், அதுதான் சரி!



நதிக்கரை எங்கு காவல் –
போடப்பட்டது...
நீரைக் குடிப்பவர்களும்...
குளிப்பவர்களும் கைது செய்யப்பட்டு...
விசாரணையில் –
வரி செலுத்தாது நதியைப் பயன்படுத்துவது குற்றம். ஐம்பது பொன் அபராதம்! இல்லை பதினைந்து நாள் சிறை வாசம்...
இது அநியாயம்! நதி இயற்கையின் நன்கொடை. அதைப் பயன்படுத்த வரி போடுவது அடுக்காது...
இழுத்துச் செல்லுங்கள் இந்த மடையனை!...
ஒருநாள் –
பார்த்து விட்டான் ஒரு காவலன்...



முனிவரே! வரி கட்டி இருக்கிறீர்களா?
வரியா? எதற்காக?...
நதியைப் பயன்படுத்துவதற்காகத்தான். இது அரசர் கட்டளை!
பைத்தியக்காரக் கட்டளை இருந்தாலும்... முனிவர்களுக்குப் பொருந்தாது!...
யாராக இருந்தாலும் வரி கட்ட வேண்டும். மீறினால் சிறைத் தண்டனைதான்!
அரசவையில் —
காவலாளி முனிவரைக் கூட்டி வந்தான்...
மன்னவா, இம்முனிவர் நதியைப் பயன்படுத்தினார். வரி கட்ட மறுக்கிறார்...
பதில் என்ன முனிவரே?...


நதியில் நீராடியது உண்மை... அதற்கு வரி கேட்பது அக்ரமம்...
இது ராஜாவான என் கட்டளை!...
அரண்மனை, மாடமாளிகைகள் மனிதர் கட்டியது. அதற்கு வரி கேட்பதையாவது அனுமதிக்கலாம்...
...ஆனால்-நதி இயற்கையின் நன்கொடை. மனிதரின் சொத்து அல்ல!...
என் நாட்டில் ஓடுவதால் எனக்கு உரிமையானது!...
அப்படியானால் அதை உன்னால் விற்க முடியுமா?
வாங்க ஆள் இருந்தால் விற்பேன்! யாரும் தடை செய்ய முடியாது...
அப்படியானால், இந்த நதியை நானே வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை?



ஒரு லட்சம் பொன்! தர முடியுமா உங்களால்?
இதோ, வாங்கிக் கொள்!...
முனிவர் கையை அசைக்க...
பொன் மாரி பொழிந்தது...
நதியருகே சென்று...
தாயே, நதிதேவி! மக்களுக்குப் பயன்படாது இக்கொடுங்கோலனிடம் இருப்பது நியாயமில்லை. என் கமண்டலத்துக்குள் வந்து விடு...
நதியைப் பயன்படுத்தக் கூட வரி விதித்த கொடுங்கோல் மன்னா...



... நீ தாகத்திற்குத் தவிக்கும் போதுதான் மக்கள் படும் துன்பம் தெரியும்!
முனிவர் மறைந்தார்...
அரண்மனையில் –
தண்ணீர் இன்றி என்ன பண்ண முடியும்?...
குடிக்கக் கூட நீர் இல்லையே?
தாகம் தொண்டையை வரட்டுகிறதே!...
மக்கள் எல்லோரும் நாட்டை விட்டு ஓடினார்கள்...
எனக்கும் தாகம் தாங்க முடியவில்லையே...
பேராசைக்கு எல்லையே இல்லையா? நதியைக் கூடவா விற்பார்கள்?...



வைத்தியக்கார முனிவர்னு எண்ணினேன்...
இப்போது நீங்கள் வைத்தியமாகி விட்டீர்கள்!...
ராணி! அரை குவளை தண்ணீராவது குடிக்கக் கிடைக்குமா?...
எத்தனை ஆயிரம் பொன் கொடுத்தாலும் ஒரு பாலாடை நீர் கூட நம் இராஜ்ஜியத்தில் கிடைக்காது. நகரமே காலி!...
தாகம் தொண்டையை முறிக்கிறதே... ஐயோ...
இப்படித்தானே வரி கட்ட முடியாத ஏழைகளும் தாகத்தால் தவித்திருப்பார்கள்?
முனிவர் சொன்னது சரியே! தாகத்தால் தவிக்கும் போதுதான் மக்கள் படும் துன்பம் தெரியும் என்றார். தெரிந்து விட்டது!
கிணறுகளுக்கு வரி விதிக்கும் போதே அமைச்சர் தடுத்தார். கேட்கவில்லை. ஆறுகளுக்கு வரி போட்டதும் விலகிக் கொண்டார். நல்லது கூறினால் நீங்கள் கேட்பது இல்லையே?...



உண்மைதான்! இந்த நிலையிலும் உதவக் கூடியவர் பழைய அமைச்சரே! அவரிடமே யோசனை கேட்கிறேன்...
என் தவறு புரிந்து விட்டது அமைச்சரே. மீண்டு வர வழி கூறுங்கள்...
வந்த முனிவர் தெய்வ பலம் மிக்கவர். மனமிரங்கும் படி அவரையே வேண்டுவோம்...
தவறை உணர்ந்து விட்டேன். மன்னித்து நதியைத் திருப்பித் தாருங்கள்!
முனிவர் பெருமானே! மனமிரங்குங்கள். அரசருக்குக் கண் திறந்து விட்டது... அருளுங்கள்...
முனிவர் தோன்றி —
தவறை உணர்ந்ததை எண்ணி மகிழ்ச்சி...
நதியைத் திருப்பித் தாருங்கள், முனிவர் பெருமானே!


அது என் கையில் இல்லை மன்னா. நந்திதேவி வர மறுக்கிறாள்...
நந்திதேவி மனமிரங்க வழியே இல்லையா?...
இருக்கிறது. அது கடினம்!
எத்தனை கடினமானாலும் முயற்சிக்கிறேன். சொல்லுங்கள், அது என்ன நிபந்தனை?...
மக்கள் உங்களை நல்லவர் என்று புகழ வேண்டும்! இது ஆகக் கூடியதா?
கண்டிப்பாக ஆக வைப்பார் என் அமைச்சர்! அவர் மனம் வைக்க வேண்டும்!...
மக்கள் உங்களை வாழ்த்தினால், நந்திதேவி கண்டிப்பாக மனமிரங்குவாள்!
முனிவர் மறைந்தார்...
அமைச்சரே, இது உங்களால்தான் முடியும். உண்மையில் நான் நல்லவனாகி விட்டேன்...


அமைச்சர் வீட்டில் -
என்ன கவலை அப்பா?
அமைச்சர் நடந்ததைக் கூறி -
கொடுங்கோல் மன்னர் திருந்தி விட்டாராம். மக்கள் அவரை வாழ்த்துவது உடனே நடக்கக் கூடியதா?...
நடக்கும் படி நான் செய்கிறேன் அப்பா!...
திட்டத்தை விளக்கினாள்...
அடுத்த நாள் -
மன்னர் சிறையில் அடைக்கப்பட்டார்...
இளவரசர் ராஜாவானார்...
மக்கள் நாடு திரும்பினர்...
இவராவது மக்கள் குறை அறிந்தவரா இருப்பாரா?...


மதுராஜா —
அமைச்சரே! மழைநீரைப் பயன் படுத்துவோரும் இனி வரி செலுத்த வேண்டும். சூரிய ஒளி, சந்திர ஒளிக்கும் வரி விதியுங்கள்!...
மக்கள் —
பழைய மன்னரே பரவாயில்லை போலிருக்கே!...
இவரைக் காணும் போது, அவர் எவ்வளவு நல்லவர்?...
ஆமாம், பழைய மன்னர் எத்தனையோ நல்லவர்...
நதிதேவியே! மக்கள் மன்னரை வாழ்த்துவது கேட்கிறதா? மனமிரங்கி மீண்டும் வாருங்கள், மக்களை வாழ வையுங்கள்...
நதிதேவி மீண்டும் பெருக்கெடுத்தாள். மக்கள் மகிழ்ந்தனர்...
சிறையிட்டதற்கு மன்னியுங்கள் தந்தையே... எல்லாம் அமைச்சரின் யோசனைதான்...


அமைச்சரிடம் வைத்த நம்பிக்கை வீண் போக-வில்லை!
இது என் மகளின் யோசனை அரசே!...
இத்தகைய புத்திசாலியே எனக்கு ஏற்ற மருமகள்!...
மகிழ்ச்சி, அரசே!
திருமணம் நடந்தது...
மக்களுக்கு நல்லாட்சி கிடைத்தது..
கருத்து - காஷ்மீர் நாடோடிக் கதைகள்.

கலைப்பொருள் செய்வோம் - 1

நிலவு முகப் பொம்மை



கலைப்பொருள் செய்வோம் பகுதியை மீண்டும் தொடங்குங்கள் என்று சிறுவர் சிறுமியர் மட்டுமல்லாது ஏராளமான ஆசிரியப் பெருமக்களும் கேட்டு வருவதால் இப்பகுதி மீண்டும் ஆரம்பிக்கப் படுகிறது. உங்களுக் கெல்லாம் மகிழ்ச்சிதானே?

நிலவு முகப் பொம்மைகள்

தேவையான பொருள்கள்:

ஆண் பொம்மைக்கு

1. உல்லன் நூல் கறுப்பு, பழுப்பு, ரோஸ் வண்ணங்கள்.
2. பளபள பிளாஸ்டிக் முறுக்குக் கயிறு.
3. சின்ன வண்ணத் துணிக் கிழிசல் (BIT) மூக்குப் பகுதிக்கு.
4. அதிக கனமில்லாத வளையாத அட்டை. (பெட்டி மூடி கூடப் போதுமானது)
5. சிமிக்கிகள், பிளாஸ்டிக் மணிகள் (கண்களுக்கு)
6. பெவிகால் ஒரு டியூப்

முதலில் ஆண் பொம்மையை எடுத்துக் கொள்வோம்.

முகம், இரு காதுகள், தொப்பி, பின்பக்க மாட்டி, ஆகிய நான்கு பகுதிகளாகச் செய்யப் பட்டு இந்தப் பொம்மை இணைக்கப் பட்டது.

இங்கே உள்ள பொம்மையின் பகுதிகளை டிரேஸ் பண்ணி, அட்டை யில் வரைந்து வெட்டி எடுத்துக் கொள் ளவும். இப்போ முக வடிவம் தயார்.

கண்கள் உள்ள பகுதியில் நடுவில் பாசி மணியை மட்டும் வைத்துத் தைக் கவும். அதைச் சுற்றி மெல்லியதாக பெவி காலைத் தடவி, அதில் கறுப்பு நூலைக் கொண்டு வட்ட வடிவில் பிசிர் இல்லாது சுற்றவும். இப்போ கண்கள் தயார்.

மூக்குப் பகுதி கூம்பு வடிவில் உள்ளது இல்லையா? இதையும் டிரேஸ் பண்ணி வெட்டி, மெல்லிய அட்டையில் ஒட்டித் தனியாக எடுத்துக் கொள்ளவும். இதில் வண்ணத் துணிக் கிழிசல் BITடை ஒட்டி, காய வைத்து வெட்டி எடுத்துக் கொள்ளவும். இப்போ மூக்கு தயார்!

இதற்குக் கீழே கறுப்பு உல்லன் நூல் துண்டுகளைக் கொண்டு (5 நூல் BITS) மூக்கின் அடிப்பகுதியில் மீசையை ஒட்டவும். இதன் மேல் நுனியை மட்டுமே ஒட்டலாம். கீழ்ப் பகுதியை ஒட்டாமல் ஜாலர் மாதிரித் தொங்கும்படி விட்டு விட வேண்டும். இதை மூக்கு வரும் முகப் பகுதியில் ஒட்டி அதைச் சுற்றி வித்தியாசமான வண்ணத்தில் உல்லன் நூலால் பார்டர் ஒட்டவும்.


வாய்ப் பகுதியில், பெவிகால் தடவி, இதில் இரண்டு பட்டையாக பழுப்பு வண்ண உல்லன் நூலை பிசிர் இன்றி ஒட்டவும்.

இதற்குக் கீழே பெவிகால் தடவி கறுப்பு உல்லன் நூலைக் கொண்டு தாடி ஒட்டவும். இதையும்கூட மேல் பாகம் மட்டுமே ஒட்டலாம். கீழ்ப்பகுதி ஜாலர் மாதிரி ஆடிக் கொண்டிருக்க வேண்டும்.

காதுப் பகுதிகளை தனியாக டிரேஸ் பண்ணி வெட்டி மெல்லிய அட்டையில் ஒட்டி, வெட்டிக் கொண்டு முகத்தின் பின்னால் பொருத்தமாக ஒட்டி விடவும்.

தொப்பிப் பகுதியை தனியாக டிரேஸ் பண்ணி வெட்டி அட்டையை ஒட்டி, வெட்டி எடுத்துக்கொண்டு, இதன் விளிம் பில் பளபள பிளாஸ்டிக் கயிறை பெவிகால் தடவி ஒட்டி விடவும். இதன் நடுவில், சிமிக்கி அல்லது பாசி


கே.குப்புராஜ்



மணிகளை ஒட்டி விடவும். அல்லது தைத்து விடவும். வலது காது அல்லது இடது காதுக்கு அருகே 4 வரி கறுப்பு வண்ண நூலை ஒட்டி விடவும். இது குல்லா வைத்த பிறகு காது களுக்கு வெளியே தலைமுடி நீட்டிக் கொண் டிருப்பது போலவே இயற்கையாக இருக்கும்.

அரைசாண் நீளத்திற்கு இரட்டைப் பட்டை யாக எந்த வண்ணத்தில் வேண்டுமானாலும் உல்லன் நூலை எடுத்து, முறுக்கி, மடக்கி, பின் னால் நுனிகளைச் சேர்த்து வைத்து, பெவிகால் தடவி, அதற்கு மேல் கிழிந்த துணி பிட்டை ஒட்டி விடவும். இது முறுக்கு நூல் பிரியாமல் இருக்க. இப்போ பின்பக்க மாட்டி தயார்!

பெண் பொம்மைக்கும் இதே முறைதான். வித்தி யாசம் தாடி. இது முகத்துக்கு மேல் நெற்றிப் பகுதியில் வர வேண்டும். அதற்குமேல் நீண்ட ஸ்லைடு பகுதி. அதில் ஜிகினா பொட்டு. மூக்குப் பகுதி கூம்பு வடிவத்தில் இல்லாமல், வட்ட வடிவில் (கண் களைப் போல்) ரோஸ் அல்லது ஆரஞ்சு வண் ணத்தில் இருக்கலாம். கூடவே பட்டையாக இரட்டைப் பின்னல் பின்னி முடிவில் பளபள ரிப்பன் வைத்து முடிந்து தலையில் பின்பக்கமாக காதுப் பக்கம் ஒட்ட வேண்டும்.



இந்த இரு நிலவு முகப் பொம்மைகளையும் எந்தச் சுவரில் மாட்டினாலும அந்த இடமே புது அழகு பெறும்.

உங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு போதிய தபால் தலையுடன் திரு. கேகுப்புராஜ், கைவினைப் பொருள் பயிற்சியாளர். ஜவகர் சிறுவர் இல்லம், அரசினர் தோட்டம். காந்தி இல்லம். சென்னை - 600 002. முகவரிக்கு எழுதவும். தொலைபேசி எண் 5768905)



உதயன் எங்கே?

1. புயல் வலுத்தது!

சீறி எழுந்து வந்த கடல் அலைகள் பேரிரைச்சலோடு பொங்கிப் பாய்ந்து, கரையோரப் பாறைகளில் படீரென்று மோதி, பல்லாயிரம் நீர்த் திவலைகளாகச் சிதறி விழுந்தன. மணல் பரப்பின் மீது வெண் நுரையாய்ப் படர்ந்த அலை வெள்ளத்தில் மிதந்து வரும் மீன்களைக் கொத்திக் கொண்டு பறந்த கடல் நாரைகளும், காகங்களும் அருகே கிடந்த கட்டு மரங்களில் அமர்ந்து நிதானமாகத் தின்னலாயின.

வானம் புகைபடிந்த கண்ணாடி போல் மேகங்கள் நிறைந்து மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மணல் வெளிக்கு அப்பால், தென்னந்தோப்புகளுக்குள் சிதறிக் கிடந்த ஆழிக் குப்பத்தின் குடிசைகளில் உட்கார்ந்திருந்த மீனவர்கள், கடலையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லோர் முகங்களிலும் சோர்வும், கவலையும் அதிக மாகக் காணப்பட்டது. கடலுக்கு அவர்கள் மீன் பிடிக்கச் சென்று அன்றோடு மூன்று நாட்களாகி விட்டன.

மேகம் மூடிக்கிடந்த வானத்தைக் கவலையோடு உற்று நோக்கிய நல்லைய்யா, தன்னருகே உட்கார்ந்திருந்த உதயனிடம், "மூணு நாளா வானம் மூடிக்கிடக்கு. புயல் வரும் வரும்'னு சொல்றாங்க... ஆனா புயலையும் காணோம். வாயில்லா ஜீவன்களுக்கும் கூட உணவு தந்து காப்பாத்தற கடலம்மா, சில நேரம் நம்மை இப்படித்தான் பட்டினி போட்டுச் சோதிச்சுடறா" என்றார் சோர்வுடன்.

மூன்று நாட்களாகச் சரியாகச் சாப்பிடாததால் சோர்ந்திருந்த உதயன் தன் தகப்பனாரைப் பார்த்து, "இயற்கை யாருக்கும் பாரபட்சம் காட்டறதில்லேப்பா... இந்த மாதிரி நிலமைகளை யோசிச்சு, நாமதான் முன் ஜாக்கிரதையாக இருந்திருக்கணும்..." என்றான்.

"நீ சொல்றது உண்மைதான். ஆனால், என்னதான் மீன் பிடிச்சாலும், அது வாய்க்கும் வயிறுக்கும் போதமாட்டேங்குதே...? அலை மேல போராட நமக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லாம வாழ்க்கையோடேயும் போராடும்படி ஆகிப் போச்சே!" என்ற போது நல்லைய்யாவின் குரலில் வேதனையும், விரக்தியும் சேர்ந்திருந்தது.


பசியினால் உதயனின் முகம் வாடியிருப்பதைக் கவனித்தவர், தன் மடியை அவிழ்த்து ஓர் ஐந்து ரூபாய் நோட்டை

எடுத்து அவனிடம் நீட்டினார். "நாலு ரோட்டுக்குப் போய் டீயும், பன்னும் வாங்கிச் சாப்பிட்டுட்டு வா" என்றார் பரிவுடன்.

அதை வாங்கிக் கொண்ட உதயன், "நீங்களும் வாங்கப்பா. ரெண்டு பேரும் போகலாம், உங்களுக்கும் பசிக்குமே?" என்றான்.

"எனக்குப் பசிக்கல. நீ போய்ச் சாப்பிட்டுட்டு வா.... வானம் வெளி விழுந்த மாதிரி இருக்கு... சாயங்காலத்துக்குள்ள நல்லா வெறிச்சுடும்."

அப்போது ஆழிக் குப்பத்திலுள்ள மீனவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து கும்பலாக வந்தனர். அவர்களில் ஒருவன் ''நல்



லைய்யா, வானம நல்லா வெறிச்சிருக்கு... கடல்ல இறங்கறதா நாங்க முடிவு பண்ணிட்டோம்.... மீன் பிடிக்கப் போகாம குழந்தை குட்டியெல்லாம் வயிறு காஞ்சு கிடக்கு. நீ என்ன சொல்றே?'' என்று கேட்டான்.

உதயன் பதற்றத்துடன் தன் தகப்பனாரைப் பார்த்தான். பிறகு "இன்னும் இருபத்து நாலு மணி நேரத்துக்கு புயல் அபாயம் இருக்குன்னு நேற்றைக்கு சாயங்காலம் ரேடியோவில் சொன்னாங்க" என்று எச்சரிக்கும் தொனியில் சொன்னான்.

நல்லைய்யா பதிலளிப்பதற்குள் ஒருவன் குறுக்கிட்டு, "அதுதான் மூணு நாளா சொல்லிக்கிட்டு இருக்கானுங்களே? இப்படி எத்தனை தடவை சொல்லிச் சொல்லி கடைசியில ஒண்ணுமில்லாம போயிருக்கு? இதுக்கெல்லாம் பயந்தா நம்ம பிழைப்பு ஆகுமா? நீ என்ன சொல்றே நல்லைய்யா?" என்று கேட்டான்.

நல்லைய்யா உதயனைத் தயக்கத்துடன் பார்த்தார். "உதயா, நீ போய்ச் சாப்பிடு. வானம் நல்லா வெறிச்ச மாதிரித்தான் இருக்கு. புயலெல்லாம் இன்னிக்கு வராது. பயப்படாதே'' என்று அவனைச் சமாதானப் படுத்தும் தோரணையில் சொன்னார்.

அவர்களுடைய திட்டம் உதயனுக்கு சற்றும் பிடிக்கவில்லை. தன் தகப்பனாரைத் தடுக்கும் பொருட்டு "நீங்க இன்னைக்குக் கடலுக்குப் போக வேண்டாம். இன்னும் ஒரு நாள் பசியைப் பொறுத்

வி.ர. வசந்தன்

துக்கிட்டா ஒண்ணும் ஆயி டாது'' என்று திண்ணை யில் அமர்ந்து கொண்டான்.

அவன் சொன்னதைக் கேட்ட மீனவர்கள், "என்ன லேய், கிளம்பும் போதே அச்சாணியம் புடிச்ச மாதிரி பேசற...? எப்ப புசல் வரும். எப்ப வராதுன்னு இத்தனை வருஷமா மீன புடிக்கிற எங்களுக்குத் தெரியாதா? ரேடியோக்காரன் பேச்சைக் கேட்டுகிட்டு எத்தனை நாள் வயிறு காஞ்சு கிடக்க முடி யும்...? நீ வேலையைப் பாப் பியா?" என்று அவன் மீது பாய்ந்தான்.

நல்லைய்யா உதயனின் தலைமயிரை வாஞ்சை யுடன் வருடியவாறு, "கிழக்கே மேகம் கலைஞ்சு வெட்ட வெளியாட்டம் வெறிச்சிருக்கு பாரு... இனி பயமில்லே. நீ போய்ச் சாப்பிட்டு வந்து படி.... நாங்க விரசா வந்திருவோம்" என்றார்.




அவர்களை இனியும் தடுக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியும். பசி காதை அடைக்க, மன மில்லா மனதோடு எழுந்து சென்றவன் மனதில் இனம் தெரியாத பீதியும், கலக்க மும் எழுந்து அலைக்கழித்தன.

நாற்சந்தியை அடைந்தவன் அங்கிருந்த தேனீர்க் கடைக்குச் சென்று இரண்டு பன் னும் தேனீரும் வாங்கிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான்.

இந்த மூன்று நாட்களாகத் தன் தகப்பனாரும் அதிகமாக எதுவும் சாப்பிட வில்லை என்பது நினைவுக்கு வரவே ஒரு பன்னை காகிதத்தில் மடித்து எடுத்துக் கொண்டு, தேனீரைப் பருகலானான். அப்போது கடையிலிருந்த வானொலியில் கேட்ட அறிவிப்பு சட்டென்று அவனது கவனத்தை ஈர்த்தது.

'... முக்கிய வானிலை அறிக்கை'- கிழக் குக் கடலில் உருவாகியிருந்த காற்றழுத்த மண்டலம் மேலும் தீவிரமாகி இருப்பதால், கரையோர கிராமங்களில் இருக்கும் மீன வர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாமென்று எச்சரிக்கப்படுகிறார்கள். குறிப்பாக அரியாங்குப்பம், ஆழிக்குப்பம், சேந்தன் மேடு செம்படவன் பட்டி போன்ற மீனவ கிராமங்களில் வசிப்பவர் கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். புயல் இன்று மாலையிலோ அல்லது இரவிலோ கரையைக் கடக்கலாம் என்று எதிர்பார்க் கப்படுகிறது. முதலாம் எண் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது' மீண்டும் சொல்கிறோம்... ஒரு முக்கிய வானிலை



அறிவிப்பு..."

உதயனுக்குப் பகீரென்றது. இந்நிலையில் அவனது தகப்பனாரும், மற்றவர்களும் கடலுக்குள் செல்ல முயற்சிக்கிறார்கள்! அவன் பாதி குடித்த தேனீரை அப்படியே வைத்து விட்டு அவர்களை மீண்டும் எச்சரிக்க எழுந்து ஓடினான்.

மூச்சிரைக்கத் தன் குடிசையை அடைந்தவன், திடுக்கிட்டு நின்றான். அவன் தகப்பனார் நல்லைய்யா அங்கு இல்லை. ஆழிக்குப்பத்தில் இருந்த குடிசைகளின் திண்ணைகள் எல்லாம் வெறிச்சோடியிருந்தன. எல்லோரும் கடலுக்குப் போய் விட்டார்கள்!

அவன் தொண்டை ஒழிய, "புயல் வலுத்திருச்சாம்! எல்லோரும் போயிட்டாங்க. யாராச்சும் போய்ச் சொல்லுங்களேன்? முதலாம் புயல் கூண்டு ஏத்தியாச்சாம்" என்று கத்தினான்.

அவனது கூச்சலைக் கேட்டுக் குடிசைக்குள் இருந்து வெளியே வந்த மீனவப் பெண்கள் கேலியாகச் சிரித்தனர். கடலுக்குச் செல்லாத முதியவர்களும், சில இளைஞர்களும் அவனைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

குப்பத்தின் தலைவராகிய கருத்தமுத்து, அவனை அமைதிப்படுத்த முயன்றவராக, "கத்திக்குப் பயந்தவன் சண்டைபோட முடியுமா தம்பி? புயலுக்குப் பயந்தவன் மீனவன் இல்லை. காற்றையும் மழை



நெல்லிக்காய்

உருண்டை வடிவில் நெல்லிக்காய்
உறிஞ்சித் தின்ன நெல்லிக்காய்
புருவம் சுருங்கச் செய்திடும்
புளிப்பில் கூட நெல்லிக்காய்

ஊட்டம் மிக்க வைட்டமின்
உடனே வழங்கும் நெல்லிக்காய்
பட்டி தொட்டிகள் எங்குமே
பரவிக் கிடக்கும் நெல்லிக்காய்

அவ்வை பாட்டி ஆயுளை
அதிகம் செய்த நெல்லிக்காய்
எவ்வகை யோர் ஆயினும்
எளிதில் வாங்கும் நெல்லிக்காய்

மார்கழி மாதம் பிறந்திடில்
மலிந்து கிடைக்கும் நெல்லிக்காய்
நீர்ப்பிடி தும்மல் குணமாக
நிச்சயம் உதவும் நெல்லிக்காய்

மருத்துவ ரிடமும் போகாமல்
மருந்துச் சீட்டும் வழங்காமல்
கருத்தாய் நோய்களைத்
தவிர்ப்பதற்கு
கடவுள் அளித்த நெல்லிக்காய்!

— செல்லகணபதி

யையும் பார்த்தா நம்ம பிழைப்பு நடக்குமா? நீ பயப்படாம இரு" என்றார்.

இவர்கள் யாரும் சென்று எச்சரிக்கப் போவதில்லை. மனம் பொறுக்காமல் கடற்கரையை நோக்கி ஓடினான் அவன்.

நெளிந்து நெளிந்து வந்த அலைகளின் மீது, அசைந்து அசைந்து மீன் பிடிப் படகுகள் பாய் விரித்து வெகு தொலைவில் செல்வதைக் கண்டான்.

அவன் கைகளைக் குவித்து வாயில் வைத்துக் கொண்டு "புயல் வலுத்திருச்சாம்.... திரும்பி வந்துருங்க, திரும்பி வந்துருங்க" என்று கத்தியது கடலின் பேரிரைச்சலிலும், காற்றின் ஊளையிலும் கேட்கப்படாமல் போயிற்று. படகுகள் மேலே மேலே சென்று கொண்டேயிருக்க, அவன் செய்வதறியாது திகைத்து நின்றான்.

தொண்டை வலிக்கக் கத்திக் கத்தி சோர்ந்து போனவன் பசி மயக்கமும் ஒன்று சேர, அப்படியே கடற்கரை மணலில் அமர்ந்து விட்டான்.

படகுகள் கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுத்து, புள்ளியாகி கடல் விளிம்பில் காணாமல் மறைந்து போயின.

பெரிய சிறகுகளை விரித்து கடல் நாரைகளும், கடற் காகங்களும் 'க்வெய்க், க்கெய்க்' என்று ஒலி எழுப்பியவாறு ஆகாயத்தில் மிதந்து கொண்டிருக்க, கீழே கண்ணுக்கு எட்டிய தூரம் வரை விரிந்து பரந்து கிடந்தது நீலக் கடல்.

அதில் அலைகளோடு எழுந்து, தாழ்ந்து கொண்டிருந்த மீன் படகுகளில் இருந்த மீனவர்கள் பெரும் வலைகளைக் கடலில் வீசிவிட்டு மீன்களுக்காகக் காத்துக் கிடந்தனர்.

பொழுது இருட்டுவதற்குள் கரை திரும்பி விட வேண்டும் என்ற அவசரமும், எதிர் பார்த்தது போல மீன்கள் ஒன்றும் வலையில் அகப்படாத ஏமாற்றமும் முகங்களில் பிரதிபலிக்க, அவர்கள் நிலையிழந்து தவித்துக் கொண்டிருந்தனர்.

சூரியன் மேற்குத் திசையில் இறங்க ஆரம்பித்த நேரத்தில் காற்று நின்று போய் கடல் நிசப்தமாயிற்று. அலைகள் கூட இல்லாமல் கடல் அமைதியாக இருந்தது. இறுக்கமான அந்த நிலையை உணர்ந்த மீனவர்களின் முகங்களில் அச்சம் தோன்றியது. ஏனென்றால் கடலின் இந்த

அமைதி, புயல் வருவதற்கான முதல் அறிகுறி!

திடீரென்று ஒரு படகிலிருந்த மீனவர் ஒருவர், "அதோ பாருங்க, கிழக்கே மேகம் திரளுது!" என்று கூச்சலிட்டார். எல்லோரும் அவர் காட்டிய திசையைப் பீதியுடன் பார்த்தனர். அடி வானத்தில் கரும் மேகங்கள் சுருள் சுருளாகத் திரள ஆரம்பித்திருந்தன.


"நல்லைய்யா, உன் மகன் சொன்னது சரியாப் போச்சு! உண்மையிலேயே புசல் வந்திரும் போலிருக்கு!" என்று அச்சத்துடன் குழறினார் ஒரு முதியவர்.

நல்லைய்யா மற்றவர்களைப் பார்த்து, "எல்லா வலைகளையும் இழுத்து உள்ளே போடுங்க. கிடைச்ச வரைபோதும்... பாயையெல்லாம் சுருட்டி வச்சிரலாம்.. இந்த இறுக்கம் புசலுக்கு அடையாளந்தான்" என்றார் பதற்றத்துடன்.

அவர்கள் பரபரவென்று தங்கள் படகுகளில் விரித்துக் கட்டியிருந்த பாய்களை அவிழ்த்துச் சுருட்டலாயினர். கடலிலிருந்து வலைகளை இழுத்துப் படகுகளில் ஏற்றுவதற்குள் வானம் இருண்டு போயிற்று. கருப்பு மேகங்கள் ஆகாயம் முழுவதையும் திரள்திரளாய் கவ்விக் கொள்ள எங்கும் ஒரே அந்தகாரம் சூழ்ந்தது. அந்த இருளைக் கிழித்துக் கொண்டு மின்னல்கள் பயங்கரமாக நெளிந்தன. குளிர்ந்த காற்று விர்ரென்று வீசத் தொடங்கி வரவர வேகம் அதிகமாயிற்று.

பலங்கொண்ட மட்டும் தண்டு வலித்து அவர்கள் படகுகளைக் கரையை நோக்கிச் செலுத்த ஆரம்பித்தனர். 'ஐலசா, ஐலேசா' என்ற சத்தம் காற்றின் ஓசையையும் மீறிக் கொண்டு அந்தக் கடல் பிராந்தியத்தில் ஒலித்தது.

வானத்தையே வெடிவைத்துத் தகர்ப்பது போல் இடிமுழக்கம் எழுந்து எங்கும் பயங்கரமாக எதிரொலித்தது. 'ஊய்ய" என்று பெரும் சத்தத்துடன் வீசிக்கொண்டிருந்த ஊழிக் காற்று சுழன்று சுழன்று அடிக்க ஆரம்பித்தது. வானம் கிழிந்து விட்டதைப் போல 'சோ'வென்று பெரும் மழை வெள்ளமாகக் கொட்டியது. அதில் வானம் எது கடல் எது, மழை எது என்று ஒன்றுமே தெரியவில்லை. எங்கும் ஒரே இருள் மயமாக இருந்தது.



"அவருக்கு பேனா மட்டும் இருந்தா போதும். எழுதிகிட்டே இருப்பாரு... மையே தீராது..."
"எப்படிச் சொல்றே...?"
"அவர்தான் 'ஆமை'யாச்சே."
– எம். கே. வேங்கவேல்

அலைகள் சீறியெழுந்து அவர்களது படகுகளைத் தாக்கின. சுழன்று வீசிய புயலில் படகுகள் எங்கெங்கோ இழுப்புண்டு போயின. தனித்தனியே சிதறியடிக்கப் பட்ட படகுகளில் இருந்தவர்கள் கரையும் தெரியாமல், திசையும் தெரியாமல் தத்தளித்தார்கள். உதவிக்காக அவர்கள் போட்ட கூச்சல் பக்கத்திலிருந்த படகுகளுக்கே கேட்கவில்லை.

நாற்புறமும் பயங்கரமாக எழுந்து, நெளிந்து கோரதாண்டவமாடிய அலைகள் அந்தப் படகுகளை நீருக்குள் மூழ்கடித்தும், மேலே தூக்கி வீசியும் பந்தாடின.

திடீரென்று பெரும் அலையொன்று, பனைமர உயரத்திற்கும் மேலோக எழுந்து, தங்கள் எதிரே ஒரு நீர் மலை போல் நகர்ந்து வரக் கண்டார்கள். மீனவர்களின் பீதி நிறைந்த ஓலம், புயல் காற்றோடு கலந்து பயங்கரமாக ஒலித்தது. அந்த இராட்சத அலை அவர்களைப் படகுளோடு சேர்த்து வானத்தை நோக்கி உயர்த்தியது. அடுத்த நொடியில் அதல பாதாளத்தில் தள்ளியது!

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாகப் பேயாட்டம் போட்ட புயல் ஒரு வழியாக ஓய்ந்து, கடல் அமைதியானபின், உடைந்து சிதறிய படகுகளின் மரத்துண்டுகள் மட்டுமே கடலில் மிதந்து கொண்டிருந்தன!

உதயனின் தந்தை நல்லைய்யாவின் தலைமையில் புறப்பட்ட மீனவர்கள் என்னவானார்கள்?


(தொடரும்)



"மெட்ராஸ் சுத்தி பார்க்கணும்னு எங்கப்பாகிட்டே சொன்னது தப்பாப் போச்சு. மெட்ராஸ்லருந்து ஒரு சுத்தி வாங்கி வந்து பாருங்கறார்!"
- பா. ஜெயக்குமார்
சிரிப்...
"நான் பாஸானா எங்கப்பா ஸ்கூட்டர் வாங்கித் தருவாராம். பெயிலானா சைக்கிள்தானாம்."
"சைக்கிள் கிடைச்சதும் எனக்கும் ஒரு ரவுண்ட் ஓட்டக் குடுடா."
- பா. ஜெயக்குமார்
"பாம்பண்ணே, எதுக்கு பத்திரிகை கொடுக்கறீங்க?"
"என்னோட புது 'புற்று'க்கு கிரகப்பிரவேசம்."
- பா. ஜெயக்குமார்
சிரிப்...
சிறுவன் 1 : நம்ம அரசர் ஏண்டா உடைவாளை உருவி நாய் முன்னாடி போட்டுட்டார்?"
சிறுவன் 2 : அது "வாள்-வாள்"னு கத்துச்சே. அதான்!
- ஆர். ஜெயசுந்தர்
"நாங்க ஊருக்குப் போகும் போது பஸ்ஸுக்கு விபத்து!"
ஐயையோ உங்களுக்கு ஒண்ணும் ஆகலையே!"
"எப்படி ஆகும்? விபத்து நடந்தது பக்கத்து பஸ்ஸுக்கு."
- தி. வே. சிவசங்கர்.

எய்துவோம் மாட்சி!





'கொக்கரக்கோ' என்று சேவல்
கூவிடும் காலை! - நீ
குறட்டை விட்டுத் தூங்கிடாமல்
எடுத்திடு நாலை!

அக்கரையாய்ப் படிப்பதற்கே
அதிகாலை வேளை! - என்று
ஆரம்பித்தால் தேர்வில் வெற்றி
அடைகுவாய் நாளை!

குக்கூ! குக்கூ! குக்கூ! என்று
குயில்களும் பாடும்! - அந்தக்
குயிலினோசை கேட்டு நெஞ்சம்
குதூகலம் போடும்!


அக்கணமே கணக்குபோடு!
அதன் பலன் கூடும்! - செய்யுள்
அனைத்தும் கூடமனனம் ஆகும்!
அகம்மகிழ்ந் தாடும்!


'செக்கச் செவேல்' என்று வானம்
திரியும் சிவக்கும்! - பயிற்சி
செய்து பார்க்கும் நேரம் நெஞ்சம்
தினமும் உவக்கும்!

அக்கம் பக்கம் எல்லாம் "கீச்கீச்"
ஆயிரம் சத்தம்! - பறவை
அனைத்தும் எழுந்து பாடும்கீதம்
அழைத்திடும் நித்தம்!

இக்குளிர்ந்த காலை நேர
இயற்கையின் காட்சி! - நாம்
என்றும் கண்டு பணிகள்செய்தே
எய்துவோம் மாட்சி!

- நெல்லை கணபதி







பட்டுப் பட்டுப் பூக்கள் பார்க்கப் பார்க்க அழகு!

குழந்தைகளும், மலர்களும், இல்லையேல் உலகமே ஒரு பாலைவனம் தான் என்றார் நேருஜி. மலர்கள் தோட்டங்களையும், வீட்டையும், சூழ்நிலையையும் அழகு படுத்துகின்றன.

பெரும்பாலான பூக்களில் சிறிதளவாவது தேன் இருக்கும். இந்தத் தேன் இல்லா விட்டால் வண்டுகளும், பூச்சிகளும் மலர்களைத் தேடி வரா. இப்படி வரா விட்டால் மகரந்தச் சேர்க்கை நடக்க வாய்ப்பு இல்லாது தாவரங்களின் பெருக்கம் நின்று விடும். அதனால் மலர்களுக்குள்ள மணமும், தேனும் இயற்கையன்னை தந்துள்ள நன்கொடை.

பூவை விரும்பாத குழந்தைகள் கிடையாது. அழுகின்ற குழந்தைக்கு முன்னால் வண்ண மலர் ஒன்றைக் காட்டுங்கள். ஒரு நிமிடமாவது அழுகையை நிறுத்திவிட்டு மலரைப் பார்க்கும். இதனால்தான் குழந்தைகளுக்கான பூங்காக்களில் மலர் தரும் செடிகளை வைக்கிறார்கள்.

இறைவனைப் புகழ்ந்து பாடாத கவிஞர்கள் உண்டு. ஆனால் மலரைப் புகழ்ந்து ஒரு பாடலாவது பாடாத கவிஞர்கள் இடையவே கிடையாது. காவியங்களிலும், இலக்கியங்களிலும் மலர்களுக்குத் தனி இடமுண்டு. எல்லா மதங்களும் இறைவனை வழிபட ஏற்றதாக மலர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது வியப்பான உண்மை!

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தேசிய மலர் உண்டு. நமக்குத் தாமரை. சங்க காலத்தில் மூவேந்தர்கள் ஒவ்வொவருருக்கும் தனித் தனியாக ஒரு மலரும், அந்த மலரால் ஆன மாலையும் இருந்தன.

மலர்கள் அழகுக்காக மட்டுமின்றி மருந்தாகவும் உணவாகவும்கூடப் பயன்படுகின்றன. வெப்பமான சூழ்நிலையைக் குளுமையாக்கும் தன்மை மலர்களுக்கு உண்டு. அதனால்தான் பூந்தொட்டிகளை அறைகளில் வைக்கிறார்கள். அறைக்குள் வைத்தால் வாடி விடும் என்பதற்காக தினமும் பூந் தோட்டிகளை மாற்றுகிறார்கள்.

இதையே தொழிலாகச் செய்யும் நிறுவனங்களும் உள்ளன. வருத்தம், மகிழ்ச்சி, வாழ்த்து, நேசம் போன்ற உணர்ச்சிகளை வெளியிட மலர்ச் செண்டுகளைப் பயன்படுத்துகிறோம். மலர்த் தோட்டம் நல்ல இலாபம் தரும் தொழிலும் கூட. மதுரையில் அரும்பு விடும் மல்லிகை, விமானத்தில் எட்டே மணி நேரத்தில் மாஸ்கோ போய் விடுகிறது. பறித்த மலர்களை ஒரு வாரம் வரை வாடாதவாறு செய்ய ஆராய்ச்சி மூலம் வழிகளும் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

குழந்தையின் கள்ளமில்லாத சிரிப்புக்கு ஈடு இணை இல்லை. இதனால்தான் இதை "பூக்கும் சிரிப்பு" என்கிறோம். மலர்ப் பூப்பது போலல்லா குழந்தைகளின் முகத்தில் தவழும் புன்னகையும் பூக்கிறது!

அட்டையில் : மலர் சேகரிப்பவர்கள் சிறுமி பிந்து, சிறுவன் திருவரசன்.
வண்ணப்படம் : ஸ்ரீஹரி



சித்திரங்களை சீசாக்குள் சிறை வைக்கும் சிறுவன்!

காகிதத்தில் ஓவியம் வரைவதைப் பார்த்திருக்கிறோம். துணிகளில் பெயிண்டிங் பண்ணுவதையும் கண்டிருக்கிறோம். தோல், மரத்துண்டு, ஓலை நறுக்குகள், அட்டை, எனாமல் தட்டு கண்ணாடி ஆகியவற்றில் கூட ஓவியம் தீட்டுவதையும் கண்டு வியந்திருக்கிறோம். இவை எல்லாம் பொருள்களின் மேல் வரையும் ஓவியங்கள் ஆனால், பத்தாவது படிக்கும் பாலமுருகன் ஒரு வித்தியாசமான ஓவியன். இவன் கண்ணாடி சீசாவுக்குள் தான் வரையும் சித்திரங்களைச் சிறை வைக்கிறான்! புரியவில்லையா? பாலமுருகன் கண்ணாடி புட்டிகளுக்குள்ளேயே ஓவியங்களைத் தீட்டுகிறான்!

முருகன், முதலமைச்சர், காமராசர், நேருஜி, காந்தி, பறவைகள், விலங்குகள், கட்டடங்கள், இயற்கைக் காட்சிகள் என்று பாலமுருகன் வரைந்துள்ள, பாட்டிலுக்குள் சிக்கிக் கொண்டு சிரிக்கும் வண்ணச் சித்திரங்களைக் கண்டபோது அதிசயமாக இருந்தது.

பாலமுருகனுக்கு இந்த ஆற்றல் எப்படி ,வந்தது? சிறுவனாக இருக்கும் போதே இவனுக்குள் இருந்த ஓவிய ஆர்வம் வெளிப்பட்டுள்ளது. இவன் வரைந்த சாமி படங்கள், நண்பர், உறவினர் வீட்டின் பூஜை அறைகளை அலங்கரித்துள்ளன. பாலமுருகனின் வீட்டில், பூஜையில் இருக்கும் முருகன், இவன் பல ஆண்டுகளுக்கு முன் வரைந்த வண்ண ஓவியம்.

இந்தத் திறமை இவனுக்குப் பரம்பரையாக வந்ததா? விசாரித்த போது, பாலமுருகனின் தந்தை சிவராமன் சொன்னார் :

"எங்கள் குடும்பத்தில் எனக்கோ, என் கூடப் பிறந்தவர்களுக்கோ

ஓவியத்தில் ஆர்வம் இல்லை. என் தாய் வழி மாமா சங்கரபாண்டியன் என்பவர் மதுரையில் உள்ள பள்ளியில் ஓவிய ஆசிரியராக இருக்கிறார். ஆனால் இதுவரை பாலமுருகன் அவரைப் பார்த்தது கூடக் கிடையாது."

ஏழாவது படிக்கும் போதே பாலமுருகன் வரைந்த பல ஓவியங்கள் பள்ளியில் நடத்தப்பட்ட போட்டிகளிலும் அக்கம் பக்கத்தில் உள்ள சேவை, கலை, இலக்கிய அமைப்புகள் நடத்திய போட்டிகளிலும் பரிசு பெற்றுள்ளன. வீட்டுக் கூடத்தை அழகு செய்யும் சுவர்க் கடிகாரம் கூட பாலமுருகனுக்குப் பரிசாகக் கிடைத்ததுதான்.

வசதி மிக்க குடும்பத்துக் குழந்தைகளுக்கு, பெற்றோரே ஓவிய சாதனங்களை வாங்கிக் கொடுத்து, ஓவியங்களை வரையத் தூண்டி, ஆர்வம் இல்லாவிட்டாலும் கூட ஆர்வம் வரும்படி செய்வார்கள். ஆனால், இந்த வாய்ப்பு பாலமுருகனுக்கு இல்லை. தந்தை சிவராமன் சாதாரண கோணி வியாபாரி. மிகவும் கஷ்டப்படும் வசதி இல்லாத குடும்பம். சாதாரண வண்ணப் பெட்டி, பிரஷ், காகிதங்களை வாங்கித் தரக்கூட வசதி இல்லாத நிலை. ஆனாலும், மகனுக்கு இருந்த ஆற்றலை நன்கு உணர்ந்து கொண்ட பெற்றோர் மற்ற செலவுகளைக் குறைத்துக் கொண்டு எப்படியும் அவனுக்குத் தேவையானதை வாங்கித் தர முடிவு செய்தனர். குறிப்பாக அம்மா பாண்டியம்மாள் காசைச் சிக்கனப்படுத்தி பாலமுருகனுக்குத் தேவையான ஓவிய சாதனங்களை வாங்கித் தந்து மகனின் ஓவியத்திறமை வளர உதவியாக இருக்கிறார்.

இதனால் வீட்டில் பிரச்னைகள் எழமலா இருக்கும்? அவனுக்கு மட்டும் என்ன ஸ்பெஷல் கவனிப்பு என்று மற்ற குழந்தைகள் முகம் சுளிக்காமலா இருப்பார்கள்? இத்தனையையும் சமாளித்து மகனின் ஓவிய ஆர்வத்தை நசுக்காமல் வளர்த்துள்ள பெற்றோரின் தியாக உணர்வை எத்தனை பாராட்டினாலும் தகும்.

1989 ஆம் ஆண்டில் சென்னை நகரப் பள்ளி மாணவர்களுக்காக நடந்த ஓவியப் போட்டியில் பாலமுருகன் முதல் பரிசு பெற்று, அமைச்சர் அன்பழகன் அவர்கள் கையால் பரிசும் வாங்கித் தனக்குள்ள திறமையை பெரிய அளவில் வெளிப்படுத்தினான். இவனது ஆர்வத்தைப் பாராட்டும் வகையில் இவனது மாமா ஒரு சைக்கிளைப் பரிசளித்திருக்கிறார். அதில்தான் பாலமுருகன் பள்ளி சென்று வருகிறான்.



புட்டிக்குள் ஓவியம் வரைவதை எப்படிக் கற்றான்?

"நண்பன் வீட்டில் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்த போது, ஆந்திராவைச் சேர்ந்த ஓர் ஓவியர், இந்த மாதிரி ஓவியங்களை பாட்டிலுக்குள் வரைவதைக் காட்டினார்கள். எனக்கும் ஓவிய ஆர்வம் இருந்ததாலும் பாட்டில் ஓவியம் புதுமையாக இருந்தாலும்,

உடனே அதே மாதிரி நானும் செய்ய ஆரம்பித்தேன். முதலில் சிரமமாக இருந்தாலும் போகப் போக இதைப் பழகிக் கொண்டு விட்டேன். நான் காகிதத்தில் வரையும் அருமையான ஓவியங்களைப் பாராட்டாத பலரும் கூட புட்டிக்குள் ஓவியம் வரைவதை வியப்புடன் பார்த்துப் பாராட்ட ஆரம்பித்தார்கள். பத்திரிகைகளில் என் படமும் குறிப்பும் வந்த பிறகு எல்லோரும் என்னை கவனித்துப் பார்க்கிறார்கள்," என்றான் பாலமுருகன்.

"பள்ளியில், உன் திறமைக்கு ஊக்க மூட்டுகிறார்களா?"

பாலமுருகன் ஒரு அழகிய எச்.எம்.டி. கைக் கடிகாரத்தைக் கொண்டு வந்து காட்டினான்.

"இது, என்னைப் பாராட்டி பள்ளியில் வழங்கிய பரிசு. மீட்டிங் ஹாலில் எல்லா மாணவர்களும் கூடியிருந்த போது, பரிசளித்தார்கள்."

பாலமுருகன் ராயபுரம் பி.கே.எ. பழனிச்சாமி நாடார் பள்ளியில் 10வது படிக்கிறான். வடசென்னைப் பகுதியில் மிகச் சிறப்பாகக் கல்வித் தொண்டாற்றி வரும் இப்பள்ளி பிளஸ் டூவில் 97% வெற்றியைக் காட்டியுள்ளது. தலைமை ஆசிரியர் பெரியாண்டவரும் சரி, பள்ளியின் ஆசிரியப் பெருமக்களும் சரி பாலமுருகனுக்கு உற்சாகமூட்டி ஊக்குவிக்கிறார்கள்.

கண்ணாடி புட்டிக்குள் ஓவியம் வரைவதை செயல்முறையாகப் பள்ளியில் செய்து காட்டி பலரது ஆர்வத்தைத் தூண்டியிருக்கும் பாலமுருகன், நமக்கு எதிரேயே ஓர் ஓவியத்தை புட்டிக்குள் வரைந்து காட்டினான். ஓர் ஓவியத்தை வரைய சுமார் இரண்டு மணி நேரம் ஆகிறது. முதலில் கருப்பு பிரஷ்ஷில் ஸ்கெச் செய்து வரைந்து கொண்டு உலரவிட்டு, பிறகு வண்ணம் தீட்டுகிறான். ஒவ்வொரு வண்ணமும் உலரும் வரை காத்திருந்து, அடுத்த வண்ணத்தைத் தீட்ட வேண்டும். இதற்கு என்று, சாதாரண பிரஷ்ஷின் நுனியை வளைத்துக் கொள்கிறான். அப்புறம் கைகள்தான் பேசுகின்றன!

"உன் இலட்சியம் என்ன?"

"பத்தாவதை முடித்துவிட்டு ஓவியக் கல்லூரியில் முழு நேரம் படிக்க வேண்டும். நான் சிறந்த ஓவியனாக வேண்டும்."

வியக்க வைக்கும் திறமை குவிந்திருந்தும், வசதி இல்லாத இந்த ஓவியக் கம்பனை, ஆதரித்து உலகறிய வைக்க எந்த சடையப்ப வள்ளல் முன் வரப் போகிறாரோ!

— ரே

வண்ணப்படங்கள் : ஸ்ரீஹரி



பழங்களை எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாமா?

கேட்கட்டுமா டாக்டர்?

● தே.சஞ்சய்காந்தி, பொய்யாப்பக்கம்

?நான் இரவில் மண்ணெண்ணெய் விளக்கில் படிக்கிறேன். இதனால் கண்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா?

! விளக்கின் வெளிச்சம் போதிய அளவுக்கு இருந்தால் போதும். அது மண்ணெண்ணெய் விளக்காக இருந்தாலும் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது.


● செ.பா.பிரபாகரன், குருசாமிபாளையம்

? எனக்கு கை, கால்களில் சிரங்கு அதிகமாக ஏற்படுகிறது. எந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டும்?

!சிரங்கு நோயைக் குணப்படுத்த பல மருந்துகள் உள்ளன. 25 சதவீதம் பென்சைல் பென்சோவேட், 1 சதவீதம் காமாபென்சீன் ஹெக்சா குளோரைடு, 10 சதவீதம் குரோட்டமிட்டான்,, டெட்மசால், 5 சதவீதம் பெர்கு மெத்ரின் இவற்றில் ஒன்றை குடும்ப மருத்துவரின் ஆலோசனைப்படி உபயோகித்தால் சிரங்கு நோய் குணமாகும். வீட்டில் உள்ளவர்கள் அனைவருமே ஒரே நேரத்தில் இந்த மருந்தை உபயோகித்தால்தான் உனக்கு சிரங்கு மீண் டும் வராது.

●கண்மணி சுப்பு. வேதையா சித்திரவேலு. கருப்பம்புலம்

?சிறுவர்களுக்கு பழங்களை எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாமா?



!அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதைக் கேள்விப்பட்டதில்லையா? பழங்கள் சிறுவர்களுக்குத் தேவைதான். அதற்காக அவற்றை அளவுக்கு மீறிக் கொடுத்தால் வாந்தி, வயிற்றுப் போக்கு, அஜீரணம் மற்றும் சத்து மிகைக் கோளாறுகள் தோன்றுவதற்கு வாய்ப்புள்ளன. கவனம்!

● எஸ் .வினோத் பாபு, கபிஸ்தலம்

?ஹை ட்ரஜன் பெராக் ஸைடு' என்பது என்ன? இது மருத்துவத் துறையில் எதற்குப் பயன் படுகிறது?


! ஹைட்ரஜன் பெராக் ஸைடு' (HYDROGEN PER OXIDE) என்பது நிறமற்ற, மணமற்ற, ஒரு ANTI SEPTIC திரவம். இது மருத்துவத் துறையில் புண், காயம், சீழ்க்கட்டி போன்றவைகளைச் சுத்தப் படுத்தப் பயன்படுகிறது. இது ஒரு 'ஆக் ஸிஜன் மிகுப்பி' (OXIDIZING AGENT)யாகச் செயல்படுவதால், காயங்களின் மீது இந்தத் திரவத்தை ஊற்றியவுடன், நுரை கிளம்புகிறது. இதன் மூலம் நம் கண்ணுக்குத் தெரியாமல் காயங்களில் மறைந்திருக்கும் அழுக்குகள்கூட நுரையில் வெளிக் கிளம்பி வெளியேறி விடுகின்றன. சீக்கிரம் புண்கள் ஆறுவதற்கு இது உதவுகிறது. மேலும் காதைச் சுத்தப்படுத்துவதற்கும். வாய் நாற்றத்தைப் போக்குவதற்கும் இந்த திராவம் பயன்

படுகிறது.

● ஏ.ஞானப்பிரகாஷ், (ஊர், பெயர் இல்லை)

?லிம்ஃபோ சார்க்கோமா' என்ற பெயரில் ஒரு வியாதி உள்ளதாமே? அப்படி என்றால் என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன், டாக்டர்!

!லிம்ஃபோ சார்க்கோமா' (LYMPHO SARCOMA) என்பது ஒரு வகைப் புற்று நோய். இது நம் உடலில் உள்ள நிணநீர்க் கழலைகளில் ஏற்படுகிறது. கழுத்து, அக்குள், தொடை, இடுக்குப் பகுதிகளில் இந்தப் புற்றுநோய்க் கட்டிகள் வளரும். இரத்தம் வழியாக மற்ற உடல் உறுப்புகளுக்கும் பரவும். உயிருக்கு ஆபத்துத் தருகின்ற அதி தீவிரப் புற்றுநோய் இது என்று சொன்னால் அது மிகையல்ல!



டாக்டர்

கு.கணேசன்

● மு.முதலியப்பன், புதுவயல்

? கோபம் அதிகமாக வருகிறது. இதைக் கட்டுப்படுத்த ஒரு வழி சொல்லுங்கள் பார்ப்போம்!

! ஒரு வழி என்ன, மூன்று வழிகள் சொல்கிறேன். தியானம்! தியானம்! தியானம்!

● ஜெ.சுரேஷ், சீர்காழி


?என் கண்களுக்குப் பவர் உள்ளது. கண்ணாடி அணிந்துள்ளேன். கண்ணாடி போடுவதால் கண்கள் உள்ளே போய் விடுமோ, கண் ஓரங்களில் கருப்பு விழுந்து விடுமோ என்று அச்சப்படுகிறேன். கண்ணாடியைக் கழற்றி விட ஆசைப்படுகிறேன். இதற்கு என்ன செய்யலாம் என்று அறிவுரை வழங்குங்கள், டாக்டர்!

உன் பிரச்சனைகளை மிக எளிதில் தீர்த்து விடலாம் சுரேஷ்! நீ கண்ணாடியே அணிய வேண்டியதில்லை. கண்ணாடிக்குப் பதிலாக 'காண்டாக்ட் லென்ஸ்' (CONTECT LENS) அணிந்துக் கொள். இது கண்ணுக்குள் இருப்பதே வெளியில் தெரியாது! உடனடியாக ஒரு கண் மருத்துவரிடம் சென்று காண்டாக்ட் லென்ஸை மாட்டிக் கொள். போதுமா?

● சு.அருணாதேவி, தக்கோலம்

? அடிசன் நோய் என்றால் என்ன? எதனால் ஏற்படுகிறது? என்ன விளைவுகள் ஏற்படும்? என்ன சிகிச்சை? எப்படித் தடுப்பது?

நம் சிறுநீரகங்களின் மேல், தொப்பி போல உட்கார்ந்துள்ளவை அட்ரீனல் சுரப்பிகள்! இவை அட்ரீனலின் என்ற இயக்குநீரைச் சுரக்கின்றன. இந்த அட்ரீனலின் குறைவாகச் சுரந்தாலோ அல்லது சுத்தமாகச் சுரக்காவிட்டாலோ ஏற்படும் நோய்தான் அடிசன் நோய்! (ADDISION'S DISEASE) ஒவ்வாமை, காச நோய், புற்றுநோய், அட்ரீனலின் அறுவை சிகிச்சை, மூளைக் காய்ச்சல், குருதி நச்சேற்றம் (SEPTICAEMIA) போன்றவற்றால் அட்ரீனல்கள் பாதிக்கப்படும்போது இந்த நோய் ஏற்படுகிறது. இதன் விளைவால் உடல் இளைக்கும். வாந்தி, மயக்கம் அடிக்கடி வரும். உடல் பலவீனமாக இருக்கும். ரத்த அழுத்தம் குறையும். எடை குறையும். தோல் கறுத்து விடும். இதைக் குணப்படுத்த 'கார்ட்டிசோன்' (CORTI SONE) மாத்திரைகள் தரப்படும். இந்த நோய்க் குரிய காரணங்களை மருத்துவரின் ஆலோசனைப்படி தவிர்த்தால் தான் அடிசன் நோயை வரவிடாமல் தவிர்க்க முடியும்.


YIPEE!
It's
GOKULAM
The monthly magazine for children
CARTOONS
STORIES
MYTHOLOGY
PUZZLES
FACT FILE
CARTOONS
MYTHOLOGY
FACT FILE
ACTIVITY
PUZZLES
STORIES
ACTIVITY
PUZZLES
MYTHOLOGY
CARTOONS
STORIES
FACT FILE
ACTIVITY
96 pages for just Rs. 5!
SEPTEMBER '96 ISSUE ON SALE!
GOKULAM, EKKADUTHANGAL, MADRAS - 600 097.

திக்...திக்...திக் கதைகள்

பயமின்றிப் படியுங்கள்!

ஆட வந்த பேய்!





பரிசளிப்பு விழா முடியும்போது மணி எட்டரை. முத்துவுக்கு பேச்சுப் போட்டியில் முதல் பரிசு. வள்ளிக்கு கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு. இவை தவிர மற்ற பரிசுகள் ஆறு. பரிசு பெற்ற மாணவர்கள் சார்பில் நன்றி கூற முத்துவை அழைத்தார்கள். அவன் நன்றி கூறிவிட்டு இறங்கும்போது மணி எட்டு நாற்பது.

"வள்ளி, அப்பாவோ அம்மாவோ வந்திருக்கிறார்களா?" என்று தங்கையிடம் கேட்டான் முத்து.

"நானும் அதைத்தான் பார்க்கிறேன். கண்ணில் பட்டவரை இரண்டு பேரையும் காணோம். கண்டிப்பா ரெண்டு பேருமே வரதா சொல்லியிருந்தாங்க" என்றாள் வள்ளி.

கூட்டம் கரைந்து கொண்டிருந்தது. காற்று "ஜில்"லென்று வீசி, மழை பெய்யும் சூழ்நிலை இருப்பதை உணர்த்தியது. மழைக் கோட்டுக் கூடக் கொண்டு வரவில்லை. இருபது நிமிஷம் சைக்கிளில் போயாக வேண்டும்.

"இனிமே காத்திருப்பது அசட்டுத்தனம். வந்திருந்தால் இத்தனை நேரத்திற்கு நம்மை வந்து சந்தித்திருப்பார்கள். அவர்களுக்கு வர முடியாம என்ன அசௌகரியமோ?" என்று சைக்கிளை எடுத்து வந்தான் முத்து. வள்ளியும் தனது சைக்கிளை எடுத்து வந்தாள். பெரிய பிளாஸ்டிக் பையில் பரிசுக் கோப்பைகளைப் போட்டு ஹேண்ட்பாரில் மாட்டிக் கொண்டார்கள்.

எதிர்க் காற்றில் சைக்கிளை மிதிப்பது எளிதாக இல்லை. மழை வேறு சிறு தூறலாக ஆரம்பித்திருந்தது. தெருவுக்குள் நுழைந்தபோது மணி ஒன்பதே முக்கால்! மழை பலமாகப் பிடித்து விட்டது.

"என்னண்ணா, நம்ம வீட்டுல விளக்கு வெளிச்சமே காணோம்!" என்று தன் சந்தேகத்தை வெளியிட்டாள் வள்ளி.

அந்தக் காட்சி, முத்துவுக்கும் கலக்கத்தைக் கொடுத்தது என்றாலும், வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"மின்தடையோ என்னவோ?" என்றான் தங்கையை சமாதானப்படுத்தும் நோக்கில்,

"பக்கத்து வீடு, எதிர் வீடு, நம்ம தெருவுல எல்லார் வீட்டிலும் விளக்கு எரிகிறதே?"

முத்துவால் பதிலளிக்க முடியவில்லை. ஆனால் இனம்புரியாத கலக்கம் மனத்தில் எழுந்தது.

வீட்டு வாசலில், கதவில் தொங்கிய பூட்டுதான் அவர்களை வரவேற்றது. இதற்குள் பக்கத்து வீட்டு ஜன்னல் திறந்தது.

"முத்து, வள்ளி இங்கே வாங்க" என்று

சின்னபாபு

பக்கத்து வீட்டுக்காரர் அழைத்தார். அவர் நிரந்தர ஆஸ்துமா நோயாளி. பகலிலே கூடக் கதவைத் திறக்க மாட்டார்.

இருவரும் போனார்கள்.

''உங்க பெரியப்பாவுக்கு உடம்பு மோசம்னு தந்தி வந்து, அப்பா அம்மா ரெண்டு பேரும் கிளம்பிப் போயிருக்காங்க. இந்த சாவியை உங்ககிட்டே தரச் சொன்னாங்க. நாளை இரவுக்குள் திரும்பி வருவாங்களாம்.''

சாவியை ஜன்னல் வழியாகவே தந்து விட்டு உடனே 'சடக்'கென்று கதவை மூடிக் கொண்டார் வீட்டுக்காரர்.

முத்து கதவைத் திறக்கவும் மின்சாரம் போகவும் சரியாக இருந்தது. வள்ளி குத்து விளக்கையும் மெழுகுவர்த்தியையும் ஏற்றினாள். முத்து டார்ச் லைட்டைத் தேடி எடுத்தான். மழை, இடியுடன் சேர்ந்து சக்கைப்போடு போட்டது. காற்று வேறு ஊளையிட்டது.

அண்ணனும் தங்கையும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுத்துக் கொண்டார்கள். தூக்கம் வரவில்லை.

மழை சத்தத்தையும் மீறிக் கொண்டு, தெரு நாயின் ஓலமும், அது உயர்ந்து உச்சநிலைக்குப்போய், பிறகு மெதுவாக அடங்குவதும் தெளிவாகக் கேட்டன. யார் வீட்டிலோ ஜன்னல் கதவு 'படீர் படீர்' என்று அடித்துக் கொண்டது. வகை தெரியாத பயம் இருவர் மனத்திலும் நிறைந்தது.

"படால்" என்று மாடியில் ஏதோ சத்தம் கேட்டது. தொடர்ந்து யாரோ மாடிக் கதவைத் தட்டுவது போல் ஒரு நெருடல்! முதலில் பிரமையாக இருக்கும் என்று முத்து எண்ணித் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.

"அண்ணா" என்று வள்ளி அழைத்தாள் மெதுவாக.

"என்னது! நீ இன்னுமா தூங்கலே?" என்று கேட்டான் முத்து.

"இல்லே. தூக்கம் வரலே... மாடிக் கதவை யாரோ தட்டற மாதிரி சத்தம் கேட்குது இல்லே?"

தங்கையும் கேட்ட பிறகு அது பிரமை இல்லை என்ற முடிவுக்கு வந்தான் முத்து.

"ஆமாம். எனக்கும் அப்படித்தான் கேட்குது. போய்ப் பார்க்கலாமா?"

''வேண்டாம். பக்கத்து வீட்டு மாமாவைக் கூப்பிடலாம்.''

''அவரையா! இந்தவரை நமக்காகக் காத்திருந்து அவர் சாவி தந்ததே பெரிய காரியம். எதுவாக இருந்தாலும் நாம் தான் சமாளிக்க வேண்டும். நீ இங்கேயே இரு. நான் போய்ப் பார்த்து விட்டு வரேன்.''

''ஐயையோ, நான் இங்கே தனியாக இருக்க மாட்டேன். நானும் உன்னோடு வரேன். உனக்கு ஆகிறது, எனக்கும் ஆகட்டும்.''



டார்ச் லைட் வெளிச்சத்தில் இருவரும் மாடிப்படி ஏறினார்கள். பாதியில் நின்று, டார்ச்சை அணைத்து விட்டுக் கவனித்தார்கள்.

மாடிப்படிக் கதவை யாரோ தேய்த்துத் தேய்த்துத் தட்டும் சத்தம் விட்டு விட்டுக் கேட்டது. சில சமயம் தட்டல் பலமாக இருந்தது. சில சமயம் இலேசாக இருந்தது.

மேல் தாழ்ப்பாள், கீழ்த் தாழ்ப்பாள், நடுத் தாழ்ப்பாள் போட்டு, கதவு உட்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்தது. கீழே அடிப்பக்கம் இடுக்கு வழியாக சாரல் நீர் கசிந்து கொண்டிருந்தது.

"கதவு பலமாகப் பூட்டப்பட்டுத்தான் இருக்கு. நாம திறக்கவே தேவையில்லை," என்றாள் வள்ளி.

முத்துவும் அதையேதான் எண்ணி

னான். எனவே இருவரும் திரும்ப வந்து படுத்துக் கொண்டு தூங்க முயன்றார்கள்.

"சலங் சலங்"கென்று இனிமையான சலங்கை சத்தம் கேட்டது!


"வள்ளி, உனக்கு ஏதாவது சத்தம் கேட்கிறதா?"

"ஆமாண்ணா, சலங்கை சத்தம் கேட்கிறது!"

"எனக்கும் கேட்கிறது. கொல்லைப்பக்கத்தில் இருந்துதான் சத்தம் வருகிறது. போய்ப் பார்க்கலாம் வா!"

வள்ளி, அண்ணனின் கையைப் பிடித்துத் தடுத்தாள்.

"அண்ணா, மோகினிப் பிசாசா இருக்குமோ? அதுதான் இப்படி சலங்கை சத்தத்தோட நடக்குமாம்! மழையில கூடவா



மோகினி வரும்! எனக்குப் பயமா இருக்கு. போக வேண்டாம்."

''போக வேண்டாம்மா, ஆனா, கொல்லைக் கதவு சரியா பூட்டியிருக்கான்னு பார்க்க வேண்டாமா? நீயும் என்னோட வா. போய்ப் பார்த்திட்டு வந்திடலாம்.''

டார்ச் லைட்டைப் பிடித்த போது முத்துவின் கைகள் நடுங்கின! அவனுடைய கையைப் பிடித்த போது, வள்ளியின் கைகள் நடுங்கின.

இருவரும் மெதுவாக நடந்து கொல்லைக் கதவுக்கு அருகே வந்தார்கள்.

"சலங் சலங் சலங்"

''என்னண்ணா! சலங்கை சத்தமே தான்! சந்தேகமே இல்லை."


முத்து டார்ச் அடித்துப் பார்த்தான். எல்லாத் தாழ்ப்பாளும் இடப்பட்டு, உட்பக்கம் கொக்கி போடப்பட்டிருந்தது.

"எல்லாத் தாழ்ப்பாளும் சரியாத்தான் இருக்கு. போயிடலாம். மோகினிப் பிசாசு அறைஞ்சா, இரத்தம் உறைந்து போயிடுமாம். வம்பு வேண்டாம். வா போகலாம்."

இருவரும் வந்து படுத்துக் கொண்டார்கள். சலங்கை சத்தம் விட்டு விட்டுக் கேட்டது. மழை பலத்தது. மாடிக் கதவைத் தட்டும் சத்தம் இப்பொழுது பலமாகக் கேட்டது.

"மாடிப் படிக்கு ஒரு கோணியைப் போட்டுட்டு வரலாம். சாரல் தண்ணியை இழுத்துக்கும்" - சொன்னது வள்ளிதான்.

டார்ச் வெளிச்சத்தில் ஒரு கோணியைத் தேடிப் பிடித்து எடுத்துக் கொண்டு மாடிப்படிக்கு விரைந்தார்கள். கோணியைத் தூக்கிப் போடப் போன வள்ளி, "ஆ...அ..."வென்று அலறினாள்!



உனக்கு நீச்சலே தெரியலே, நல்ல நீச்சல் மாஸ்டர்கிட்ட டிரெயினிங்குக்கு விடுனும். **காசி.நடராஜன், பரங்கிப்பேட்டை**

முத்து டார்ச் வெளிச்சத்தைத் திருப்பினான். மாடிக்கதவின் இடுக்கு வழியாக சாரல் நீர் கசிந்து வழிந்து மாடிப் படிகளில் பாம்பைப்போல் நெளிந்து இறங்கிக் கொண்டிருந்தது. அப்படி வழிந்து இறங்கிக் கொண்டிருந்த நீர், செக்கச் செவேல் என்ற வண்ணத்தில் இருந்தது!

''இது இரத்தமேதான். மோகினிப் பிசாசு மாடியில் யாரையோ அடித்துப் போட்டிருக்கு. அந்த காயத்தின் இரத்தமே இது!'' என்றாள் வள்ளி பீதியுடன்.

முத்துவுக்கு உடலெல்லாம் நடுங்கியது. மோகினிப் பேய் இன்னும் என்னவெல்லாம் பண்ணுமோ? அண்ணனும் தங்கையும் படுக்க மனம் வராமல் உறங்காமல் ஒரு மூலையில் ஒடுங்கிக் கொண்டனர். அதே நிலையில் எப்பொழுது தூங்கினார்களோ அவர்களுக்கே தெரிய வில்லை.

பால்காரியின் கூக்குரல் கேட்டு அண்ணனும் தங்கையும் எழுந்தனர். மழை நின்றிருந்தது. விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

மாடிப்படிகளில் கசிந்து வந்திருந்த சிவப்பு திரவம் கீழ்ப்படியில் தேங்கி நின்றிருந்தது. பொழுது விடிந்து வெளிச்சம் வந்து விட்ட துணிச்சலில், முத்து வள்ளி பின் தொடர மாடிக்குச் சென்றான். படியை ஒட்டியிருந்த தாழ்வாரத்தில் கட் டப்பட்டிருந்த துணி உலர்த்தும் மூங்கில் கொடி, ஒரு பக்கம் அறுந்து, அறுந்த முனை கதவைத் தொட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது! கொடியில் உலர்த்தி யிருந்த அம்மாவின் புது சிவப்புப் புடவை, சரிந்து, மழைநீரில் நனைந்து, சாயத்தை வெளியேற்றிக் கொண்டிருந்தது!

இருவரும் ஓடிச் சென்று கொல்லைக் கதவைத் திறந்தனர்.

"தம்பி, எங்க வீட்டுப் புதுப் பசு, இடியோசையில் மிரண்டு அறுத்துக் கொண்டு வேலியை எல்லாம் தாண்டிக் குதித்து, உங்க வீட்டுக் கொல்லைத் தாழ்வாரத்தில் வந்து படுத்திருக்கு" என்றார் நான்காவது வீட்டுக்காரர். பசுவின் கொம்பில் மாட்டப்பட்டிருந்த சலங்கை, அது தன் கழுத்தை அசைத்த போதெல்லாம் "சலங் சலங்" சத்தத்தை எழுப்பி ஒலித்தது!

அப்பாவும் அம்மாவும் நடந்ததைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர்.

நீர்நாய் குரைக்குமா?

ரேவதி



கோடையாறு சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. காலை மணி எட்டாகி விட்ட போதிலும் பனி இன்னும் விலக வில்லை. கரையோரமாக இருந்த குடிசை யில் இருந்து டேக்னா வெளியே வந்தான். அவனுடைய இடது கையில் வட்டமாக டீ வடிகட்டி போல் அமைந்த பெரிய மீன்பிடி வலை இருந்தது. வலது கையில் ஒரு பெரிய பிளாஸ்டிக் வாளி.

"டுர்ரீ....! டுர்ரீ.....! டுர்ரீ.... ரீ....ரீ!"

டேக்னாதான் இரு பக்கமும் பார்த்துக் குரல் கொடுத்தான். அடுத்த வினாடி அடர்ந்த புதிர் வரிசையில் இருந்து ஐந்து நீர் நாய்கள் "ம்ங்க," "ம்ங்க்" என்று மகிழ்ச் சிக் குரல் கொடுத்தபடி ஓடி வந்தன. பின் னங்கால்களால் நிமிர்ந்து நின்று டேக்னா வின் முகத்தை ஆவலுடன் நோக்கின.

"செல்வி, சூனா, பண்டா, விந்தி, மூக்கா" என்று ஒவ்வொன்றாகப் பெயர் சொல்லி அவைகளை அன்புடன் அழைத்த டேக்னா, "ரெடியா? நாம மீன் பிடிக்கப் போகலாமா?" என்று கேட்டான்.

"ம்ங்க, ம்ங்க" என்ற மகிழ்ச்சி முனகலோடு ஐந்தும் ஆற்றறை நோக்கி விரைந்தன. டேக்னா பின் தொடர்ந்தான்.

சாலையில் ஜீப் வரும் சத்தம் கேட்டது. டேக்னா நின்று திரும்பிப் பார்த் தான். மாவட்ட ஆட்சியரின் ஜீப், கீழே மலைப் பாதையில் வளைந்து வளைந்து வந்து கொண்டிருந்தது.


"செல்வி, சூனா நீங்க எல்லோரும் ஆற்றுக்குப் போய் நீந்திக்கிட்டிருங்க. கலெக்டர் ஜீப் வருது. என்னன்னு கேட் டுட்டு நான் நொடியில வந்திடறேன்" என் றான் டேக்னா.

"ம்ங்க், ம்ங்க்" சத்தமும், "கிச் மூச்" சத்த மும் மிக வேகமாகக் கேட்டன. நீர் நாய் கள் ஐந்தும் ஒன்றை ஒன்று துரத்தி ஓடிப் பிடித்து விளையாடியபடி நதியை நோக் கிய பாதையில் விரைந்தன.

சில நிமிடங்களில் 'ஜீப்' மேலே ஏறி, டேக்னாவுக்குப் பின்னால் வந்து நின்றது. முன் சீட்டில் இருந்து மூக்குக் கண்ணாடி அணிந்த ஒருவர் இறங்கினார். அவர்தான் கோடையாறு உச்சி கேம்ப் அரசு விருந்தினர் விடுதியின் காப்பாளர் பெரி யண்ணன்.

"ஐயா வணக்கங்க!" என்று கை குவித் தான் டேக்னா.

"நல்லவேளை, உன்னையே பார்த்துட் டேன்" என்று மகிழ்ச்சியடைந்த பெரி யண்ணன், "தம்பி, இன்னிக்கு மாலை அமைச்சர் வரார். அறுபது மீனாவது கிடைக்குமா? உங்கிட்டேருந்து உறுதி மொழி கிடைச்சால்தான் நான் சமையல் மெனு போட முடியும்?" என்று கேட்டார்.



நீந்திச் சென்றன. பத்து நிமிடங்கள் ஓடின. நதி நீரில், நீந்தித் திரிந்து கொண்டிருந்த மீன்களை, நீர் நாய்கள் டேக்ளாவின் மீன் பிடி வலை விரிக்கப்பட்டுள்ள இடத்தை நோக்கி விரட்டித் திரள வைத்தது நன்றாகத் தெரிந்தது.

டேக்ளா வலையை மேலே உயரத் தூக்கி இழுத்தான். மேலே தூக்கிய போது மடி வடிகட்டி போல் தொங்கிய வலையில் ஏராளமான மீன்கள், சிக்கியிருந்தன! எல்லாம் துள்ளித் துடித்தன!



"அறுபது என்னங்க, நூறு மீன் வேணுமானாலும் தரேன்."

"நூறு கிடைக்குமா? நிசமாவா சொல்றே?"

"ஆமாங்க. மீன் பிடிக்கத்தான் கிளம்பிட்டிருக்கேன். இரண்டு மணி நேரத்துல நூறு மீன் தரேன். இங்கேயே இருங்க."

டேக்ளாவின் உறுதிமொழியால் திகைத்துப் போன பெரியண்ணன், "தம்பி டேக்ளா, நானும் உன்னோட வரலாமா? நீ மீன் பிடிக்கிறதை நானும் பார்க்கலாமா?" என்று கேட்டார்.

என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் குழம்பிப் போய் நின்ற டேக்ளா, "தாராளமாக வாங்க. ஆனா ஒரு நிபந்தனை. என் பக்கத்தில நீங்க உட்காரக் கூடாது. பக்கத்திலே மரத்து மேலே ஏறி மறைஞ்சு பாருங்க. அதோட, உரக்கப் பேசவோ, சிரிக்கவோ, கேள்வி கேட்கவோ கூடாது" என்றான்.

ஆற்றங்கரையை அடைந்த டேக்ளா, மீன்பிடி வலையை நீருக்குள் வீசி, விசிலடித்தான். நீரில் குதித்து, நீந்திக் கும்மாளமிட்டுக் கொண்டிருந்த ஐந்து நீர் நாய்களும், நீருக்கு மேல் தலையைத் தூக்கி, டேக்ளாவையும், வலை வீசப்பட்டுள்ள இடத்தையும் நோக்கின. பிறகு பக்கத்திற்கு ஒன்றாக நீருக்குள்

எல்லா நீர் நாய்களும் வலையைச் சூழ்ந்துக் கொண்டன. நீர் சொட்டிய, முடி அடர்ந்த தன் உடம்பை, டேக்ளாவின் மேல் தேய்த்துச் செல்லமாக முனகியது ஒன்று.

"இருங்க. உங்களுக்கு இல்லாமலா?" என்று சிரித்த டேக்ளா, ஒவ்வொன்றிற்கும் இரண்டு மீன்களை எடுத்துப் போட்டான். அவை கௌவிக் கொண்டன!

மறைவில் இருந்து வெளிப்பட்ட பெரியண்ணன், "டேக்ளா, உன்னை ஒன்னுமே தெரியாத காட்டுப் பையன்னு நினைச்சேன். இப்பத்தான் உன் திறமை தெரியுது! கால்மணி நேரத்திலே, இத்தனை எளிதா இவ்வளவு மீன்களைப் பிடிச்சுட்டியே!" என்று பாராட்டினார். பாராட்டுதல் புகழ்ச்சியைவிட, அதில் பொறாமையின் இழை கூடியிருப்பதை டேக்ளாவால் உணர முடிந்தது.

புதிய மனிதரின் வருகையால் பாதிக்கப்பட்ட நீர் நாய்கள் வாயில் கௌவிய மீன்களுடன் நீருக்குள் பாய்ந்து, தலையை மட்டும் வெளியே காட்டியபடி நின்றன.

"என்னங்க ஐயா! என் திட்டத்தையே பாழடிச்சிட்டீங்களே? சத்தம் போட்டுப் பேசினாலோ, புது மனிதர்களைக் கண்டாலோ இதுங்களுக்கு சந்தேகம். ஓடிப் போயிடும்" என்று சலித்துக் கொண்டான் டேக்ளா.



"ஓடிப் போனா என்ன? திரும்ப அழைக்க உனக்கா தெரியாது? நீதான் இந்த அளவுக்கு இதுங்களைப் பழக்கி வைச்சிருக்கியே?" என்று பாராட்டித் தட்டிக் கொடுத்தார் பெரியண்ணன்.

வலை அப்படியே சாய்ந்தது. தயாராக வைத்திருந்த பெரிய பிளாஸ்டிக் வாளியில் மீன்களைக் கவிழ்த்தான்.

"தம்பி டேக்ளா, இந்த நீர் நாய்கள் குரைக்குமா?"

"குரைக்காது. 'கிசு கிசு'ன்னு காட்டுக் கத்தலா சத்தம் போடும். 'ம்ங்க, ம்ங்க்'ன்னு முனகித் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும். அவ்வளவுதான்"

"நான் இந்தப் பக்கம் எத்தனையோ முறை வந்திருக்கேன். இதுங்க என் கண்ணுல பட்டதே இல்லையே!"

"இதுங்களுக்கு புதிய மனிதர்களைப் பார்த்தாலோ, சத்தம் கேட்டாலோ அச்சம். அதனால இரவில் மட்டும்தான் அதுவும் யார் கண்ணிலும் படாம வெளியே வந்து இரை தேடும். மீன்தான் முக்கிய உணவு. தவளை, பூச்சி, புழு, சிறு பறவைகள்ன்னு ஏதாவது கிடைச்சாலும் விடாது. பழகிய மனிதர்களிடம் அன்பாகப் பழகும். சொன்னதைப் புரிஞ்சுக்கும். நீரில் மூழ்கி மீன்களை விரட்டி, ஒரே இடத்திலே குவிய வைத்து, மீன் பிடிப்பவர்களுக்கு உதவும். கரையோரமாகப் புதர்களில் வளை தோண்டி வசிக்கும். இரண்டு மாதத்தில் பல குட்டிகள் போடும். பகல் வெளிச் சத்தில் வெளியே வரவே வராது. ஆனால், பழகியவர்கள் அழைத்தால் பகலில் கூட வெளியே வரும். இவை மற்றவர் கண்ணில் படுவது அதிசயம்."

"குரைக்கத் தெரியாத இந்த விலங்குக்கு ஏன் நீர்நாய்கனு பெயர் வைச்சிருக்காங்க?"

அறிவியல் உண்மைகள்

- நீர் நாயின் விலங்கியல் பெயர் லூட்ரா லூட்ரா (LUTRA LUTRA) முழுக்க, முழுக்க அசைவம். மீன்கள், சிறிய நீர்வாழ் உயிரினங்கள் ஆகியவை இரை.
- நீண்ட உடல். எளிதில் நெளிந்து வளைந்து வழுக்கும் வகையில் அமைந்தது. வளர்ந்த நீர்நாய் சுமார் 105-120 செ.மீ. நீளம். இதில் தடித்த வால் மட்டும் 45 செ.மீ. முடிகள் அடர்ந்த பளபளப்பான உடல். உள் முடி மென்மையானது. வெளி முடி கனமாக இருக்கும். நீர் ஒட்டாத அமைப்பு. பின் கால்கள் முன் கால்களை விடப் பெரியவை. வாத்துக்கு இருப்பது போல் ஜவ்வுடைய கால்கள். வேகமாக நீரைத் தள்ளி நீந்த இது பெரிதும் உதவுகிறது. நீருக்கு அடியில் சில நிமிஷங்கள் வரை மூச்சுப் பிடித்து நீரில் மீன்களைப் பிடிக்கும் மூக்கிலும் காதுகளிலும் நீர் புகா வண்ணம் மூடிக் கொள்ளும் அமைப்பு.
- மணிக்கணக்கில் நன்கு நீந்தும். நான் கைந்தாகச் சேர்ந்து மீன்களை விரட்டி ஒரே இடத்தில் குவிய வைத்துப் பிடிக்கும். வீட்டில் வளர்க்கலாம். நாம் கூறுவதைப் புரிந்துக் கொண்டு செயல்படும். பழகியவர்களிடம் விசுவாசத்துடன் பழகும்.
- நீர் நிலைகளின் கரைகளில் தரையில் புதர்களில் வளை கட்டி குடும்பமாக வாழும். சுமார் 60 நாட்களில் பல குட்டிகளை ஈனும்.
- இது குரைக்காது. நீரில் வாழ்வதாலும் நாய் மனிதனிடம் பழகுவதுபோல் இதுவும் பழகுவதால் நீர் நாய் என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம்.
- கோடை காலத்தில் இதன் உடலின் நிறம் மாறும்.
- நீர் நாய்களில் பல வகைகள் உண்டு.
- தோலுக்காகவும், இறைச்சிக்காகவும் இவை வேட்டையாடப்பட்டு அழியும் இனங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

"இதைப் பத்தி நான்கூட யோசிச்சேங்க. நாயைப் போலவே பழகியவர்களிடம் நன்றி விசுவாசத்துடன் இருப்பதால், இதையும் நாய் என்று அழைத்திருப்பார்கள். இரண்டு நாய் இனத்துக்கும் வித்தியாசம் தெரிய வேண்டும் என்பதற்காக, இதற்கு நீர் நாய் என்று பெயரிடப்பட்டிருக்க வேண்டும் என்பது என் கருத்து" என்றான் டேக்ளா.

"அப்படின்னா, இதை நாயை மாதிரி வீட்டுல வளர்க்க முடியுமா?"

"கண்டிப்பாக வளர்க்கலாம். ஆனா அதைச் செய்யாம இறைச்சிக்காகவும், ஈரம் நிற்காத பளபளப்பான தோலுக்காகவும் ஏராளமா வேட்டையாடறாங்களே! அதனால இதுவும் அழியும் நிலையில் இருக்கே! வீட்டுல இதை வளர்க்கனும்னா, வனவிலங்குப் பாதுகாப்பாளர் அனுமதி தேவை" என்றான் டேக்ளா.

பெரியண்ணன் முகத்தில் என்னவோ யோசனைகள் படர்ந்தன.

அடுத்த நாள், கோடையாற்றின் சின்ன அருவிக்குளம் கிராமத்தில் செல்லியம்மன் கோவிலில் தீ மிதி விழா. டேக்ளா போயிருந்தான். அதற்கு அடுத்த நாள் காலை டேக்ளா வழக்கப்படி மீன் பிடிக்கக் கிளம்பினான்.

"டுர்ர்...டுர்ர்...டுர்ர்...ர்...ர்....!"

டேக்ளாதான் இரு பக்கமும் பார்த்துக் குரல் கொடுத்தான். சாதாரணமாகவே குரல் கொடுத்தவுடன் "ம்ங்க்" "ம்ங்க்" என்று மகிழ்ச்சி முனகலோடு ஓடோடி வரும் ஐந்து நீர் நாய்களும் இப்போது வரவில்லை! டேக்ளா மறுபடியும் குரல் தந்தான். எதுவும் வரவில்லை.... அவை வாழும் புதருக்கு அருகே வந்து அழைத்தான். அப்பவும் எதுவும் வரவில்லை!

அப்பொழுதுதான் புதர் தோண்டப்பட்டுக் கிடப்பதையும், ஈரத் தரையில் பதிந்திருந்த ஜீப்பின் சக்கர அடையாளத்தையும் டேக்ளா கவனித்தான்!

அவனுக்கு எல்லாம் புரிந்து போயிற்று.

"செல்லி, சூனா, பண்டா, விந்தி, மூக்கா!" என்று கத்திய டேக்ளாவின் அலறல், மலையருவியில் பட்டு எதிரொலித்தது.

அருகில் கேம்ப்பில் இருந்த பெரியண்ணனின் காதிலும் அது விழுந்தது. அவர் சிரித்துக் கொண்டார்.



பாரதி போட்டி

செப்டெம்பர் மாதம் என்றதுமே பாரதியாரின் நினைவு கட்டாயம் வரும். கோகுலத்தின் தலையங்கப் பக்கத்தில் பாரதியின் பாப்பாப் பாடலின் இரு அடிகள் இடம்பெற்றிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். பாரதியின் நினைவுக்குச் சிறப்புச் செய்யும் வகையில் இந்தப் போட்டியை அறிவிக்கிறோம். பாரதியைப் பற்றி பத்து வினாக்கள் இங்கு தரப்பட்டுள்ளன. வினாக்களுக்கு உரிய பதிலும் கூட, வரிசை மாற்றி, எழுத்து மாற்றித் தரப்பட்டுள்ளன. வினாக்களுக்கு உரிய பதிலைக் கண்டு பிடித்து, வினா எண்ணையும் (எண்ணை மட்டும்) எதிரே உரிய பதிலையும் தபால் கார்டில் எழுதி, உங்கள் முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான பதிலைத் தந்திருந்தால், பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவர். அயல்நாட்டு வாசகர்கள், தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கட்டாயம் தர வேண்டும். முடிவு தேதி 30.9.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பாகாது. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

வினாக்கள்

1. 'பாரதி' பட்டம் அளிக்கப்பட்ட ஊர்
2. நுழைவுத் தேர்வில் பாரதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பல்கலைக் கழகம்
3. தமிழாசிரியராக பாரதி மூன்று மாதங்கள் பணியாற்றிய ஊர்
4. புதுவையில் பாரதி ஆசிரியராக இருந்து நடத்திய 3 பத்திரிகைகள்.
5. பாரதியின் புனைபெயர்களில் அவருக்கு மிகவும் பிடித்தமானது
6. பாரதியார் சிறைவைக்கப்பட்டிருந்த ஊர்
7. பாரதியின் மறைவுக்குக் காரணமாகி அவரைத் தள்ளிய யானை இருந்த கோவில்
8. பாரதியாரின் உருவம் பதித்த தபால் வெளியிடப்பட்ட ஆண்டு
9. பாரதியின் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டது என்று கருதப்பட்டு காணாமல் போன பாரதியின் படைப்பு
10. பாரதியார் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட ஆண்டு

பதில்கள்

5918

த்லகா அபா

கிர்கயோம, யர்தருயோம், ஜயாவி

ம்யட்ரளபுட

ரைதும

லூரகர்ட

1096


ன்தாஷெலில்ச

தசாபாதிர்த்ர


தைசிகன்சனகின்ரங்க

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

தெரிந்து கொள்ளுங்கள்!



• **பிராகிருத மொழி என்பது என்ன? இது இப்பொழுது பேசப்படுகிறதா? –** கி.பா., மணிவர்மா, தேவகோட்டை.



பிராகிருதம் என்பது தனியான ஒரு மொழி அல்ல. மராத்தி என்கிற மகாராஷ்டிரி, பாலி என்கிற மாகதி, அர்த்தமாகதி, சௌரசேனி என்ற மொழிகளுக்கு இடப்பட்ட பொதுப் பெயரே பிராகிருதம்.


• **வீடியோ தொலைபேசி எப்படி இயங்குகிறது? இது நமது நாட்டுக்கு வந்து விட்டதா? –** எஸ். கே. பாலாஜி, திருத்துறைப்பூண்டி.

பேசும் முனை, கேட்கும் முனை ஆகிய இருமுனைகளிலும் ஒரு காமிரா, படத்திரை, மைக்ரோஃபோன், ஸ்பீக்கர் ஃபோன் இருக்கும். இவை பேசுபவரின் உருவம், பேச்சு ஆகிய இரண்டையும் மின் சமிக்கை (Elec. signals) களாக மாற்றித் தருகின்றன. மறுபடி ஒலி, ஒளியாக உரிய இணைப்பகங்கள் மாற்றித் தருகின்றன. இணைப்பகங்களின் உதவி இன்றிச் செயல்படும் முறையும் உள்ளது. நமது நாட்டில் சோதனை முறையில் சில நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால் எப்படியும் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இது இந்தியாவில் பரவலாகும் என்று எதிர்பார்க்கலாம்.



• **அந்தமான் நிகோபார் தீவுகளில் தமிழராட்சி பரவி இருந்தது என்பதற்கு ஆதாரம் உள்ளதா? –** வா. பொன்னம்மா, தேநியூர்.


சோழர்கள் ஆட்சி கடல் கடந்த நாடுகளிலும் பரவி இருந்தது என்பதை கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இரண்டாம் இராஜேந்திரன் (1051-1063) கார்க் தீபத்தையும், நாகதீபத்தையும் வென்றதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இத்தீவுகளின் கூட்டுப் பெயர் நக்கவரம் என்பதாகும். இதையும் கல்வெட்டே கூறுகிறது. மார்க்கோபோலோவும் இத் தீவுகளை இப்




பெயராலேயே குறிப்பிடுகிறார். நக்கவரமே திரிந்து நிகோபார் ஆயிற்று என்பது அறிஞர்களின் கருத்து.

• முப்பரிமாண (3 Dimension) முறை எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது? – அ. சுக்கூர், ராணிப்பேட்டை.

முப்பரிமாண முறை பற்றிய குறிப்புகள் கி.மு. 300ஆம் ஆண்டிலேயே எக்லிட் (EU-CLID) என்ற கிரேக்க அறிஞரால் தரப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் படம் எடுக்கும் முயற்சிகள் பலராலும் தொடங்கப்பட்டன. இருப்பினும் 1952-ஆம் ஆண்டில்தான் இதற்கு வெற்றி கிடைத்தது. இந்த ஆண்டில்தான் முதல் 3-டி திரைப்படம் வெளியானது. இதன் பெயர் 'B' WAWA DEVIL" என்பது.



• சென்னையில் அண்ணா சமாதிக்கு எதிரே உள்ள எழிலகம் யாரால் கட்டப்பட்டது? ஆற்காட்டு நாவாபால்தானே? – வா. தேனப்பன், முகையூர்.



எழிலகம் என்ற முகப்புக் கட்டடம் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கட்டப்பட்டது. ஆற்காடு நவாப் முதம்மதலி அவர்களால் கட்டப்பட்டவை எழிலகத்தை ஒட்டி அமைந்துள்ள சேப்பாக்கம் அரண்மனைக் கட்டடங்கள். கட்டப்பட்ட போது இதன் பரப்பளவு 15 ஏக்கர்! இதைக் கட்டும் பணி 1768 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது சில காலம் ஆளுநர் மாளிகையாகவும் செயல்பட்டது. இதில் இப்பொழுது மாநில அரசு அலு வலகங்கள் இயங்கி வருகின்றன.


• இந்தப் பூமி என்ற கிரகம் எப்பொழுது பிறந்தது? – கு. சாரநாதன், வலங்கைமான்.



பாறைகளின் காலத்தை வைத்து இந்தப் பூமி தோன்றி (பிறந்து) சுமார் 4.6 மில்லியன் ஆண்டுகள் ஆயின என்கிறார்கள் அறிவியலார்.

சேரநம்பி


• இந்தியாவில் உள்ள மிகப் பழைய ஹாக்கி போட்டி TROPHY எது? – வா. பாப்ஜான், அரக்கோணம்.




இந்தியாவின் மிகப் பழைய ஹாக்கி போட்டி TROPHY பெய்டன் கோப்பை BEIGHTON என்பது. இது 1895 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

• பூகம்பங்கள் நிகழ்வதைத் தவிர்க்க இதுவரை முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றதா? – தா. பூர்ணிமா, திண்டிவனம்.

பூமிக்குக் கீழே ஏற்படும் இறுக்கம், அழுத்தம், வெப்பம் காரணமாகவே பூகம்பம் ஏற்படுகிறது என்பதை அறிவோம். இந்த இறுக்கம், அழுத்தம், வெப்பத்தைத் தவிர்க்க, இப்படிப்பட்ட பகுதிகளில், பூமிக்குள் நீரைச் செலுத்துகிறார்கள். இது அதீத வெப்பத்தைக் குறைக்கிறது. மண்ணைக் கரைத்து இறுக்கத்தையும் அழுத்தத்தையும் அகற்றி பூமிக்குள் ஒரு குளுமையான கொள்கொள்ப்பை ஏற்படுத்தி பூகம்பம் நிகழ்வதற்கான நிலையைத் தவிர்க்கிறது. இது இன்னும் சோதனை முறையில் தான் வெற்றி தந்துள்ளது. ஆனால், பூகம்பங்களை நிகழாமல் வெல்லும் காலம் அதிகத் தொலைவில் இல்லை.




• ஒலிம்பிக் விழா தொடக்க அணி வகுப்பில் முதலில் வரும் அணி, விழாவைப் பொறுப்பேற்று நடத்தும் நாட்டின் அணிதானே? – கூ. முனிரத்தினம், சாத்தூர்.



அதுதான் இல்லை. ஒலிம்பிக் பந்தயங்கள் முதன்முதலாக கிரீஸ் நாட்டில் தோன்றியது என்ற காரணத்தால், கிரீக்கு சிறப்பும் பெருமையும் தரும் விதத்தில், முதலில் கிரீஸ் நாட்டு அணியே தலைமைவகித்துச் செல்லும். பொறுப்பேற்று நடத்தும் நாட்டின் அணி கடைசியாகத்தான் வரும். இந்த முறை கவனமாகப் பாருங்கள்.


• சதுரங்கம் என்ற செஸ், தோன்றிய காலத்தில் இருந்தே இதே மாதிரித்தான் ஆடப்பட்டு வந்திருக்கிறதா? – வா. ஆரோக்கியசாமி, புதுப்பாளையம்.

சதுரங்கத்தின் தாயகம் நமது பாரதம் தான் என்பதை இதுவரை யாரும் மறுக்கவில்லை. ஆடுபுலி ஆட்டம், தாயக் கட்டம் போன்ற எல்லாமே இதன் பல வடிவங்கள்தான். ஜப்பானில் 12-ஆம் நூற்றாண்டில்



டாய்ஷோகி (TAI-SHOGI) என்ற பெயரில் ஒரு சதுரங்கம் ஆடப்பட்டு வந்துள்ளது. இதில் 625 கட்டங்கள்! 354 காய்கள்! சதுரங்கத்திற்கு நிலைத்த ஒரு வடிவத்தைக் கொடுத்த பெருமை ஐரோப்பிய நாடுகளையே சாரும்.

*** முழுக்க முழுக்கப் பெண்களையே கொண்ட முதல் போலீஸ் காவல் நிலையம் தொடங்கப்பட்டது தமிழ்நாட்டில்**




தானே? – வே. சபாநாயகம், நெய்வேலி.

இல்லை. இந்தப் பெருமை கேரள மாநிலத்திற்குத்தான். இங்குள்ள கள்ளிக் கோட்டையில்தான் 1973-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதம் முழுக்க முழுக்கப் பெண்களையே கொண்ட மகளிர் காவல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

*** 'கோக்கோ கோலா' பானத்தைக் கண்டுபிடித்தவர் யார்? – மா. செல்வ ராஜ், ஆரணி - 1.**


டாக்டர் ஜான் பெம்பர்டன் (Dr. John Pemberton) என்பவர்தான் கோக்கோ



கோலா பானத்தைக் கண்டுபிடித்தவர். ஆண்டு 1886. இது அறிமுகமான போது, அறிவு வளர்ச்சி டானிக், அறிஞர்கள் விரும்பிப் பருகும் பானம் என்று விளம்பரப்படுத்தப்பட்டது.


*** Sea of Tranquility என்னும் கடல் எங்கே இருக்கிறது? அட்லாசில் காணோமே? – கு. கோபிநாத், குடந்தை.**

Sea of Tranquility என்ற கடலை உலகப் படம் என்ற அட்லாசில் காண முடியாது. ஏனென்றால் இது சந்திரனில் உள்ள ஒரு பரந்தவெளி. ஒரு காலத்தில் இது கடலாக



இருந்ததாம்!

*** ஸ்டேப்ளர் (Stapler)ரைக் கண்டு பிடித்தவர் யார்? – து. காந்திமதி, நெல்லை – 3.**



ஸ்டேப்ளரைக் கண்டுபிடித்த பெருமைக் குரியவர் ஹென்றி கௌல்டு (Gould) ஆண்டு 1868.



கோடை விடுமுறையைக் கழித்தேன்!

மினி தோட்டம்


என் விடுமுறை நாட்களை வித்தியாசமாகப் பயனுள்ள வழியில் கழித்தேன். விடுமுறை நாளில் எங்கும் வெளியூர் சொல்லவில்லை. வீட்டு முற்றத்தில் உள்ள வெற்றிடத்தைக் கொத்தி, அதை மினி தோட்டமாக்கினேன். அதில் கீரை, கத்தரி, பூசணி ஆகிய செடி கொடிகளை வளர்த்தேன். அது எங்களுக்கு மிகுந்த பயனைக் தர ஆரம்பித்துள்ளது. எல்லாரும் புகழ்கிறார்கள். எத்தனை பெருமையாக இருக்கிறது தெரியுமா!

கோவை என்.கே. நாகராஜன்,



கைத்தொழில் கற்றேன்

எட்டாம் வகுப்புத் தேர்வு எழுதிவிட்டு விடுமுறையில் இருக்கின்றேன். எங்கள் தலைமையாசிரியை "நீங்கள் விடுமுறையில் வீட்டில் அம்மாவிடம் சமையல் செய்யக் கற்றுக் கொண்டால் எதிர்காலத்தில் அது உங்களுக்குக் கை கொடுக்கும்" என்றார்கள். ஆதலால், அம்மாவிடம் சமையல் வேலைகளைக் கற்றுக் கொண்டு வீட்டு வேலைகளையும் செய்து கற்று வருகிறேன். எங்கள் பள்ளியில் கூடை பின்னுவது, துணி தைப்பது பூத் தையல் போடுவது போன்ற கைத்தொழில்களை எல்லாம் கற்றுக் கொடுத்தார்கள். அதையெல்லாம் இப்பொழுது வீட்டில் செய்து வருகிறேன். ஹிந்தி, ஆங்கிலம் பேச தபால் மூலம் பயிற்சி பெற்று வருகிறேன். அம்மா, அப்பா பாராட்டும் போது பெருமையாக இருக்கிறது. எனது



விடுமுறையை மிகவும் பயனுள்ளதாகக் கழித்தேன்.

லால்பேட்டை மு.கி.உம்மு அம்மாரா

அம்மாவுக்கு உதவியாக..

நான் பத்தாம் வகுப்பு படித்து முடித்து விட்டு விடுமுறையில் இருக்கிறேன். முதல் பதினைந்து நாட்கள் எனது சொந்த ஊருக்கு சென்று விடுமுறையைக் கழித்தேன். பிறகு, எனது ஊரான திருச்சிக்கு வந்து, தட்டச்சு கற்றுக் கொண்டு இருக்கிறேன். கூடவே, வீட்டு வேலை




களைச் செய்யவும், அம்மாவுக்கு ஜூனியராக இருக்கவும் பழகிக் கொண்டு வருகிறேன். மேல் படிப்புக்கு வெளியூர் போனாலும் இது மிகவும் உதவியாக இருக்குமே!

திருச்சி வை.வித்யாலக்ஷ்மி,

பாராட்டு

கோடை விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழிக்க விரும்பினேன். வீட்டிலுள்ள பழைய நோட்டுகளின் அட்டை, பஞ்சு, நூல், சமிக்கி முதலியவற்றைக் கொண்டு, அட்டையில் எனக்குத் தெரிந்த கார்ட்டூன் படங்களை வரைந்து அவற்றிற்கு ஏற்றபடி, பஞ்சு, சமிக்கி



இவற்றை அழகாக ஒட்டி வீட்டில் சுவரில் மாட்டி அழகு படுத்தியுள்ளேன். வீட்டிற்கு வருபவர்கள் அவற்றைப் பார்த்துவிட்டு கடையில் வாங்கியது போலே உள்ளது என்று பாராட்டினர்.

அயனாவரம் கே.தீபா

அழுகையா வருது

எனக்கு விடுமுறை விட்டு பல நாட்களாகியும் என்னை எங்கும் அழைத்துப் போகவில்லை. எங்க சின்னப் பாட்டி தற்செயலா ஊருக்கு வந்தாங்க. அதுதான் சாக்குன்னு அவங்ககூட குமரி மாவட்டத்தில இருக்கிற இரணியலுக்குப் போனேன்.

எங்க பாட்டி விளையாட விதவிதமா சாமான்கள் வாங்கித் தந்தாங்க. நானும்




என்னோட சித்தி மகன் பிரபு அண்ணனும் ஜனனி குட்டியும் நல்லா விளையாடினோம். அவனுக்கு மே 15 பள்ளி திறந்ததால் திருவனந்தபுரம் போனோம். ஜாலியா பொழுது போச்சு. எனக்கு ஜூன் 3ல ஸ்கூல் திறக்குது. மறுபடியும் மதுரை போகனும்னா வருத்தமா இருக்கு. ஏன்னா தனியா இருக்கனுமே? அண்ணனும் தங்கச்சியும் திருவனந்தபுரத்திலே ஜாலியா இருப்பாங்க. நான் மட்டும் தனியா இருக்கனும்னா என்னவோ போல இருக்கு. என்னைப்போல அண்ணன் அக்காவைப் பிரிந்து இருக்கிறவங்க எத்தனை பேர் வருத்தப்படுவாங்க? பாவம் எனக்கு அழுகையா வருது.

மதுரை செல்வி. சிவநந்தினி

விவசாயம் கற்றேன்


சென்ற வருடம் சமைக்கவும், ஓவியம் வரைவது எப்படி என்பதைப் பற்றியும் கற்றுக் கொண்டேன். இப்ப, என் அண்ணனோடு வயல்களுக்குச் சென்று விவாசயம் பார்க்கின்றேன். ஏர் உழுவது எப்படி என்பதைப் பற்றியும், கொல்லைகளைச் சமப்படுத்துவது எப்படி என்பதைப் பற்றியும் வாய்க்கால்களில் சரளமாக நீர் ஓட சரி செய்தது எப்படி என்பதைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொண்டுள்ளேன். இது எனக்கும். குடும்பத்தாருக்கும் பயனுள்ள வேலையாகும். என் போன்ற கிராமத்திலுள்ள மாணவர்களும் வருகிற விடுமுறையிலாவது விவசாயத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். நம் நாடே ஒரு விவசாய நாடுதானே?



அனந்தபுரம் இராம.ஜெயகாந்தன்

அம்மாவுக்கு உதவினேன்!

எங்கள் கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் 5-ஆம் வகுப்புப் படித்து முடித்தேன். அடுத்த ஆண்டு உயர்நிலைப் பள்ளி. எங்கள் கிராமத்தில் இருந்து அது



3 கி.மீ தூரத்தில் உள்ளது. பள்ளிக்குச் செல்ல சைக்கிள் விடக் கற்றுக் கொண்டேன்.

என் அம்மா பீடி வேலை செய்பவர்கள். இவ் விடுமுறையில் அவர்களுக்கு உதவியாக பீடி சுற்றக் கற்றுக் கொண்டேன். இதனால் கிடைத்த அதிகப் பணத்தின் மூலம் ஆறாம் வகுப்புக்குத் தேவையான நோட்டுகளும் புதிய பேனா ஒன்றும் வாங்கிக் கொண்டேன்.

இனிமேல் அம்மாவுக்கு உதவியாக விடுமுறை நாட்களில் பீடி சுற்றுவேன். குடும்பப் பொருளாதாரத்தை உயர்த்த முயல்வேன். படிப்பையும் கவனித்துக் கொண்டுத்தான்!

குரும்பட்டி ஜே.அன்பரசி.

சாப்பாட்டு நேரம்.

ஆங்கங்கே புல்தரையிலும் மரத்தடியிலும் பூங்கொத்துகளாய் மாணவிகள் சின்னச் சின்ன கும்பலாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சாப்பாட்டை விட அரட்டையில்தான் அதிகச் சுவை இருந்தது!

டிபன் பாக்ஸ் மூடியைத் திறக்க முடியாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த லதாவிடமிருந்து அதை வாங்கி ஒரு நிமிடத்தில் திறந்து கொடுத்தாள் பூமா.

"என்னமோ முக்கியமான சமாசாரம் சொல்லப் போறதாச் சொன்னயே லதா? என்னடீ அது?" என்று கேட்டாள் சரண்யா.



நிறைய உடையவர்கள்

"ஒன்பது-பி ராஜேஸ்வரி தெரியுமில்லையா....?" என்று டீஃபன் பாக்ஸிலிருந்து உப்புமாவை ஸ்பூனால் எடுத்து விழுங்கிக் கொண்டே, கேட்டாள் லதா.

"அதோ அந்தக் கிணத்து மேடைக் கிட்ட நின்னு பேசிக்கிட்டிருக்காளே, அவளைத்தானே சொல்லறே?" என்று கேட்டாள் பூமா.

"ஆமாம்... அவளேதான்" என்று சொல்லிவிட்டுச் சிரிக்கத் தொடங்கினாள் லதா.

"ஏய்... சொல்ல வந்ததை முழுக்கச் சொல்லிவிட்டுச் சிரிடி. நாங்களும் சிரிக்கிறோம்..."? என்று அவள் கையைப் பிடித்தாள் சரண்யா.

"அவள் எங்க வீட்டுக்கு வந்திருந்தாள்!"

"இதிலேன்னடீ அதிசயம்! என்ன விஷயமா வந்தாள்?" என்று கேட்டாள் பூமா.

"அவள் என்ன, எனக்கு ரொம்பப் பழக்கமா என்ன? அதெல்லாம் இல்லை. அவ அம்மா செய்யற வேலையைச் செய்யத்தான் வந்தாள்!" என்று சொல்லி விட்டு மறுபடியும் சிரிக்க ஆரம்பித்தாள் லதா.

அவளுடைய தோழிகளுக்கு எரிச்சலாக வந்தது.

"ஒழுங்காச் சொல்ல வந்ததைச் சொல்லப் போறயா இல்லையா?" என்று பொறுமை இழந்து எல்லோருமாகக் கத்தினார்கள்.

ஸ்பூனை டிபன் பாக்ஸில் வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள் லதா.

"எங்க வீட்டு கழிப்பறையைக் கழுவத்தான் அவ வந்திருந்தா...?" -- நறுக்கென்று சொல்லிவிட்டு முகத்தில் அருவருப்பைக் காட்டினாள் லதா.

"ஏய்! நீ என்னடீ உண்மையாவா சொல்லறே?" - என்று பூமா பரபரத்தாள்.

"ஆமாண்டி. உண்மையாவேதான் சொல்றேன். தினம் எங்க வீட்டுக்கு அந்த வேலை செய்ய வர்றது அவங்க அம்மாதானாம். அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். அதனாலே இன்னிக்கு இவளை அனுப்பிச்சாளாம் அவங்க அம்மா. என்னைப் பார்த்ததும் ராஜேஸ்வரிக்கு ஒரே

பீஷ்மன்

வெட்கமாகப் போயிடுத்து."

"ஐயைய! கழிப்பறை கழுவறவளோட பெண்ணா அந்த ராஜேஸ்வரி! ஒரு நாளைக்கு அவ என்னைத் தன் சைக்கிள்ள கூட்டிக்கிட்டுப் போனா!"

"நல்லவேளை. அவளோட நான் அதிகமாப் பழகறதில்லை" என்று சந்தோஷப் பட்டுக் கொண்டாள் சரண்யா. அவள் அப்பா பணம் கொழிக்கும் பெரிய ஆடிட்டர். காரில்தான் சரண்யா பள்ளிக் கூடம் வருவாள். சாதாரணமாக ஏழைகளைக் கண்டாலே அவளுக்கு ஏளனம். ராஜேஸ்வரியின் குடும்பத் தொழிலைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அவள் ரொம்பவும் சலித்துக் கொண்டாள்.

"எனக்குச் சாப்பாடே இறங்கலேடி இதைக் கேட்டதும்!" என்று சொல்லிக் கொண்டே, பாதி சாப்பிட்டு முடித்த நிலையிலேயே எழுந்து விட்டாள் சரண்யா.

"இருடீ கொஞ்சம். நாங்களும் வரோம்!" என்று மற்றவர்கள் சொன்னதும் பக்கத்தில் இருந்த மரத்தின் மீது சாய்ந்து நின்று கொண்டாள் சரண்யா.

"அதெப்படி அந்த வேலையையும் செய்துட்டு, சரியான நேரத்துக்குப் பள்ளிக் கூடமும் வர முடியுது அவளாலே....!" இப்படி வியந்து கொண்ட பூமா தினமும் காலையில் எழுந்திருப்பதற்கே மணி எட்டாகி விடும்!

"நினைச்சாலே அருவருப்பா இருக்குடி எனக்கு" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள் லதா.

கேலிப் பேச்சும் சிரிப்புமாக அவர்கள் கை கழுவச் சென்றார்கள்.



பஞ்ச பாண்டவி என்று செல்லப் பெயரால் குறிப்பிடப்பட்ட அந்த ஐந்து தோழிகளும் பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வசதியான வாழ்க்கை அமைந்திருந்ததால் ஏழை மக்களின் எளிய வாழ்க்கை நிலைகள் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. பள்ளி வருவதையே உல்லாசமான பொழுது போக்காகத்தான் அவர்கள் கருதினார்கள். படிப்பில் இருக்கும் அக்கறையை விட, புதிதாகத் திரையிடப் பட்டிருக்கும் படங்களையும் அவற்றில் நடிப்பவர்களைப் பற்றியும்தான் அவர்களுக்கு அக்கறை அதிகமாக இருந்தது. அவர்கள் பேச்செல்லாம் பெரும்பாலும் இவற்றைப் பற்றித்தான் சுற்றிச் சுற்றி இருக்கும். இல்லையென்றால் யாராவது ஒரு மாணவியைப் பற்றிய வம்பு அதில் இடம் பெற்றிருக்கும். இப்போது இந்த ஏழை ராஜேஸ்வரி அவர்களின் வம்புப் பேச்சுக்கு இலக்காகி விட்டாள்!

அதற்குப் பிறகும் ஒரு வாரம் ராஜேஸ்வரி தொடர்ந்து காலையில் லதாவின் வீட்டுக்கு வந்து தன் கடமையைச் செய்து விட்டுப் போய்க் கொண்டிருந்தாள். அவள் வருவது தெரிந்ததுமே லதா வீட்டுக்குள் போய் விடுவாள். பார்த்தால் ஏதாவது பேசும்படி நேரலாம் இல்லையா? ராஜேஸ்



வரி தன்னுடன் படிப்பவள் என்று நினைப்பதற்கே அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. அப்படி இருக்கும் போது அவளுடன் பழக்கம் வேறு வைத்துக் கொள்ள வேண்டுமா என்று அவள் எண்ணினாள்.

பள்ளிக் கூடத்தில் அவளைப் பார்த்தால் லதாவும் அவள் தோழிகளும் முகத்தைச் சுளித்துக் கொண்டு ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ராஜேஸ்வரி இதையெல்லாம் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அவள் தன் வேலையுண்டு, தன் படிப்புண்டு என்று நடந்து கொண்டிருந்தாள்.

"இப்படி இருக்கும் போதே அவளுக்கிருக்கும் கர்வத்தைப் பார்த்தியாடீ!" என்று அவளைப் பற்றி விமர்சனம் செய்யத் தொடங்கி இருந்தாள் சரண்யா.

அரையாண்டுத் தேர்வு முடிவுகள் வந்து விட்டன. லதா கணக்கிலும் தமிழிலும் மிகக் குறைந்த மதிப்பெண்தாம் வாங்கி யிருந்தாள். 'பிராகரஸ் ரிப்போர்ட்டில்' கையெழுத்துப் போட்டுக் கொண்டே, "கணக்குக்கும் தமிழுக்கும் லதாவுக்கு டியூஷன் வைச்சுத்தான் ஆகணும்!" என்று சொன்னார் அப்பா.

"தமிழிலே கூடவா இப்படி? இவளுக்குப் படிப்பிலே எங்கே அக்கறை இருக்கு?"



‘‘ஏண்டி! இட்லியைத் தூக்கி பின்னல்ல சொருகி வச்சிருக்கே!’’

‘‘இதுதான் ‘பூ’ப்போல இட்லியாமே?!’’

— நெற்குப்பை கி. மனோகரன்

என்று அம்மா வேறு திட்டினாள்.

எப்படியோ, அந்த வருடம் தமிழுக்கும் கணக்குக்கும் லதாவுக்கு டியூஷனுக்கு ஏற்பாடு செய்தார்கள்.

பள்ளிக் கூடத்துக்குப் போய் வரும் நேரம் தவிர, டியூஷனுக்கும் நேரம் செலவழிக்கும்படி ஆயிற்று. அதனால் விரும்பியபடி திரைப்படங்களுக்குப் போக முடியாது லதா தவித்தாள். அந்தத் தவிப்பு காரணமாக அவ்வப்போது, அம்மாவிடம் தன் எரிச்சலைக் கத்தித் தீர்த்துக் கொண்டாள் லதா.

பள்ளியில் ஆண்டு விழா. அந்நிகழ்ச்சியைப் பார்க்க வருமாறு பெற்றோருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். லதா தன் அப்பா அம்மாவோடு அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தாள்.

நிகழ்ச்சியின் போது, முந்திய ஆண்டுத் தேர்வுகளில் வகுப்பிலேயே முதலாவதாக மதிப்பெண் பெற்று சிறப்பாகத் தேறியிருந்த மாணவிகளுக்குப் பரிசு வழங்கினார்கள். தன்னால் வெறுக்கப்பட்ட அந்த ராஜேஸ்வரியும் பரிசு பெறுவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தாள் லதா.

“இது யார் தெரியுமா லதா? நம்ம வீட்டிலே கழிப்பறை க ழுவ வருவாளே காமாட்சி... அவளோட பொண்ணு! இவள் கூட தன் அம்மாவால் முடியாதப்போ ஒரு வாரம் அந்த வேலையை செஞ்சிருக்கா! செய்யற தொழிலையும் மதிச்சு செஞ்சிட்டு, படிக்கிற படிப்பிலேயும் அக்கறை காட்டறாளே!” என்றாள் அம்மா புகழ்ச்சி வியப்புடன்.


“ஞாயிற்றுக் கிழமைகளில் எங்களுக்காக எங்க ஆபீசில் இந்தி வகுப்பு நடத்தறாங்கன்னு சொன்னேனே... அதை இந்தப் பொண்ணுதான் அருமையா நடத்தறா!” என்று முன் வரிசையில் இருந்த ஒருவர் தன் மனைவியிடம் கூறிக் கொண்டிருந்ததையும் லதா கேட்டாள்.

பெருமை என்பது குடும்ப அந்தஸ்திலோ, பணச் செழிப்பிலோ இல்லை. உண்மையான உழைப்பு, கல்வியில் பற்று ஆகியவைதான் நிலைத்த பெருமை தரக் கூடியவ என்பது அவளுக்குப் புரிந்தது.

எழுந்து போய் ராஜேஸ்வரியின் அருகில் சென்று வலியக் கைகுலுக்கினாள் லதா. சிரித்த முகத்துடன் லதா தன்னை அன்பாகப் பாராட்டியது கண்டு மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்த ராஜேஸ்வரி திகைத்துப் போய் நின்றாள்.

'சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!
நீதி, உயர்ந்தமதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்!”

என்ற பாடலை மேடையில் யாரோ பாடினார்கள். தனக்காகவே மகாகவி யாரையோ விட்டுப் பாட வைத்திருக்கிறாரோ என்று லதா எண்ணிக் கொண்டாள்.



‘‘அவன் பாட மாட்டேங்குறான்!’’

‘‘அவனுக்கு ஐஸ்கிரீம் சாப்பிட்டு தொண்டை ‘கட்டி’ கிடுச்சாம்!’’

— எம்.கே. வேங்கவேல்

பாட்டி மாதவனை சாப்பிடக் கூப்பிட்டாள்.

சாப்பிட்டுக் கொண்டே மாதவன், "பாட்டி, இந்த ஊருக்கு மரம் வெட்டும் தொழிற்சாலையும், தோல் பதனிடும் தொழிற்சாலையும் வந்துவிட்டதா என்ன?" என்று கேட்டான்.


"ஆமாம் மாது, ஆறு மாதத்துக்கு முன்னதான் தொடங்கினாங்க" என்றாள் பாட்டி.

என்ன காரணம்?

கூறியபடியே சென்றான்.

மாலை வந்தது. பஞ்சாயத்துக் கூடியது. பஞ்சாயத்துத் தலைவர் எழுந்து, "எதற்குப் பஞ்சாயத்துக் கூடியிருக்குதுன்னு உங்களுக்குத் தெரியும் இல்லையா? நம்ம ஊரில கடந்த ஆறு மாசமா மழை பெய்யலே; விளைச்சலும் இல்லை. தெய்வ குத்தமா இருக்கும்னு 'காளிக்கு திரு விழா எடுக்கிறது'ன்னு முடிவு செய்து இருக்கோம். யாருக்காவது ஆட்சேபணை இருந்தால் இங்கேயே தெரிவிக்கலாம்" என்று கூறி அமர்ந்தார்

சிறுது நேரம் அமைதி. அப்போது வந்தது ஒரு குரல் "நான் ஆட்சேபிக்கிறேன்



வாசற்பக்கம் "டம் டம்" என்ற துடும்பு ஓசை கேட்டது.

"என்ன பாட்டி வெளியே?" என்றான் மாதவன் வியப்போடு!

"வாயேன். போய்ப் பார்க்கலாம்" என்றாள் பாட்டி.

இருவரும் வெளியே வந்தனர். வெளியே துடும்பு அடிப்பவன், "நம்ம ஊரிலே மழையும், விளைச்சலும் சரியில்லைங்கறதுக்காக நம்ம ஊர் காளிக்கு திருவிழா எடுக்க முடிவு செய்து இன்னைக்கு மாலை பஞ்சாயத்து கூடுது. அதுல எல்லோரும் கலந்துக்கணும்" என்று

இதை!" அந்தக் குரல் மாதவனுடையது தான்!

"என்ன பட்டணத்துத் தம்பி, நாங்க முடிவு செஞ்சதுல என்ன குறையிருக்குன்னு எதிர்க்கிறீங்க? காளிக்குத் திருவிழா எடுக்கிறது குற்றமா?" என்றார் கிராமத் தலைவர்.

"இந்தத் தம்பி போல பல பேர் கூறித் தான் இந்த நிலைமை உருவாயிருக்கு" என்றார் ஒருவர்.

"விளைச்சல் குறைஞ்சதுக்கும் மழை இல்லாததற்கும் தெய்வ குத்தம் காரணமில்லேன்னு சொல்றேன்" என்றான்





மாதவன்.

"பின்னே என்ன காரணம்னு நீதான் சொல்லேன்?"

"இதுக்குக் காரணம் இப்போ புதுசா வந்திருக்கிற தோல் மற்றும் மரவெட்டும் தொழிற்சாலைகள்தான்" என்றான். மாதவன்.

"உன்னால் இதை நிருபிக்க முடியுமா?" என்றார் தலைவர் ஆத்திரம் மாறாமல்.

"முடியும்" என்று கூறி "இப்படி, வாங்க, இந்த நிலங்களில்தானே விளைச்சலில்லை?" என்று கேட்டான் மாதவன்.

"ஆமாம்" என்றனர் மக்கள்.

"அதோ, அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பாருங்கள்" என்று காட்டி, "தோல் பதனிட சில இரசாயன உப்புக்களையும் மற்றும் சூழ்நிலைக்கு மாசு விளைவிக்கும் பொருட்களையும் பயன்படுத்துகின்றனர். அதை வெளியேற்றும்போது சுத்திகரித்து அனுப்ப வேண்டும் என்பது சட்ட விதி. ஆனால் ஆலை உரிமையாளர்கள், அதை மீறி சுத்தப் படுத்தாமல் ஆறில் கலந்து விடுகிறார்கள்" என ஆற்றைச் சுட்டிக் காட்டினான். "இந்தத் தண்ணீரையே உங்கள் நிலத்தில் விவசாயத்துக்குப் பயன்படுத்துவதால் அதிலுள்ள இராசாயன உப்புகள் நிலங்களில் தங்கி அதை மாசு படுத்தி விளைச்சலைக் குறைக்கின்றன. அதோடு மரங்களை வெட்டுவதால் மழையும் குறைகிறது".

"அது எப்படி தம்பி?" என்று கேட்டனர் ஊர் மக்கள்.

"நீர் ஆவியாகி மேலே சென்று மேகமாக மாறுகிறது. அதைக் குளிர்வித்தால், அதுதான் மழையாகப் பொழிகிறது. அதைக் குளிர்விக்க ஏராளமாக மரங்கள் தேவை. அது இல்லாமையால்தான் இப்போ நம்ம ஊரில் மழை பெய்வதில்லை என்றான்" மாதவன்.

"அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்றனர் ஊர் மக்கள்.

"இங்கேயுள்ள இரு தொழிற்சாலைகளை மூட வேண்டும்" என்றான் மாதவன்.

"தொழிற்சாலைகளை மூடினால் பிழைப்புக்கு நாங்கள் என்ன செய்வது?"

"நீங்கள் எதற்கு அங்கு வேலை செய்யச் சென்றீர்கள்? உங்கள் நிலங்களில் விளைச்சலில்லை என்பதால்தானே? ஏன் விளைச்சலில்லை என்பதையும் நான்தான் கூறிவிட்டானே?" என்றான் மாதவன்.

ஒருவர் எழுந்து, "மாதவன் தம்பி கூறுவது சரிதான். இப்பவே தொழிற்சாலைகளை மூடச் சொல்வோம். அவங்க சுயநலத்திற்காக நம்ம நிலங்களையும், ஆற்றையும் பாழாக்குகிறார்கள்" என்றார். எல்லா மக்களும் எழுந்து "தொழிற்சாலைகளை மூடு. இல்லே, ஆலை நீரை நன்கு சுத்திகரித்து வெளிய விடு" என்று கோஷம் எழுப்பினர்.

ஆலை நிர்வாகம் பணிந்தது. விளைநிலங்கள் பிழைத்தன. ஊர் பழையபடி செழித்தது. இப்பொழுது நீங்கள் அந்த ஊரைப் போய் பாருங்கள். ஊரின் அழகே தனிதான் என்று கூறுவீர்கள்.

கே. பாலசந்தர்



வெள்ளிக் கிழமை. எட்டாம் பாட வேளை. விளையாட்டுப் பாடவேளை என்பதால் பத்தாம் வகுப்பு மாணவர்கள் மைதானம் முழுக்கப் பரவியிருந்தார்கள்.

சில மாணவர்கள் கபடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் கிரிக்கெட்.

மைதானத்தின் ஓரத்தில் இருந்த பெரிய மரத்தின் கீழ் முரளி, வாசு, பிரதாப், கார்த்திக் நின்று உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"நான் சொல்றதைக் கேளுங்க. நாளைக்கு சனிக்கிழமை நமக்கு லீவ். இந்த லீவை நாம்ப ஜாலியா கழிக்கணும். காலைல எட்டு மணிக்கு இங்க இருந்து பஸ் ஏறி, ஐந்து கிலோ மீட்டர் தூரத்துல இருக்கிற தொட்டம்பட்டி ஆற்றுக்குப் போயிடலாம். ஜாலியா குளிச்சிட்டு, சாப்பிட்டுட்டு, ஒரு சினிமா பாத்துட்டு, சாயந்திரமா ஊருக்குத் திரும்பிடலாம். எல்லாச் செலவும் எனது. நீங்க ஒரு பைசா கூடச் செலவு பண்ண வேண்டாம். என்ன சொல்றீங்க?" — கேட்டது முரளி.

இரா. வசந்தராசன்

முரளியின் மூன்று நண்பர்களும் உற்சாகத்தோடு தலையசைத்தார்கள்.

"சரி. நாளைக்குக் காலைல சரியா எட்டு மணிக்கு பஸ் ஸ்டேண்டுக்கு வந்துடுங்க," என்று மகிழ்ச்சியான குரலில் நண்பர்களுக்கு விடை கொடுத்தான் முரளி.

மறுநாள் காலை. தொட்டம்பட்டி கிராமம்.

பஸ்ஸில் இருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு நண்பர்கள் நால் வரும் உற்சாகத்தோடு கீழே இறங்கி னார்கள்.

ஆறு அழகாக வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தது. ஆற்றின் ஓரங்களில் மணல் மேடுகள். மணல் மேடுகளின் ஓரங்களில் செடிகள், கொடிகள், மரங்கள். அவைகளின் மேல்

வண்ண வண்ணப் பறவைகள். அவைகளின் கீச் கீச சப்தம்.

குளிப்பதற்கு வசதியான ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். அந்த இடம் மிக அழகாக இருந்தது. சுற்றிலும் இரண்டு மூன்று சிறுவர்கள் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். நண்பர்கள் நால்வரும் உடைகளைக் கழற்றி வைத்து விட்டு ஆற்றில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்தார்கள்.



உங்கிட்டே இருக்கா?

அரை மணி நேரம் ஓடிவிட்டது.

"ஊருக்குள்ள போய், ஏதாவது கடைல டிபன் சாப்பிட்டுட்டு, திரும்ப மறுபடியும் வந்து இன்னொரு தடவை குளிக்கலாம்," என்று முரளி சொல்ல, நால்வரும் கரையேறினர்.

ஐந்து நிமிட நடைக்குப் பின், தற்செயலாகத் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் கை வைத்த முரளி, அதிர்ந்தான். அவனுடைய பர்ஸைக் காணோம்!

"டேய்... என் பர்ஸைக் காணலை! யாரோ திருடிட்டாங்க," என்று முரளி கத்தினான்.

மூன்று நண்பர்களும் திகைத்தார்கள்.

உடைகளைக் கழற்றி வைத்த இடத்திற்கே சென்று தேடினார்கள். பர்ஸ் எங்குமே கிடைக்கவில்லை!

"இங்க ஆடு மேய்ச்சிக் கிட்டிருந்த பசங்க யாராவது திருடிட்டு இருப்பாங்களா?" என்று வாசு கேட்டான்.

"இருந்தாலும் இருக்கும்," என்றான் கார்த்திக்.

"இப்ப என்னடா பண்றது? டிபன் இல்லன்னா கூட போகுது, பட்டினி கிடக்கலாம். பஸ்ஸுக்கு காசுக்கு என்ன பண்றது? உங்க யார் கிட்டயாவது பணம் இருக்கா?" என்று முரளி கேட்டான்.

"இல்லையே!" என்று ஒருமித்த மெல்லிய குரலில் மூவரும் சொன்னார்கள். முரளியின் முகத்தில் அதிர்ச்சி மின்னல்கள்!

"பஸ் சார்ஜுக்குக் கூட பணம் இல்லையே! இப்ப என்னடா பண்றது?"


"வேற என்ன? நடராஜா சர்வீஸ்தான். நடந்து போறதுதான் ஒரே வழி," என்றான்- பிரதாப்.

கவலை தோய்ந்த முகத்தோடு ஊரை நோக்கி மெதுவாக நடக்க ஆரம்பித்தனர் நான்கு நண்பர்களும்!

அன்று மாலை.....

மேற்கு வானை நோக்கி சூரியன் ஆசையோடு நகர்ந்து கொண்டிருந்தான். வீட்டுக்கு வெளியே நின்று வானத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் முரளி.

பயணம் சரியாக அமையவில்லையே,



''உங்கப்பா என்ன பண்றார்?''
''பயில்வான் சார்!''
''நல்லா படிப்பியா?''
''ஓ. நல்லா பயில்வேன் சார்!''
— பா. ஜெயக்குமார்

நண்பர்களை சிரமப்படவைத்து விட்டோமே என்ற நினைப்பில் முரளிக்கு இதயம் வலித்தது. ஐந்து கிலோ மீட்டர் நடையால் கால்கள் வலித்தன.

"முரளி...."

பின்னால் கேட்ட குரலால் திரும்பினான்.

பின்னால் கார்த்திக் நின்றிருந்தான்.

"முரளி... நான் சொல்றதைக் கேட்டு அதிர்ச்சியடையாதே. உன் பர்ஸை எடுத்தது நான்தான். இந்தா உன் பர்ஸ்...."

பகீரென அதிர்ந்தான் முரளி.

"அடப் பாவி! நீயா என் பர்ஸை எடுத்தே! உன்னை நான் உயிர் நண்பனா நினைச்சிக்கிட்டு இருந்தேனே!"

"நானும் உன்னை என் உயிர் நண்பனா நினைக்கிறேன். அதனாலதான் பர்ஸை எடுத்தேன்."

முரளியின் முகத்தில் குழப்ப மேகங்கள்!

"நீ என்னடா சொல்றே?"

"சொல்றேன் கேளு. ஆரம்பத்துல இருந்தே உன்னை கவனிக்கிறேன். பணத்தை ரொம்ப சரளமா செலவு பண்றே. அது ரொம்ப தப்பு முரளி. பணம் நம்ப கைல இருக்கிற வரைக்கும் தான் நண்பர்கள் நம்பளைச் சுத்தி இருப்பாங்க. போலி நண்பர்கள், பணம் இல்லைன்னா விலகிடுவாங்க. உயிர் நண்பர்கள்தான் கஷ்டத்துலேயும் கடைசி வரைக்கும் இருப்பாங்க. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? உன் பர்ஸ் தொலைஞ்சதும் நீ எங்ககிட்ட பஸ் சார்ஜுக்குப் பணம் இருக்கான்னு கேட்டே. யாரும் இல்லேன்னு சொன்னோம். ஆனால் வாசு பாக்கெட்ல பத்து ரூபா வச்சிருந்தான். பிரதாப் ஐந்து ரூபாய் வச்சிருந்தான். ஆனா உனக்குப் பணம் கொடுக்க அவங்க தயாரா இல்லே! உன் பணத்தை ஜாலியா செலவு பண்றதுக்கு மட்டும் தான் அவங்க தயார்...."

முரளி அதிர்ச்சியோடு கார்த்திக்கைப் பார்த்தான்.

"என் மேல கோபப்படாம நான் சொல்றதை யோசிச்சிப் பாரு முரளி. இந்தனை நாள் உன்கிட்ட பணம் இருந்தது. ஜாலியா இருந்தே. கொஞ்ச நேரம் உன்கிட்ட பணம் இல்லாம போயிடுச்சி. என்ன ஆச்சுன்னு விளைவைப் பார்த்தியா? ஐந்து கிலோ மீட்டர் நடக்கற மாதிரி ஆயிடுச்சு! பணம் கிடைச்சா வீண் செலவு பண்ணாதே. பள்ளி சஞ்சாய்காவுல போட்டு வை. பணமும் பத்திரமா இருக்கும்; வட்டியும் கிடைக்கும். அவசியமான சந்தர்ப்பத்துல பணத்தைத் திரும்ப எடுத்துக்கலாம்.



நண்பர்களுக்கு செலவு பண்ண வேணாம்னு சொல்லலை. ஆனா அதுக்கும் ஒரு அளவு வைச்சுக்க. அதிகமா செலவு பண்ணாதே. பணத்தின் அருமையை நீ உணரணும்னுதான் இந்தத் திட்டத்தைப் போட்டேன். உன்னை நடக்க வச்சேன். நான் செஞ்சது தப்புன்னா என்னை மன்னிச்சிடு," என்று கலங்கிய குரலில் கார்த்திக் சொன்னான்.

முரளியின் கண்களில் கண்ணீர்!

"கார்த்திக்... சத்தியமா நீதாண்டா என் உயிர்த் தோழன். நான் திருந்திட்டேன். பணத்தின் அருமையைப் புரிஞ்சுக்கிட்டேன். இனிமே வீண் செலவு பண்ண மாட்டேன். நல்ல நண்பர்கள் கிட்டதான் நட்பு வைச்சுக்கு வேன். என்னைத் திருத்தின உனக்கு ரொம்ப நன்றி" - கரகரத்த குரலில் முரளி சொன்னான்.





உங்க சொத்தா?

சுறுசுறுப்பான காலை நேரம். புத்தகப் பையைத் தோளில் மாட்டியபடி தன் வீட்டு வாசலுக்கு விசாகன் வருவதற்கும், அவனுடைய நண்பன் சசி அவனுடன் வந்து சேர்ந்து கொள்வதற்கும் சரியாக இருந்தது. அன்று அவர்களுக்கு தமிழ் மாதாந்திரத் தேர்வு. 9-ஆம் வகுப்பில் படிக்கும் அவர்கள் இருவரும் அதைப் பற்றிப் பேசியபடி அடுத்த தெருவைக் கடந்து அதற்கடுத்த தெருவில் நுழைந்தனர்.

சேற்றில் மிதியடி மாட்டிக் கொள்வது போன்ற உணர்வு தோன்றிய விசாகனின் பார்வை தரையை நோக்கிச் சென்றது. ஆம்! அந்த தெருவில் குழாய் சரியாக மூடப்படாததால் தண்ணீர் அருவி போலக் கொட்டிக் கொண்டிருந்தது. '' சசி! குழாய மூடிவிட்டு வரேன். இதைப் பிடி'' என்று புத்தகப் பையை அவனிடம் கொடுத்து விட்டு கால்களை ஜாக்கிரதையாக வைத்தபடி குழாய்க்கு அருகில் சென்றான். தன் பலம் முழுவதையும் திரட்டி குழாயை மூடினான். சில வினாடிகளில் தண்ணீர் கொட்டுவது நின்று விட்டது.

''ரோடுலே போறவங்க, வரவங்க எல்லாம் இந்தக் காட்சியைக் கண்டும் காணம போறாங்க. என்னவோ உங்க வீட்டு சொத்து பாழாப் போற மாதிரி இல்லே பதறி அடிச்சுகிட்டு ஓடிப் போய் நிறுத்தரே?''. சசி தான் கேட்டான்.

''என்ன சசி இப்படிச் சொல்லிட்டே? இது பொதுச் சொத்தாக இருந்தாலும் இது நம்ம சொத்துத்தான். தண்ணிக்கு நாமதான் வரி கட்டறோம். தண்ணிய அனாவசியமா இப்படி வீணாக்கக்கூடாதுன்னு நம்ப ஆசிரியர் சொன்னதை மறந்துட்டியா? உங்க வீட்டுல குழாயிலே தண்ணீர் கொட்டிக் கொண்டு இருந்தா நீ மூடாம வருவியா?''

''எங்க வீட்லே மூடுவேன். இங்கே மூடாட்டி என்ன?''

''என்னவா? தண்ணி வந்திருக்கிற பகுதி எல்லாம் பாரு. ஒரே சேறா இருக்கு. கொஞ்சம் கவனக்குறைவா யாராவது காலை வச்சாங்கன்னா அவங்க அப்படியே சறுக்கி விழுந்து கைய காலை ஒடிச்சுக்குவாங்க. ஒவ்வொரு ஊர்லே நம்ப ஜனங்கள் தண்ணிக்கு கஷ்டப் படறப்போ... இப்படி வீணாக ஓட விடறது நல்ல பண்புள்ள செயலா?

''நீ பெரிய சமூக சீர்திருத்தவாதிதாண்டா! சரி... சரி... இந்தா பையைப் பிடி... பள்ளிக் கூடத்துக்கு நேரமாயிடுத்து''



பதில் பேசாது விசாகன் தன் பையை வாங்கிக் கொண்டான்.

மறுநாள் மாலை. வழக்கத்தைவிட ஒரு மணி நேரம் முன்னதாகவே பள்ளி மணி கடகடவென்று அடிக்கப்பட்டது. காரணம் மறு நாள் குழந்தைகளுக்கு இலவச தடுப்பு ஊசி போட அந்தப் பள்ளியைத்தான் தேர்ந்தெடுத்திருந்தார்கள். அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யத்தான் மாணவர்களைச் சீக்கிரமாகச் செல்ல வைக்க மணி அடிக்கப்பட்டது. மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தபடி மாணவர்கள் வேகமாகப் பள்ளியை விட்டு வெளியேறலாயினர்.

டெஸ்கிலிருந்து தன் புத்தகங்களைத் தன் பையில் போட்டுக் கொண்டிருந்த விசாகன் தடால் என்று டெஸ்க் கீழே விழும் ஓசையைக் கேட்டு, ஒலி வந்த திக்கை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான்.

சசிதான் தான் உட்காரும் டெஸ்க்கிற்கு அடுத்த டெஸ்கைத் தள்ளிவிட்டு அதை நிமிர்த்தி வைக்க முயன்று கொண்டிருந்தான்.

'சசி... என்னடா இது''

''பார்த்தா தெரியலை? டெஸ்கைத் தள்ளி விட்டேன். அதோட காலைப் பாரு... லொட லொடன்னு ஆடிகிட்டிருக்கு''

''எதுக்கு டெஸ்கை இப்படி தள்ளிப் போட்டு உடைக்கறே?''

''சீக்கிரம் வீட்டுக்கு விட்டுட்டாங்க இல்லே...? அந்த குஷியிலே அந்த டெஸ்கை மெதுவாகத் தள்ளினேன். நொண்டிக் குதிரை மாதிரி விழுந்திடுச்சு!''

''இத்தனை நாளா ஒவ்வொரு வகுப்பிலும் டெஸ்கின் மேலே உன்னோட இன்ஷியலைத்தான் பிளேடாலே செதுக்கிட்டிருந்தே. உன்னைப் பார்த்து மற்ற மாணவர்களும் டெஸ்கின் மீது அவங்க பேரையும் செதுக்கிட்டிருக்காங்க.... இன்னிக்கு டெஸ்கோட காலையே ரிப்பேர் செஞ்சிருக்கே!''

''செஞ்சா என்ன விசாகன்? இப்ப நாம உட்கார டெஸ்க் எல்லாம் புத்தம் புதிசாவா இருக்கு? பாதிக்கு மேலே ஆடிக்கிட்டுத்தானே இருக்கு?''

'அடுத்த வருஷம் இந்த வகுப்பிலே உட்காரப் போகிறவங்களுக்கு இன்னும் கஷ்டமா இருக்காதா?''

''நல்லா கஷ்டப்படட்டும். அதால நமக்கென்னா நஷ்டம்?''

''இப்படி எல்லாம் பேசாதே சசி, உங்க வீட்டு டேபிளை, இப்படிப் போட்டு உடைச்சா உங்கப்பா சும்மாவா இருப்பார்? இது நம்ம பள்ளிக்கூடம். இது நம்ம சொத்து. இதை நாமதான் ஜாக்கிரதையாக பாதுகாக்கணும்.''

''ஸ்டாப்...ஸ்டாப்... பள்ளிக்கூடப் ப்யூன் அதோ ஒவ்வொரு அறையாக சாத்திக்கிட்டிருக்காரு... சீக்கிரம் கிளம்பு''

''நேத்திக்கு சாயந்திரம் ரோடு போடறதுக்காக குவிச்சு வச்சிருக்கிற சரளைக்கற்களை கண்டபடி வீசி எறிஞ்சு விளையாடிண்டிருந்தே. மக்கள் நடக்கற பாதைல அந்த சரளைக் கற்களைத் தள்ளிவிட்டுக் கொண்டிருந்தே. பொதுச் சொத்தை இப்படிப் பாழாக்குறதாலே பொதுமக்களுக்குத்தான்

தா.ஜானகி

துன்பம்னு நீ என்னிக்குத்தான் உணரப் போறியோ...? சரி... சரி...வா''. பையைத் தோளில் மாட்டியபடி கிளம்பினார்கள் இருவரும்.

ஒரு வாரம் ஓடி மறைந்தது. அன்று திங்கள் கிழமை. ஏதோ பந்த் என்று சொல்லப்பட்டதால் பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

அன்று மாலை ஏழு இருக்கும். சசியின்

அம்மாவுக்குத் தலைவலி. பேசாமல் படுத்துக் கொண்டு விட்டாள். வீட்டில் கைவசம் எந்த மருந்தும் இல்லை. எனவே சசியின் தந்தை அவனைக் கூப்பிட்டு, "சசி, மத்தியானம் நடந்த கலாட்டாவாலே மெடிக்கல் ஷாப்புலேந்து எல்லாக் கடையையும் மூடிட்டாங்க. இனிமே கடைகளை எல்லாம் நாளைக்குத்தான் திறப்பாங்க போலிருக்கு. அதனால நம்ப டாக்டர்கிட்டே போய் விஷயத்தைச் சொல்லி அம்மாவுக்கு மருந்து வாங்கிட்டுவா... டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டு போ... ஜாக்கிரதையா போயிட்டு வா" என்று கூறினார். தந்தை சொன்ன படி கடை வீதியிலிருக்கும் டாக்டர் வீட்டிற்கு ஜாக்கிரதையாகத்தான் போனான் சசி. ஆனால் திரும்பி வரும்பொழுதுதான்......

செவ்வாய்க்கிழமை காலை. மணி எட்டு இருக்கும். படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து உட்கார்ந்தான் சசி. அவனோட வலது காலில் கட்டுப் போடப்பட்டிருந்தாலும் வலியும் எரிச்சலும் இருக்கத்தான் செய்தது.

"சசி! உடம்பு எப்படி இருக்கு? கால் கட்டை இன்னும் ஒரு வாரத்திலே அவிழ்த்துடலாம்... அதற்குப் பிறகு பள்ளிக்குப் போகலாம்னு டாக்டர் சொன்னாரு" என்று அப்பொழுதுதான் வீட்டுக்குள் நுழைந்த விசாகன் சொல்லிக்கொண்டே அவன் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

"நான் நேத்திக்கு ராத்திரி எங்கம்மாவுக்கு டாக்டர்கிட்டேயிருந்து மருந்து வாங்கிட்டுத் திரும்பி வரும்போது காலிலே கண்ணாடி குத்தி... கற்கள் மேல விழுந்து... மயக்கமே வர நிலையிலே இருந்தேன். அந்தச் சமயத்திலே நீ அங்கு வந்து... என்னைக் காப்பாற்றினே... இந்த உதவிய என்னிக்குமே என்னால மறக்க முடியாதுடா" என்றான் சசி உணர்ச்சிப் பெருக்குடன்.

"ஆமாண்டா விசாக்... சமயத்திலே நீ காப்பாத்தாம இருந்திருந்தா... அவனுக்கு எத்தனை ரத்தம் இன்னும் வெளியேறியிருக்குமோ...? அந்த முருகன்தான் உன்னை அனுப்பியிருக்காரு... இந்தா... காப்பியே குடி" என்று காப்பியை அவனிடம் கொடுத்துவிட்டு சசியின் அன்னை சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

"நேத்து ராத்திரி முருகன் கோவிலுக்குப் போய்விட்டு வெளியே வரும்போது யாரோ வேதனையால கத்தறதைக் கேட்டு ஓடி வந்தேன். கிட்ட வந்து பார்த்தபிறகுதான் தெரிஞ்சது அது நீன்னு" என்றான் விசாகன்.

"ஆமாம் விசாக். நேத்திக்கு பந்துன்னு சொல்லி பாதி கடையை அடைச்சிருந்தாங்க. மீதி பாதி கடைய அடைக்கச்சொல்லி ஒரு வன்முறை கும்பல் என்னமா கடைவீதியை சூறையாடினாங்க தெரியுமா? ஒவ்வொரு தெருவா வந்து எப்படி சோடா பாட்டிலை உடைச்சு ஆர்ப்பாட்டம் பண்ணினாங்க! முருகன் கோவில் தெருவுக்கு வந்து அங்கு ரோடு போடக் குவிச்சிருந்த சரளைக் கற்களை எடுத்து தெரு லைட்டை எல்லாம் நொறுக்கிட்டாங்க. இதை எல்லாம் பார்த்தப்போ மனசு என்னமா வேதனைப் பட்டது தெரியுமா?"- இது சசி.


விசாகன் பதில் பேசாது கேட்டுக் கொண்டிருந்தான். மறுபடி சசியேதான் ஆரம்பித்தான்.

"விசாக். நீ அடிக்கடி சொல்வியே... நாம செலுத்தும் வரிப் பணத்தைக் கொண்டுதான் நமது அரசு..... நமக்காகப் பல நல்ல திட்டங்களைப் போடுகிறது. அதனால அரசு சொத்து பொதுமக்கள் சொத்தாகும். நம்ப சொத்தை நாம எப்படிப் பாதுகாக்கிறமோ அதே மாதிரி பொதுச்சொத்தையும் பாதுகாக்கணும். பொதுச்சொத்துக்குத் தீமை ஏற்பட்டா அதாலே பாதிக்கப்படறவங்க பொதுமக்கள்தான்னு சொல்லுவியே, அதோட உண்மையான அர்த்தத்தை இப்பத்தான் நான் உணர்ந்துகிட்டேன். இனிமே ரோடுக்கு குறுக்காலே பாட்டிலைப் போட்டு உடைக்க மாட்டேன். கோவில் சுவரில் எல்லாம் எண்ணெயைத் தடவ மாட்டேன்."

"நல்ல முடிவு சசி. இத்தனை நேரம் நீங்க பேசி கிட்டு இருந்ததைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். உங்களைப் போன்ற மாணவங்கதான் வருங்கால இந்தியாவை ஆளப் போறவங்க. அதனால மாணவர்களாகிய நீங்க உங்க பொருள் மாதிரி பள்ளியின் சொத்தை, ஊர் சொத்தை, நாட்டு சொத்தை, நாட்டுச் செல்வத்தைப் பாதுகாக்கணும். உங்க எதிர்ப்பைத் தெரிவிக்கணும்னா அராஜகச் செயல்லே இறங்காம கருத்தோடும், கவனத்தோடு செயல்படணும். செய்வீங்களா?" என்றார் அங்கு நின்று கொண்டிருந்த சசியின் தந்தை.

"கட்டாயம் பாதுகாப்போம்" என்றனர் நண்பர்கள் இருவரும் ஒரே குரலில்.

"அந்த பாம்பு ஏன் ரொம்ப சோகமா இருக்கு?"
"படம் எடுத்து நஷ்டமாயிடுத்தாம்!"



எத்தனை பொருள்கள்?

— போட்டி முடிவு

இந்தப் போட்டி, பொருள்களின் எண்ணிக்கையை அதிகமாக்கிக் காட்ட, விரும்பியபடி ரீல் விட, வாசகர்களுக்கு நல்ல வாய்ப்புத் தந்திருக்கிறது! திருச்சியில் இருந்து ஒரு தம்பி, கார், முன்விளக்கு-2, சக்கரம்-2, சீட் என்றும் சிதம்பரத்தில் இருந்து ஒரு தங்கை தவில்காரர், அவர் தவில், குச்சி, தொங்கும் வார், கால்கள், துண்டு, இடுப்பு வேட்டி, அவர் தலைமுடி என்றும் இஷ்டத்துக்கு ரீல் விட்டிருக்கிறார்கள்! சென்னை 4-ல் இருந்து ஒரு தம்பி, வீடு, ஓடு, ஜன்னல், கம்பம், படிக்கட்டு, கூரை, மாடி, கைப்பிடிச்சுவர், வாசற்படி என்று ஏகமாக எழுதியிருக்கிறான்! ஒரு தம்பி (மதுரை) இந்த மாதிரி 270 பொருள்களை எழுதியிருக்கிறான்! எல்லாவற்றையும் படித்து வகைப்படுத்துவது மிகப் பெரிய காரியமாக இருந்தாலும் சுவையான அனுபவமாக இருந்தது.

நாங்கள் குறித்து வைத்துள்ள சரியான தொகுப்பு 35 பொருள்கள். இதோ அவை; :

1. கோபுரம், 2. மதில்சுவர், 3. தெரு விளக்குகள் (பல்பு கம்பம் உட்பட!) இரண்டு 4. வீடுகள் (கூரை வீடு, சரிவு வீடு, கூரை, மாடி, கைப்பிடிச் சுவர், சன்னல், திண்ணை, படிக்கட்டு உட்பட!) நான்கு, 5. மரம் (தண்டு, கிளைகள் உட்பட!), 6. டி.வி. ஆன்டனா (கம்பம், குறுக்குக் கம்பி உட்பட!) 7. பன்னீர் செம்பு, 8. சந்தனக் கிண்ணம், 9. குங்குமச் சிமிழ் அல்லது கிண்ணம், 10. அடுக்கு அல்லது வாளி தேங்காய்களுடன், 11. வாழைப் பழச்சீப்பு, 12. மாம்பழங்கள், 13. தட்டுகள் இரண்டு, 14. விளக்கு தூக்கிகள் (குறத்தி உட்பட) மூன்று பேர், 15. நாதஸ்வரக்காரர் (நாதஸ்வரம், அவரது ஜிப்பா, துண்டு, வேட்டி உட்பட), 16. ஒத்து ஊதி (அவர் ஜிப்பா ஒத்து உட்பட), 17. தவில்காரர் (தவில், அடிக்கும் குச்சி, வேட்டி, மேல்வேட்டி, இடுப்புத் துண்டு, தவில் தொங்கும் வார் உட்பட), 18. சிறுவர் சிறுமியர் (பூச்செண்டு தருபவள், பட்டாசு வெடிப்பவன், ஐஸ் கிரீம் சுவைப்பவன், பலூன் கேட்பவள், விசிறி வீசுபவள் உட்பட) ஐந்து பேர், 19. பாப்பாக்கள் (திண்ணையில் இருப்பது, குறத்தி இடுப்பில், பலூன் பிடித்திருப்பது, பெண்மணி இடுப்பில் இருப்பது உட்பட) நான்கு, 20. பலூன், 21. ஐஸ்கிரீம், 22. விசிறி, 23. பூச்செண்டு, 24. பட்டாஸ் சரம், 25. பட்டாஸ் வத்தி, 26. மாப்பிள்ளை, 27. டிரைவர், 28. கார், 29. மாலை, 30. காரின் தோரணம், 31. குரங்காட்டி, 32. குரங்கு, 33. தொங்கும் குவளை, 34. கால்காப்பு, 35. குப்பைத் தொட்டி, 36. உடைந்த பானை, 37. உடைந்த பாட்டில், 38. நாய், 39. இவற்றில் வராத பெரியவர்கள் (இவர்களது மூக்குக் கண்ணாடி, வளை, சங்கிலி உட்பட) பதினெட்டுப் பேர்.

இவைகளை விடாமல் குறித்துள்ளவர்களில் இருந்து குலுக்கல் முறையில் பரிசுக்குரியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. எஸ். நிரஞ்சனா, நீடாமங்கலம். 2. பார்வதி கணபதி, பூனா-15, 3. டி. கார்த்திக், மன்னார்குடி, 4. க. உமேஷ் சுந்தர செல்லப்பா, பழவூர், 5. பா. ஜெயக்குமார், வந்தவாசி, 6. சிவசெல்வி, நெய்யூர், குமரி மாவட்டம், 7. ஜி. லட்சுமிகுமாரி, விருதுநகர், 8. பி. அகமத் ஆசிக், வில்பட்டி பிரிவு, கொடைக்கானல், 9. திவ்யா சாய்நாத், பூனா -37, 10. செந்தில்ராஜா, மல்லசமுத்திரம். 11. கே. ஈஸ்வரி, திருவனந்தபுரம், 12. இ. அன்பழகன், புதுச்சேரி - 10, 13. கா.சசிகலா சரோஜினி, கோட்டுச்சேரி, 14. எம். சித்ராதேவி, தூத்துக்குடி - 2, 15. வ. முகமது அல்தாப் ஹுசைன், வாழூர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

சூப்பர் டூப்பர்!

✉ தாயன்பின் சிறப்பை எத்தனை சுவையாக எடுத்துக்காட்டி விட்டார் கூத்தபிரான் "பாதியில் நின்ற பந்தயம்" கதையில்! - வெங்கம்பட்டி சு. தினகரலிங்கம், சாத்தூர் மா. கண்ணன், விருத்தாசலம் வி. பிரபாகர், வி. பிரசன்னா, பவித்திரமாணிக்கம் டி. முருகேசன், சென்னை - 15. ஜி.கே. வெண்ணிலா.

✉ யானையாரின் சிரசாசனத்தைப் பிரேம் போட்டு மாட்டி விட்டேன். எப்படி சார் எடுத்தீர்கள் புகைப்படத்தை! - திண்டுக்கல் வி. முத்து வேல், சாத்தூர் வி. மகாதேவன், லால்குடி வா. மகேஷ், லால்குடி என். அருண்.

✉ வேண்டுகோளை ஏற்று லேபிள்களை வெளியிட்டமைக்கு நன்றி. கோகுலம் லேபில்கள் வழக்கப்படி வித்தியாசமாக இருந்தன. - வழுத்தூர். சு. மாலதி, எலமனூர் கரு. முத்தையா, நாமக்கல் எம். சக்திவேல், திருச்செங்கோடு இரா. அ. தென்றல் நிலவன், விருத்தாசலம் வி. பிரபாகர்.

✉ 'யானையாருக்குத் துலாபாரம்' யாருமே கற்பனை பண்ணாத கதை! குழந்தைகளை மட்டும் அல்ல, பெரியவர்களையும், எல்லா நாட்டவர்களையும் ஈர்க்கும் கதை. எழுதியவர் பெயரைக் காணோமே சார்! - வேலூர். ரா. சின்னசாமி, தேனூர் மா. சித்தராயன், நல்லாம்பூண்டி வி. பெருமாள்சாமி, கபிஸ்தலம் வினோத் பாபு, சின்னசேலம் இரா. பிரசன்னகுமார்.

✉ எங்கள் தோட்டத்தில் வந்து உட்காரும் பறவையை மரங்கொத்தியோ, மீன் கொத்தியோ என்று எண்ணினேன். இப்பொழுதுதான் அது கொண்டலாத்தி என்பது தெரிந்தது. கௌரவ ஆசிரியரின் படைப்பு பயனுள்ளது! - சின்ன சேலம். ஆர். கண்ணபிரான், திருக் கழுக்குன்றம் வெ. புல்லாண்டவன், தினகரன் பேட்டை வா. கலைமான், சின்னசேலம் ஆர். பிரசன்ன குமார், பவித்திரமாணிக்கம் டி. முருகேசன், கபிஸ்தலம் ஆர். இரவிகுலரகுவர்மன், பாண்டி வி. துரைமாணிக்கம், மேலப்பாதி என். நாகராஜன், சென்னை - 15 ஜி.கே. அசோக், விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ புவனா விடைபெறுவது தவிர்க்க முடியாதது. சாட்பீட்கித் ஏன் விடைபெறுகிறார்கள்? மறுபடி வரச் சொல்லுங்கள் சார். - சாத்தூர் வா. கணேஷ், சிந்துபூந்துருத்தி நா. செங்கோட்டையன், வழுதூர் சி. விசாலாட்சி, தொட்டபாளையம் கி. எல்லம்மன், மதுரை ரா. ஹரி, கோபி, ப்ரீத்தி, கபிஸ்தலம் ஆர். இரவிகுல ரகுவர்மன், சோழன்மாளிகை கோ. அனந்தன், பவித்திரமாணிக்கம் தி. இளங்கோவன், கோவை. ஜி. தீபிகா, சேலம் - 5 பி. இந்திராதேவி.

✉ "பூமாவின் வீணை" படக்கதை சூப்பர்! கருத்தும், அமைப்பும், படங்களும் பிரமாதம்! - அருப்புக்கோட்டை ம. இராஜ்குமார், விருத்தாசலம் வி. பிரபாகர் ஆர். பிரசன்னா, மேலப்பாதி என். ராஜி, பரங்கிப்பேட்டை காசி. என். நடராஜன், கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், கபிஸ்தலம் என். வினோத்பாபு, பவித்ரமாணிக்கம் வி. மனோகரன், திருவண்ணாமலை என். உமாதேவி, கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், மேலப்பாதி எஸ். நாகராஜன், பொன்னேரி வி. நித்யா உத்ரா, பவித்ர மாணிக்கம் டி. முருகேசன், கருமத்தம்பட்டி இரா. அருண்பிரகாஷ்.

✉ புவனா மனதை நெகிழவைத்த பாத்திரம். தொடர்கதையின் அமைப்பும், இதழ் தோறும் அதற்கு உயிரூட்டி நடமாட வைத்த ம.செ. அவர்களின் கைவண்ணமும் நெஞ்சில் நிறைவை ஊட்டின. - சோழவந்தான் மா. பொன்வேல், திண்டிவனம், வா. மதுராம்பாள், எல்லைப்பட்டி வி. தனசேகரன், குறிஞ்சி பாளையம் தூ. கருணாகரன், மதுரை ரா. ஹரி கோபி, பிரீத்தி, சோழன் மாளிகை சோ. சாந்தி, பரங்கிப்பேட்டை காசி. கே. நடராஜன், கபிஸ்தலம் ஜி. சுரேஷ்குமார், ஆர். இரவிவர்மன் மற்றும் பலர்.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

குடையை நானே பிடிச்சாலும்
கோபம் கொள்ளாப் பிள்ளையார்!



REGISTERED NO.TN/MS (S) 281 Registered as Newspaper in Srilanka
Licensed to post without prepayment under licence No. TN/MS (S) 14

பசுமை விதைத்து, வளமை பெருக்கும் ஈஸ்வர்



ஈஸ்வர் குரோடெக் லிட்., மதுரைக்கு அருகில் மிகப் பெரிய பசுமையான சோலையை (சுமார் 5000 ஏக்கர் நிலப்பரப்பு) உருவாக்கி வரும் முன்னணி தொழில் நிறுவனம்.

இந்த சோலையில் உருவாகும் தேக்கு, காய்கறி மற்றும் பழத் தோட்டங்கள் பசுமை பெருக்கி வளமை பெருக்க வழி வகுப்பவை.

சிறந்த வேளாண் நிபுணர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்கள் இந்த ஈஸ்வர் சோலையை மிகச் சிறந்த லாபத்திற்கு இயக்குவார்கள்.

மேலும், தரிசு நிலங்களை பொன் விளையும் பூமியாக்கும் டீ-சல், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் விதைகளை ஈஸ்வர் தயாரிக்கிறது.

ஈஸ்வர்-இன் பொன் விளையும் திட்டங்கள்:

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ. 25,000/- அல்லது ரூ. 250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச. அடி நிலம் 24 தேக்கு மரங்கள் 2 ஒட்டு மா 2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ. 10 லட்சம் ரூ. 24 லட்சம் ரூ. 50,000 ரூ. 50,000

20 ஆண்டுகளில் ரூ. 35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச. அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது. • அற்புத தொழில்நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும். • பண்ணை வீடுகளும் கட்டிக்கொள்ளலாம்.

ரூ. 100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன.

ESWAR GROW-TEK LTD
287, West Masi Street, Madurai 625 001. Phone: 540305, 540843.
Fax : 0452-540305. Telex : 0445-478-AGRI-IN.

பசுமை வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

எங்கள் கம்பெனி (ஈஸ்வர்), சென்னையை சார்ந்த ஈஸ்வரி குரூப் ஆப் கம்பெனிகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறோம்.